யும் அடையும்படி கருணையால் செய்யவேண்டும். அவரோ கருணைக்கடல். (25½) அல்லது ஈசனை பரமசிவன் மன்மதனை மறுபடியும் பிழைக்கச் செய்யவேண்டும். (26) அப்பரமேச்வரன் ஒன்றை செய்வதற்கும் செய்யாமலிருப்பதற்கும் ஒன்றை மற்றொன்றாக மாற்றுவதற்கும் வல்லமையுள்ளவர். (27) இவ்வாறாக ரதிதேவி மார்பில் அடித்துக்கொண்டு, அழகிய குரலில் அழும்போது அவளது ஒப்பாரிச் சொற்களைக் கேட்ட சிவன், குலத்தை சந்தோஷிக்கச்செய்யும் நந்தியைப் பார்த்து இதென்னவென்று கேழ்க்க, அப்போது நந்திதேவன் வணக்கத்துடன் தெரிவித்ததாவது. (28-29) ஓ பரமசிவனே, இப்போது மன்மதன் தன் மனைவியுடன், தேவர்களால் ஏவப்பட்டவனாய், மூவுலகமும் சரணமடையத் தகுந்த தங்களோடு யுத்தம் செய்ய வந்தான். (30) ஓ சங்கர, அவன் ப்ரபுவைக் கண்ட உடன் தனது கெட்ட செயலாலேயே எரிக்கப்பட்டான்; பிறகு அந்த ரதிதேவியானவள், அந்த துக்கத்தினால் புலம்பி அழுகிறாள். (31) ரதி துயரமுற்று அழுகின்றாள். கருணைக்கடலாகிய தாங்கள் தயவுபுரியவேண்டும் என்று சொல்லி பரமசிவனுக்கு, அவளை நந்திகேச்வரர் காண்பித்தார். (32) அப்பொழுது அவள் தலைக் கூந்தலை கட்டிக் கொள்ளாமலும், நடுக்கத்துடனும், கண்களிலிருந்து ஜலத்தை வடித்துக்கொண்டும், பிதாவும் உலகிற்குப் பதியுமான ஸ்ரீ பரமசிவனை நமஸ்கரித்து, (33) வாடின முகமுள்ளவளாகவும், புழுதி படிந்த சரீரமுள்ளவளாகவும், அடிக்கடி கீழே விழுகின்றவளாயும் இருந்தாள். அவ்வாறாக உள்ள ரதியை பரமசிவன் கண்டு மிக கருணைகொண்டார். (34) ஸனகாதிகள் பார்த்துக்கொண்டிருக்கும் போது, புன்சிரிப்புடன் பரமசிவன் அப்போது அந்த ரதியை பார்த்து, ஓ குழந்தாய், துக்கத்தை அடையாதே; உனது கணவன், எனக்கு துரோகம் செய்கிறான் எனக் கூறினார். (35) அவ்விதம் அவன் துரோகம் செய்தபோதிலும். நல்லொழுக்கமுள்ள ஓ ரதியே, உனது கற்பினால், நான் சந்தோஷமடைந்துள்ளேன், உனது கணவனை உயிர்ப்பிக்கிறேன், சிறிது காலம் பொறுத்துக் கொள். (36) இம்மாதிரி அவளை சமாதானம் செய்து, மேலும் ஸனகாதி முனீச்வரர்களைப் பார்த்து,

सांत्वयित्वेति तां भूयः सनकादिमुनींश्च तान् । भावयिध्वं सदा यूयं एवं मामधुनाह्यहम् ॥ ३७
गच्छामि देवकार्यार्थं इत्युक्त्वान्तर्दधे शिवः । एतस्मिन्नंतरे देवी पार्वती जगदंबिका ॥ ३८
तप उग्रं समास्थाय दध्यौ शिवमगात्मजा । तेनाकृष्टस्सतपसा भक्तिं तस्याः परीक्षयन् ॥ ३९
ययौ जगदधीशानः तस्या आश्रममश्रमः । दृढजीर्णं वपुर्वैप्रं पलितापघनं घनम् ॥ ४०
सिराझर्झरितात्मांघ्रियुगळं प्रस्खलत्पदम् । अत्युन्नतसुकक्ष्योरु च्युतवासोविलग्नकम् ॥ ४१
निम्ननाभीह्रदलसत् पिचण्डिल वलित्रयम् । उन्नतोरोलसल्लोल कंपमानपयोधरम् ॥ ४२
ब्रह्मसूत्रजटाकीर्णं लताभिरिव भूधरम् । धवलश्मश्रुलंबिभ्रूवदनं सितपक्ष्मळम् ॥ ४३
शारदांभोद संवीत चन्द्रमण्डल सन्निभम् । सुनासंच सुकर्णंच्च विदन्तास्यं चलच्छदम् ॥ ४४
अतिस्वल्पशिखं चारु पलितश्वेतमूर्धजम् । ईदृशं वपुरास्थाय भस्मपाण्डुरविग्रहः ॥ ४५
त्रिपुण्ड्रावळिभिर्दीप्तो रुद्राक्षस्रगलंकृतः । अवलंब्य दृढां यष्टिं वैणवीममलाशयः ॥ ४६
अधीयानस्सदा वेदं अत्युन्नतकळेबरः । वयोतिपात वातार्तकटिबाहूरुसन्धिकः ॥ ४७

ஸாந்த்வயித்வேதி தாம் பூய: ஸனகாதி முனீம்ச்சதான் |
பாவயித்வம் ஸதா யூயம் ஏவம் மாமதுனாஹ்யஹம் || 37
கச்சாமி தேவகார்யார்த்தம் இத்யுக்த்வாந்தர்ததே சிவ: |
ஏதஸ்மின்னந்தரே தேவீ பார்வதீ ஜகதம்பிகா || 38
தப உக்ரம் ஸமாஸ்தாய தத்யௌ சிவமகாத்மஜா |
தேனாக்ருஷ்டஸ்ஸதபஸா பக்திம் தஸ்யா: பரீக்ஷயன் || 39
யயௌ ஜகததீசான: தஸ்யா ஆச்ரமமச்ரம: | ததஜ்ஜீர்ணம் வபுர்வைப்ரம் பலிதாபகனம் கனம் || 40
ஸிராஜர்ஜ்ஜரிதாத்மாங்க்ரியுகளம் ப்ரஸ்கலத்பதம் |
அத்யுன்னத ஸுகக்ஷ்யோரு ச்யுதவாஸோ விலக்னகம் || 41
நிம்னநாபீஹ்ருதலஸத் பிசண்டில வலித்ரயம் | உன்னதோரோலஸல்லோல கம்பமான பயோதரம் || 42
ப்ரஹ்மஸூத்ரஜடாகீர்ணம் லதாபிரிவ பூதரம் | தவலச்மச்ருலம்பிப்ரூவதனம் ஸிதபக்ஷ்மளம் || 43
சாரதாம்போத ஸம்வித சந்த்ரமண்டல ஸன்னிபம் |
ஸுநாஸம்ச ஸுகர்ணம்ச விதந்தாஸ்யம் சலச்சதம் || 44
அதிஸ்வல்பசிகம் சாரு பலிதச்வேத மூர்த்தஜம் | ஈத்ருசம் வபுராஸ்தாய பஸ்மபாண்டுரவிக்ரஹ: || 45
த்ரிபுண்ட்ராவளிபிர்தீப்த: ருத்ராக்ஷஸ்ரகலங்க்ருத: | அவலம்ப்ய த்ருடாம் யஷ்டிம் வைணவீமமலாசய: 46
அதீயானஸ்ஸதா வேதம் அத்யுன்னதகளேபர: | வயோதிபாதவாதார்த்த கடிபாஹூருஸந்திக: || 47

நீங்கள் இவ்விதம் எப்பொழுதும் என்னை த்யானம் செய்யுங்கள். (37) தேவகார்ய நிமித்தம் நான் செல்கிறேன் எனச் சொல்லிவிட்டு மறைந்தார். இந்த சமயத்தில் உலகிற்குத் தாயும், பர்வதராஜகுமாரியும் தேவியுமான பார்வதியானவள், கடும்தவம் செய்துகொண்டு பரமசிவனை த்யானம் செய்தாள்.(38½) அவளது தவத்தினால், உலகிற்கு ஈசனான பரமசிவன் இழுக்கப்பட்டு, அத்தவத்தை பரீக்ஷை செய்வதற்காக, அவளது ஆச்ரமத்துக்குச் சிரமமின்றி சென்றார். (39½) கிழத்தன்மைக்கு தகுந்த வெண்மையும், பெரிதும் ஜீர்ணமுமான அந்தண சரீரத்தை, தரித்துக் கொண்டு சென்றார். (40) நரம்புகள் சிதறி பின்னிக்கொண்ட தனது இரண்டு கால்களை உடையதாகவும், இடறுகின்ற அடி வைத்தலையும், உயரக் கட்டப்பட்ட கச்சம் நழுவிவிழுந்ததுடையுடனும், (41) ஓடை போன்ற ஆழமான நாபியுடன் கூடிய பருத்த தொந்தியில் பிரகாசிக்கின்ற மூன்று மடிப்புகளை உடையதும், உயர்ந்த மார்பில் பிரகாசிக்கின்றதும், அசைகின்றதும், தொங்குகின்றதுமான ஸ்தனங்களுடன் கூடியதும், (42) கொடிகளால் சூழப்பட்ட மலைபோல் பூணூல்களாலும், ஜடைகளாலும் சூழப்பட்டதும், வெளுத்த மீசையை உடையதும், தொங்குகின்ற புருவத்துடன் கூடிய முகத்தை உடையதும், வெளுத்த மயிர்களோடு கூடிய இமைகளுள்ளதும், சரத்கால மேகங்களால் சூழப்பட்ட சந்திரமண்டலத்துக்கு ஒப்பானதும், அழகிய மூக்குள்ளதும், அழகிய காதுகளுள்ளதும், பற்களற்ற வாயை உடையதும், ஆடுகின்ற மேலுதடு உள்ளதும், மிகவும் ஸ்வல்பமான குடுமி உள்ளதும், அழகியதும், நரையினால் வெளுத்த கேசங்களுள்ளதுமான, இம்மாதிரி சரீரத்தை தரித்துக்கொண்டு, விபூதியினால் வெண்மையான சரீரத்தை உடையவரும், விபூதியின் மூன்று பட்டைகளின் வரிசைகளால் பிரகாசிக்கின்றவரும், ருத்ராக்ஷமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், கெட்டியான மூங்கில் தடியை கையில் பிடித்துக் கொண்டவரும், தூயமனமுள்ளவரும், எப்பொழுதும் வேதத்தை ஜபம் செய்கிறவரும், மிகவும் உயர்ந்த

प्रविश्योमाश्रमं वृद्धो मन्दं मन्दगतिः स्मयन् । तां तादृशीं तपस्यन्तीं मुनिष्वपिच योगिषु ॥ ४८
दृष्ट्वा प्रणम्य हृष्टेषु निर्गतेषु शनैःशनैः । लब्धातिथ्येषु सर्वेषु स्वयं च परमेश्वरः ॥ ४९
वृद्ध त्वं वदतां सम्यक् वेदानामर्थमर्थयन् । वृद्धो विवेश शनकैः द्रष्टुकामः किलाद्रिजाम् ॥ ५०
पर्णशालामुमादेव्याः अपर्णायास्सखीजनम् । अपश्यत्तत्र ता वृद्धं पितरं मुनिपुङ्गवम् ॥ ५१
तूर्णं निन्युरुमादेव्याः निशान्तं पत्रनिर्मितम् । प्रत्युद्गम्य तदा देवी पाद्यार्घ्याचमनीयकैः ॥ ५२
भक्त्या दत्तासनावृद्धं उपचारैरुपाचरत् । तालवृन्तानिलैस्तस्य श्रमांबु समुपाहरत् ॥ ५३
परिश्रमं विनीयैव वर्षीयान् क्षणमात्रतः । उमां सवचनं प्रेक्ष्य बभाण मुनिपुंगवः ॥ ५४
आर्ये सुवदनास्वेका त्वं दृष्टा वरवर्णिनी । अहो सर्वानवद्याङ्गी नगराजतपःफलम् ॥ ५५
कच्चित्ते कुशलं भद्रे कच्चित्ते कुशलं तपः । कच्चित्स्वशक्त्या तपसि प्रवृत्तासि वरानने । ५६
शरीरं रक्ष कल्याणि धर्माणामेकसाधनम् । न शरीरं विना लोके किञ्चिदस्ति सुखं शुभे । ५७

ப்ரவிச்யோமாச்ரமம் வ்ருத்த: மந்தம் மந்தகதி: ஸ்மயன் |
தாம் தாத்ருசீம் தபஸ்யந்தீம் முனிஷ்வபி ச யோகிஷு || 48
த்ருஷ்ட்வா ப்ரணம்ய ஹ்ருஷ்டேஷு நிர்கதேஷு சனை:சனை:|
லப்தாதித்யேஷு ஸர்வேஷு ஸ்வயஞ்ச பரமேச்வர: || 49
வ்ருத்த த்வம் வததாம் ஸம்யக் வேதானுமர்த்தமர்த்தயன் |
வ்ருத்தோ விவேச சனகை: த்ரஷ்டுகாம: கிலாத்ரிஜாம் || 50
பர்ணசாலாமுமாதேவ்யா: அபர்ணாயாஸ்ஸகீஜனம்| அபச்யத்தத்ர தா வ்ருத்தம் பிதரம் முனிபுங்கவம் || 51
தூர்ணம் நின்யுருமாதேவ்யா: நிசாந்தம் பத்ரநிர்மிதம் |
ப்ரத்யுத்கம்ய ததா தேவீ பாத்யார்க்யாசமனியகை: || 52
பக்த்யா தத்தாஸனாவ்ருத்தம் உபசாரைருபாசரத்| தாலவ்ருந்தாநிலைஸ்தஸ்ய ச்ரமாம்பு ஸமுபாஹரத் 53
பரிச்ரமம் வினியைவ வர்ஷீயான் க்ஷணமாத்ரத:| உமாம் ஸ வசனம் ப்ரேக்ஷ்ய பபாண முனிபுங்கவ: || 54
ஆர்யே ஸுவதனாஸ்வேகா த்வம் த்ருஷ்டா வரவர்ணினீ |
அஹோ ஸர்வானவத்யாங்கி நகராஜதப:பலம் || 55
கச்சித்தே குசலம் பத்ரே கச்சித்தே குசலம் தப:| கச்சித்ஸ்வசக்த்யா தபஸி ப்ரவ்ருத்தாஸி வரானனே 56
சரீரம் ரக்ஷ கல்யாணி தர்மாணாமேகஸாதனம்| ந சரீரம் வினா லோகே கிஞ்சிதஸ்தி ஸுகம் சுபே || 57

சரீரத்தை உடையவரும், வயது முதிர்ந்ததால் ஏற்பட்ட வாதரோகத்தினால் நடுக்கமுற்ற இடுப்பு, கை, கால்களின் சந்திப்புக்களை உடையவருமான (43-47) ஸ்ரீ பரமசிவன் விருத்த வேஷம் பூண்டு உமையின் ஆச்ரமத்திற்குள் புன்சிரிப்புடன் மெள்ள மெள்ளச் சென்றார். அவ்வாறு தவம் செய்கின்ற ஸ்ரீ அம்பாளை தரிசித்து நமஸ்கரித்து, யோகிகளும் முனீச்வரர்களும், அவளால் செய்யப்பட்ட பூஜையை பெற்றுக்கொண்டு, மெள்ள மெள்ள யாவரும் சந்தோஷத்துடன் வெளிவரும்போது, ‘‘அறிவினால்தான் பெரியவர்’’ என்ற வேதங்களின் பொருளை உபதேசித்துக் கொண்டு, வ்ருத்த வேஷம் பூண்ட தானும் அந்த பார்வதியை, பார்க்க ஆவல் கொண்டு பர்ணசாலைக்குள் மெள்ளச் சென்றார். (48-50) அபர்ணையான உமையின் தோழிகளை அங்கு கண்டார். அந்த தோழிகளும், உலகிற்கு தந்தையும், முனிவர்களுக்கு ஈசனுமான, அந்தக் கிழவரை, கொடிகளால் நிரம்பிய, உமாதேவியின் பர்ணசாலைக்குள் அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது தேவியானவள் எதிர் கொண்டு அழைத்து, பாத்யம், அர்க்யம், ஆசமனீயம், இவற்றால் உபசரித்து, ஆஸனமளித்து கிழவரை பக்தியுடன் பூஜித்தாள். அவள் பனை விசிறியின் காற்றினால், ச்ரமத்தினால் ஏற்பட்ட வேர்வையை போக்கினாள். (51-53) அந்த கிழவரான முனீச்வரர் ச்ரமம் நீங்கியதும், சிறிது நேரத்திற்குப் பிறகு, அம்பாளைப் பார்த்து கூறினார். (54) ஓ தாயே! அழகிய முகம் படைத்த பெண்களுள் நீ சிறந்தவளாகக் காணப்படுகிறாய்! குற்றமற்ற எல்லா அங்கங்களையும் உடையவளே! நீ பர்வதராஜனின் தவத்தின் பயனே ஆவாய். இது ஆச்சர்யம்! (55) மங்களம் வாய்ந்த ஓ தேவி! உனக்கு ஸுகம் கிட்டியதா? உனது தவம் நற்பயனை அளித்ததா? அழகிய முகமுள்ளவளே! உன் சக்திக்குத் தக்கவாறு தவத்தில் முயன்று வருகிறாயா? (56) ஓ கல்யாணி! தர்மங்களுக்கு முக்ய ஸாதனமாகிய சரீரத்தைக் காப்பாற்றிக் கொள். ஓ மங்களம் வாய்ந்தவளே! உலகில் சரீரத்தைத் தவிர ஸுகமளிப்பது வேறு இல்லை. (57)

जलान्यपि स्नानविधिक्षमाण्यपि शुभे वद । इदं सुमहदाश्चर्यं यदध्रुवमिदं वपुः ॥ ५८
दुर्लभं प्राप्य लोकेस्मिन् श्रेयो न कुरुते जनः । त्वं तु राजसुता बालाऽनवद्यांगी सुयौवना ॥ ५९
तथापिच तपोवृद्धा तपसा यश्चकर्थह । धर्मवृद्धासि गिरिजे जगतां जननी ध्रुवम् ॥ ६०
ऋषयस्त्वां नमन्त्यार्ये देवाश्च यमिनांवराः । किं तु मे प्रतिभासित्वं तपसा भावितात्मनः ॥ ६१
कमपि ध्यायसीवात्र पुमांसं प्रतिभातिमे । सत्यं वद महाभागे सत्यसाराहि साधवः ॥ ६२
अनन्यं मांच विध्यत्र त्वांच द्रष्टुमिहागतम् । तदत्र त्यक्तलज्जा त्वं वद सर्वं यथा तथम् ॥ ६३
जरातिभावसंभूतपलितेन मयाऽद्य यत् । पृष्टं तन्नरहस्यं चेत् वद सुभ्रु क्षमं यदि ॥ ६४

इति वाक्यमीशितुरुमापतेरवधार्य नम्रवदना विलोक्य तम् ।
मुहुरेजमानहृदयास्यतेजसा न विवेद सा क्षणममुं स्वमप्यहो ॥ ६५

इतिश्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
संभवकाण्डे द्वादशोऽध्यायः ॥

ஜலாந்யபி ஸ்னானவிதிக்ஷமாண்யபி சுபே வத। இதம் ஸுமஹதாச்சர்யம் யதத்ருவமிதம் வபு: || 58
துர்லபம் ப்ராப்ய லோகேஸ்மின் ச்ரேயோ ந குருதே ஜன: |
த்வந்துராக்ஞஸ்ஸுதா பாலாऽநவத்யாம்கீ ஸுயௌவனா || 59
ததாபிச தபோவ்ருத்தா தபஸா யச்சகர்தஹ। தர்மவ்ருத்தாஸி கிரிஜே ஜகதாம் ஜனனீ த்ருவம் || 60
ருஷயஸ்த்வாம் நமந்த்யார்யே தேவாச்ச யமினாம்வரா: |
கிந்து மே ப்ரதிபாஸித்வம் தபஸா பாவிதாத்மன: || 61
கமபி த்யாயஸீவாத்ர புமாம்ஸம் ப்ரதிபாதி மே। ஸத்யம் வத மஹாபாகே ஸத்யஸாராஹி ஸாதவ: || 62
அநன்யம் மாஞ்ச வித்யத்ர த்வாம் ச த்ரஷ்டுமிஹாகதம் |
ததத்ர த்யக்தலஜ்ஜா த்வம் வத ஸர்வம் யதா ததம் || 63
ஜராதிபாவஸம்பூதபலிதேந மயாத்ய யத்। ப்ருஷ்டம் தந்நரஹஸ்யம்சேத் வத ஸுப்ரு க்ஷமம் யதி || 64
இதி வாக்யமீசிதுருமாபதேரவதார்ய நம்ரவதனா விலோக்ய தம் |
முஹுரேஜமானஹ்ருதயாஸ்யதேஜஸா ந விவேத ஸா க்ஷணமமும் ஸ்வமப்யஹோ || 65

இதிஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
ஸம்பவகாண்டே த்வாதசோத்யாய: ||

ஓ அழகியவளே! ஸ்னானத்திற்கு யோக்யமாக ஜலங்கள் இருக்கின்றனவா? சொல், அழியக்கூடியதும், மிகவும் கிடைப்பதற்கரிதுமான, இந்த சரீரத்தை அடைந்தும், இவ்வுலகில் மனிதன் நற்செயல்களை செய்யாமல் இருப்பது, மிகவும் ஆச்சர்யமாகும். நீயோவெனில் அரசனுடைய பெண். குற்றமற்ற அங்கங்களை யுடையவளாகவும், அழகிய யௌவனமுடையவளாகவும் இருக்கிறாய். (58–59) அப்படியாயினும், தவத்தினால் நீ வயது முதிர்ந்தவள். தவத்தினால் பயனை அடையும்படி உனக்கு எவர் கூறினர்? ஓ பார்வதி! நீ தர்மத்தினால் பெரியவள். உலகங்களுக்குத் தாய். இது நிச்சயம். (60) ஓ ஆர்யே! முனிவர்களும், தேவர்களும், துறவிகளும், தங்களை நமஸ்கரிக்கின்றனர். ஆனால் நீ ஏதோ ஓர் புருஷனை அடைய வேண்டி தவம் செய்வதாய், எனது ஞானக் கண்ணில் புலப்படுகிறது. ஓ மஹாபாக்யசாலினி! உண்மையைச் சொல்! ஸாதுக்கள் ஸத்யத்தையே ஸாரமாகக் கொண்டவர்கள். (61-62) இங்கு உன்னை பார்க்க வந்த என்னை பிறர் என நினைக்காதே! ஆதலால் நீ வெட்கத்தை விட்டு உள்ளபடி எல்லாவற்றையும், சொல். (63) அழகிய புருவமுள்ளவளே! வயது முதிர்ந்ததால் நரையை அடைந்த என்னால், எது கேட்கப்பட்டதோ, அது ரஹஸ்யமில்லாவிடில், உசிதமானால் கூறவும். (64) ஜகத்பதியான ஈசனின் மொழிகளைக் கேட்ட உமையானவள், அவரைப் பார்த்து, தலை குனிந்து, அவரது தேஜஸ்ஸினால் அடிக்கடி உள்ளத்தில் நடுக்கமுற்று, தன்னையும், அவரையும், க்ஷணகாலம் அறியாமல் மெய்மறந்து இருந்தாள். ஆச்சர்யம்! (65)

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

॥ त्रयोदशोऽध्यायः ॥

वृद्धरूपिणा श्री शिवेन देव्या सह विवादः ॥

सूतः — ततश्चित्तं समाधाय तस्मिंस्तत्प्रेमकातरम् । जयांच विजयां सख्यावादिदेश दृशा मुदा ॥ १
युवां कथयतं सख्यौ कारणं तपसो मम । एष विप्रवरः श्रीमान् नैकया कलयाऽन्वितः ॥ २
एनं विदितवृत्तान्तं कुरुतं महितं द्विजम् । इति देवीदृशाऽऽज्ञप्ते जयाच विजयाच ते ॥ ३
आदावेव प्रसाधान्तेवासिन्याविव विष्ठिते । संमुखीनं मुखं कृत्वा प्रक्रमेते निवेदितुम् ॥ ४
शृणु तात द्विजश्रेष्ठ वदन्ति त्वां कथं सुताः । आवांपौत्रियौ स्वमाधेहि कृपां शृण्वद्य नौ वचः ॥ ५
यत्कारणमिदं देव्या नीतं कार्श्यं वपुः शुभम् । सख्यौ — इयं हिमगिरीन्द्रस्य तनया विदिता त्वया ॥ ६
रूपलावण्यसंपन्ना शीलाचारगुणान्विता । त्रियंबकं जगद्वन्द्यं सुगन्धिं पुष्टिवर्धनम् ॥ ७
मृत्युञ्जयमनाद्यन्तं सुमंगळमजं शिवम् । युवानं पुरुषश्रेष्ठं सर्वमंगळदायकं ॥ ८
आत्मनोपि सखी सर्वमंगळार्थमभीप्सति । पतिमाप्तुमुवाहेच्छां जगतांपतिमात्मनः ॥ ९

பதிமூன்ருவது அத்யாயம்.

விருத்தவேடம்பூண்ட சிவன் தேவியிடம் வாதித்தல்

ஸூத:— தத: சித்தம் ஸமாதாய தஸ்மிம்ஸ்தத்ப்ரேமகாதரம் |
ஜயாம் ச விஜயாம் ஸக்யாவாதிதேச த்ருசா முதா || 1
யுவாம் கதயதம் ஸக்யௌ காரணம் தபஸோ மம | ஏஷ விப்ரவர: ஸ்ரீமான் நைகயா கலயாऽன்வித: || 2
ஏனம் விதிதவ்ருத்தாந்தம் குருதம் மஹிதம் த்விஜம் | இதி தேவீ த்ருசாऽऽஜ்ஞப்தே ஜயா ச விஜயா ச தே 3
ஆதாவேவ ப்ரஸாத்யாந்தேவாஸின்யாவிவ விஷ்டிதே |
ஸம்முகீனம் முகம் க்ருத்வா ப்ரக்ரமே தே நிவேதிதும் || 4
ச்ருணு தாத த்விஜச்ரேஷ்ட வதந்தி த்வாம் கதம் ஸுதா: |
ஆவாம் பௌத்ரியௌஸ்வ ஆதேஹி க்ருபாம் ச்ருண்வத்ய நௌ வச: || 5
யத்காரணமீதம் தேவ்யா நீதம் கார்ச்யம் வபு: சுபம் |
ஸக்யௌ:— இயம் ஹிமகிரீந்த்ரஸ்ய தனயா விதிதா த்வயா || 6
ரூபலாவண்ய ஸம்பன்னா சீலாசாரகுணான்விதா | த்ரியம்பகம் ஜகத்வந்த்யம் ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம் 7
ம்ருத்யுஞ்ஜயமனாத்யந்தம் ஸுமங்களமஜம் சிவம் | யுவானம் புருஷச்ரேஷ்டம் ஸர்வமங்களதாயகம் || 8
ஆத்மனோபி ஸகீ ஸர்வமங்களார்த்தமபீப்ஸதி | பதிமாப்துமுவாஹேச்சாம் ஜகதாம்பதிமாத்மன: || 9

---

13 - வது அத்யாயம்.

ஸூதர் கூறுகிறார்:— பிறகு தேவியானவள் அக்கிழவரிடத்தில் இருக்கும் பக்தியினால் பயங்கொண்ட மனதை நிலை நிறுத்திக் கொண்டு, ஜயை, விஜயை, என்றதோழிகளை அன்பு கொண்டு கடைக் கண்ணால் கட்டளையிட்டாள். (1) ஓ தோழிகளே! இந்த சோபைவாய்ந்த சிறந்த அந்தணர் எல்லாக் கலைகளையும் கற்றறிந்தவர். எனது தவத்திற்கு காரணத்தை நீங்கள் கூறுங்கள். (2) மஹிமைவாய்ந்த இந்த ப்ராம்மணரிடம் எனது வ்ருத்தாந்தத்தை தெரிவியுங்கள் என கண்ணினால் உத்திரவிடப்பட்டதும், ஜயை, விஜயை, இருவர்களும் (3) முந்தியே அவருக்கு உபசாரங்களைச் செய்துவிட்டு அவரது அருகில், சிஷ்யர்கள் போல் எதிர்முகமாய் நின்று கொண்டு, தெரிவிப்பதற்கு துடங்கினர். (4) சிறந்த பிராமணராகிய ஓ பாட்டனாரே! தங்களுடன் பெண்கள் எப்படி எதிரில் நின்று பேசமுடியும். நாங்கள் பேரப் பெண்களாக இருக்கின்றோம். கருணை புரிந்து இப்பொழுது எந்தக் காரணம் பற்றி - தேவி, அழகிய தனது சரீரத்தை இளைக்கச் செய்து தவம் செய்கிறுளோ, அதைக் கூறுகிறோம். கேளும். (5½) ஸகிகள் கூறுகிறார்கள் :— இவள் ஹிமவானுடைய பர்வதராஜனின் பெண் என்றும், அழகு வாய்ந்தவள் என்றும், நற்குணங்கள், ஆசாரம், இவற்றை உடையவள் என்றும், தங்களுக்குத் தெரியும். (6½) முக்கண்ணனும், உலகங்களால் நமஸ்கரிக்கத் தகுந்தவரும், நல்ல வாஸனை உள்ளவரும், செழிப்பை வளர்ப்பவரும், (7) எமனை ஜெயித்தவரும், ஆதி-அந்தம் அற்றவரும், சிறந்த மங்களமூர்த்தியும், பிறப்பற்றவரும், நித்ய யௌவனமுடையவரும், புருஷச்ரேஷ்டரும், எல்லா மங்களங்களையும் பக்தர்களுக்கு அளிப்பவருமாகிய பரமசிவனை (8) எங்களது தோழியானவள் தான் எல்லா மங்களங்களையும் அடையவேண்டி விரும்புகிறுள். மேலும் அவள் உலகிற்கெல்லாம் பதியான

श्रुतागमपुराणैषा त्वादृशेभ्यः पितामह । पितुर्गेहेषु बालैषा ध्यायन्तीशांघ्रिपंकजं ॥ १०
नशर्मलेभे यं स्मृत्वा प्राप्नुवन्ति सुखं जनाः । तन्नामजप्यनिरता तत्कथाश्रवणोन्मुखी ॥ ११
तन्मयं च जगत्सर्वं पश्यन्ती ध्यानचक्षुषा । औत्सुक्यमाप बहुळं उत्तरोत्तरमीश्वरे ॥ १२
दिवा वसन्ती सन्तापात् इयं धारा गृहान्तरे । पल्लवास्तरणे रात्रौ जागर्त्येषा निषेदुषी ॥ १३
क्षणन्निद्रां गता बालाऽपररात्रौ प्रतिक्षपम् । स्वप्ने दृष्ट्वा पतिं भूयः प्रबुद्धा विललाप च ॥ १४
हे कान्त व्रजसि क्वत्वं इति गृह्णाति बाहुना । सर्वेऽपि च त्वां वेदान्ताः रोदसी व्याप्यनिष्ठितम् ॥ १५
विद्वांसोऽपि मुरार्याद्याः परिपूर्णं वदन्ति हि । कथं नवेत्सिं भावस्थं जनं जगदधीश्वर ॥ १६
अहो सुमहदाश्चर्यं यदिमंजनमीश्वरः । नानुगृह्णाति जगतां अनुग्रहकरः कथम् ॥ १७
इतीयं कांक्षती शंभोः संगमं चिरमद्रिजा । नैव लेभे यथा माता पितृभ्यां विनिवेद्य सा ॥ १८
यथाविधं सहास्माभिः तपसेऽमुं तदाश्रमम् । तपस्यन्त्याऽनया वृक्षाः पृथुकायेऽधिरोपिताः ॥ १९

ச்ருதாகமபுராணைஷா த்வாத்ருசேப்ய: பிதாமஹ |
பிதுர்கேஹேஷு பாலைஷா த்யாயந்தீசாங்க்ரிபங்கஜம் || 10
ந சர்மலேபே யம் ஸ்ம்ருத்வா ப்ராப்நுவந்தி ஸுகம் ஜனா: | தந்நாமஜப்யநிரதா தத்கதாச்ரவணோன்முகீ 11
தன்மயம்ச ஜகத்ஸர்வம் பச்யந்தீ த்யானசக்ஷுஷா | ஔத்ஸுக்யமாப பஹுளம் உத்தரோத்தரமீச்வரே 12
திவா வஸந்தி ஸந்தாபாத் இயம் தாராக்ருஹாந்தரே |
பல்லவாஸ்தரணே ராத்ரௌ ஜாகர்த்யேஷா நிஷேதுஷீ || 13
க்ஷணம் நித்ராம் கதா பாலாऽபரராத்ரௌ ப்ரதிக்ஷபம் |
ஸ்வப்னே த்ருஷ்ட்வா பதிம் பூய: ப்ரபுத்தா விலலாப ச || 14
ஹே காந்த வ்ரஜஸி க்வ த்வம் இதி க்ருஹ்ணாதி பாஹுனா |
ஸர்வேऽபி ச த்வாம் வேதாந்தா: ரோதஸீ வ்யாப்ய நிஷ்டிதம் || 15
வித்வாம்ஸோऽபி முரார்யாத்யா: பரிபூர்ணம் வதந்தி ஹி | கதம் ந வேத்ஸி பாவஸ்தம் ஜனம் ஜகததீச்வர 16
அஹோ ஸுமஹதாச்சர்யம் யதிமஞ்ஜனமீச்வர: | நானுக்ருஹ்ணாதி ஜகதாம் அனுக்ரஹகர: கதம் || 17
இதீயம் காங்க்ஷதீ சம்போ: ஸங்கமம் சிரமத்ரிஜா |
நைவ லேபே யதா மாதா பித்ருப்யாம் விநிவேத்ய ஸா || 18
யதாவிதம் ஸஹாஸ்மாபி: தபஸேऽமும் ததாச்ரமம் |
தபஸ்யந்த்யாऽனயா வ்ருக்ஷா: ப்ருதுகாயேऽதிரோபிதா: || 19

பரமசிவனை, தனக்குப் பதியாக அடைய ஆசை கொண்டுள்ளாள். (9) ஓ பாட்டனாரே! பிதாவின் வீட்டில் இந்தப் பெண்ணானவள், சிறு பருவத்திலேயே தங்கள் போன்ற பெரியோர்களிடமிருந்து புராணங்களைக் கேட்டுள்ளாள். எந்தப் பரமசிவனை நினைத்து ஜனங்கள் ஸுகத்தை அடைகின்றனரோ, அந்தப் பரமசிவனின் சரண கமலங்களை தியானித்தும் கோரிய பொருளை அடையவில்லை. (10½) அவரது நாமங்களை ஜபிப்பதில் ஆவல் கொண்டவளும், அவரது கதைகளை கேட்பதில் ஆவல் கொண்டவளாகவும் இருந்து கொண்டு தியானக் கண்ணால், உலகம் முழுவதையும் சிவமயமாகவே பார்த்துக்கொண்டு, ஈச்வரனிடத்தில் மேன்மேலும் மிகுந்த ஆவல் கொண்டுள்ளாள். (11-12) இவள் பகலில் மிகுந்த தாபத்தால் ஸ்நானம் செய்வதற்காக அமைத்துள்ள இடத்தில் வஸித்துக் கொண்டும், இரவில் தளிர் படுக்கையில் உட்கார்ந்து விழித்துக் கொண்டும் இருக்கிறாள். (13) மேலும் பின் இரவில் ஒரு க்ஷணிக காலம் இப்பெண் தூக்கத்தை அடைந்து, ஸ்வப்னத்தில் பரமசிவனைக் கண்டு விழித்துக் கொண்டு, ஒவ்வொரு இரவிலும் புலம்புகிறாள். (14) ஓ காந்த! எங்கு செல்கிறீர் என கையினால் பிடிக்கிறாள். உம்மை எல்லா வேதாந்தங்களும், பூமி, ஆகாசம், இவற்றை வியாபித்து இருக்கிறவரென்று கூறுகின்றன. (15) விஷ்ணு முதலிய ஞானிகளும், எங்கும் பூர்ணமாக நிறம்பியவர் என்றும் கூறுகின்றனர். ஓ உலகிற்கெல்லாம் ஈச்வர! உம்மை பாவித்துக் கொண்டு இருக்கின்ற இந்த ஜனத்தை ஏன் நீர் அறியவில்லை? (16) உலகிற்கெல்லாம் அனுக்ரஹம் செய்யும் ஈச்வரன் இந்த ஜனத்தை ஏன் அனுக்ரஹிக்கவில்லை? இது மிக்க ஆச்சர்யம்! (17) இவ்வாறு இந்த பார்வதியானவள், பரமசிவனை அடைய வெகு நாளாய் ஆசை கொண்டு எப்பொழுது அடையவில்லையோ, அப்பொழுது தாய் தந்தையிடம் உள்ளபடி அறிவித்து, தவம் செய்வதற்காக இந்த ஆச்ரமத்திற்கு எங்களுடன் வந்தாள். தவம் செய்கின்ற இவளால் இந்த மலையில் மரங்கள் பயிராக்கப்பட்டன. (18-19) அவை யாவும், புஷ்பம், பழம், இவைகளால் நிறம்பி பெரியதாகி

तेऽपि सर्वे सदा पुष्पफलाढ्याः पृथुतांगताः । हरिणाः पुत्रपौत्राद्यैः आसन् बहुगुणान्विताः ॥ २०
सर्वप्रभुस्तदा शंभुः परिपूर्णस्सदाशिवः । अस्यै नैवतु सान्निध्यं किंवाऽत्र कुरुतेऽद्भुतम् ॥ २१
त्वं तात परमेशानः शीघ्रमस्यै प्रसीदतु । अनुग्रहाण भो ब्रह्मन् सहस्रेन्दु वयाह्यसि ॥ २२
उक्त्वोपरेमतुस्सख्यौ जयाच विजया च सा । ततः सभगवान् वृद्धः विहस्यास्फोट्यवै करौ ॥ २३
उमामुखं समालोक्य सत्यमेवं वदाद्रिजे । पारिहास्यमुताहोस्वित् भवत्याः सख्युदीरितम् ॥ २४
श्रुत्वाऽस्य वचनं देवी वृद्धस्य जगतांगुरोः । अद्रिजा जगतांमाता वृद्धं ब्राह्मणमब्रवीत् ॥ २५
देवी — भो भो ब्राह्मण सर्वज्ञ तातवृद्धमहामते । इदमेव सुदुष्प्रापं प्रार्थयामि शिवं सुरैः ॥ २६
तत्प्राप्ति साधन ब्रह्मन् तपः किल भवेदिदम् । मनोरथोऽयमेवैषः गतिरस्य नहन्यते ॥ २७
अहंतु बालिशा बाला क्वासौ वाचामगोचरः । तथाऽपि भक्तवात्सल्यमीशस्येति जगुस्सुराः ॥ २८
अनुगृण्हीष्व मे शंभुः प्रसीदेदिति भोद्विज । इति तस्या वचः शृण्वन् शिरः स्वं कम्पयन् मुहुः ॥ २९

தேSபி ஸர்வே ஸதா புஷ்பபலாட்யா: ப்ருதுதாம் கதா: |
ஹரிணா: புத்ரபௌத்ராத்யை: ஆஸன் பஹு குணான்விதா: || 20
ஸர்வப்ரபுஸ்ததாசம்பு: பரிபூர்ண: ஸதாசிவ: | அஸ்யை நைவது ஸாந்நித்யம் கிம்வாSத்ர குருதேSத்புதம் 21
த்வம் தாத பரமேசான: சீக்ரமஸ்யை ப்ரஸீதது |
அனுக்ரஹாண போ ப்ரம்மன் ஸஹஸ்ரேந்துவயா ஹ்யஸி || 22
உக்த்வோபரேமது: ஸக்யௌ ஜயா ச விஜயா ச ஸா |
தத: ஸ பகவான் வ்ருத்த: விஹஸ்யாஸ்போட்ய வை கரௌ || 23
உமாமுகம் ஸமாலோக்ய ஸத்யமேவம் வதாத்ரிஜே |
பாரிஹாஸ்யமுதாஹோஸ்வித் பவத்யா: ஸக்யுதீரிதம் || 24
ச்ருத்வாSஸ்ய வசனம் தேவீ வ்ருத்தஸ்ய ஜகதாம் குரோ: |
அத்ரிஜா ஜகதாம்மாதா வ்ருத்தம் ப்ராம்மணமப்ரவீத் || 25
தேவீ— போ போ ப்ராம்மணஸர்வக்ஞ தாத வ்ருத்தமஹாமதே |
இதமேவ ஸு துஷ்ப்ராபம் ப்ரார்த்தயாமி சிவம் ஸுரை: || 26
தத்ப்ராப்திஸாதனம் ப்ரம்மன் தப: கில பவேதிதம் | மனோரதோSயமேவைஷ: கதிரஸ்ய நஹன்யதே 27
அஹம் து பாலிசா பாலா க்வாஸௌ வாசாமகோசர: |
ததாSபி பக்தவாத்ஸல்யம் ஈசஸ்யேதி ஜகு: ஸுரா: || 28
அனுக்ருண்ஹீஷ்வ மே சம்பு: ப்ரஸீதேதிதி போ த்விஜ |
இதி தஸ்யா வச: ச்ருண்வன் சிர: ஸ்வம்கம்பயன் முஹு: || 29

விட்டன. இவளால் வளர்க்கப்பட்ட மான்கள் பிள்ளை பேரன்களுடன் பல மடங்காகி, அதிகரித்து விட்டன. (20) அவ்வளவு காலமாகியும், யாவருக்கும் பிரபுவும், பரிபூர்ணரும், ஸுகத்திற்கு இருப்பிடமுமாகிய, ஸ்ரீ ஸதாசிவம், இவளுக்கு இன்னும் ஏன் தர்சனம் அளிக்கவில்லை? இது மிக ஆச்சர்யம்! (21) பாட்டனாகிய பிராம்மணரே! நீர் ஆயிரம் பிறை கண்ட கிழவர். இவளுக்கு ஸ்ரீ பரமசிவன் சீக்கிரம் பிரஸாதம் செய்யும்படி தாங்கள் அனுக்ரஹம் பண்ண வேண்டும். (22) ஜயை, விஜயை, என்ற இரண்டு தோழிகளும் இம்மாதிரி கூறி முடித்தனர். பிறகு ஸ்ரீ பகவானை கிழவர் கை கொட்டிச் சிரித்து, உமையின் முகத்தைப் பார்த்து, ஓ பர்வதராஜகுமாரியே! உனது தோழிகள் சொல்லியது உண்மையா? அல்லது பரிஹாஸமாகச் சொல்லுகின்றார்களா? இதைக் கூறு என்று சொன்னார். (23-24) உலகிற்கெல்லாம் ஆசார்யனும், கிழவருமான இந்த பரமசிவனுடைய வார்த்தையைக் கேட்டு, உலகிற்கெல்லாம் தாயும், பர்வதராஜனின் பெண்ணுமாகிய அந்த தேவியானவள், கிழவரான அந்தணரைப் பார்த்துக் கூறினாள். (25) தேவியானவள் கூறுகிறாள் :— எல்லாமறிந்த, பெரும் புத்தி உள்ள, அந்தணராகிய பாட்டனே! இது இப்படியே! தேவர்களாலும் அடைவதற்கு மிகவும் அசாத்தியமாகிய பரமசிவனையே வேண்டுகிறேன். (26) ஓ பிராம்மணரே! அவரை அடைவதற்காகவே இந்த தவத்தை நாடியுள்ளேன். என்னுடைய மனக் கோரிக்கை இதுவே! இதற்கு வழிதான் பிறக்கவில்லை. (27) நானோ அறிவற்ற சிறு பெண். அப்பரமசிவனோ வாக்கிற்கு எட்டாதவர். நான் எங்கே? அவர் எங்கே? ஆயினும், ஈசனுக்கு பக்தர்கள் மீது மிகுந்த அன்பு உண்டு, என தேவர்கள் கூறுகின்றனர். (28) ஓ அந்தணரே! சம்புவானவர் என் மீது அருள்புரியும்படி தாங்கள் அனுக்ரஹிக்க வேண்டும். என்ற தேவியின் வார்த்தையைக் கேட்ட கிழவர், தன் தலையை அடிக்கடி ஆட்டிக்கொண்டு, (29) அஹோ! கஷ்டம்! கஷ்டம்!

महोकष्टमहोकष्टमार्यापि गिरिसंभवा । यद्दृश्यमनिर्देश्यं चकमे लोकनिन्दितम् ॥ ३०
ईदृशी बुद्धिरुत्पन्ना कनु ते केन चोदिता । अनुमन्तुमहं नैतदुत्सहे मनसाऽपि वा ॥ ३१
त्वां च सर्वानवद्यांगीं तथावै सर्वमंगळाम् । श्मशाननिलयं रुद्रं सर्पभूषं कपर्दिनम् ॥ ३२
त्वगस्थिभूषणं भीमं भूतप्रेतावृतं सदा । विचार्य सूक्ष्मया बुध्या खिद्यते मे मनो भृशम् ॥ ३३
प्रथमं शृणु तन्वंगि दम्पती कोमळाकृती । भद्रासनार्हां त्वं तेन कथं स्थास्यस्यपस्मृतौ ॥ ३४
पट्टसूत्रप्रतिसर बन्धनार्हासि शोभने । सफूत्काराहिशीतांगबन्धनं सहसे कथम् ॥ ३५
सर्वासां क्रियते लोके हेम्ना मांगल्यतन्तुना । कण्ठे बध्नाति सुभगे शूलीकाळाहि मंगळम् ॥ ३६
वधूर्दुकूलवसनं परिधत्ते वरार्पितम् । त्वन्तु चर्मद्रवद्रक्तं सैहं वैयाघ्रमेव च ॥ ३७
परीतो दंपती लोके हुत्वा लाजान् हविर्भुजि । त्वन्तु तेन चितावह्नेः प्रदक्षिणकृतोद्यमा ॥ ३८

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
संभवकांडे त्रयोदशोऽध्यायः ॥

அஹோ கஷ்டமஹோகஷ்டம் ஆர்யாபிகிரிஸம்பவா | யதத்ருச்யமனிர்தேச்யம் சகமே லோகநிந்திதம் 30
ஈத்ருசீ புத்திருத்பன்னா க்வநு தே கேனசோதிதா | அனுமந்துமஹம் நைதத் உத்ஸஹே மனஸாऽபிவா 31
த்வாம் ச ஸர்வானவத்யாங்கீம் ததாவை ஸர்வமங்களாம் |
ச்மசான நிலயம் ருத்ரம் ஸர்பபூஷம் கபர்தினம் || 32
த்வகஸ்திபூஷணம் பீமம் பூதப்ரேதாவ்ருதம் ஸதா |
விசார்ய ஸூக்ஷ்மயா புத்யா கித்யதே மே மனோ ப்ருசம் || 33
ப்ரதமம் ச்ருணு தன்வங்கி தம்பதீ கோமளாக்ருதீ |
பத்ராஸனார்ஹா த்வம் தேன கதம் ஸ்தாஸ்யஸ்யபஸ்ம்ருதௌ || 34
பட்டஸூத்ரப்ரதிஸர பந்தனார்ஹாஸி சோபனே | ஸபூத்காராஹிசீதாங்க பந்தனம் ஸஹஸே கதம் || 35
ஸர்வாஸாம் க்ரியதே லோகே ஹேம்னா மாங்கல்யதந்துனா |
கண்டே பத்னாதி ஸுபகே சூலீகாளாஹிமங்களம் || 36
வதூர் துகூலவஸனம் பரிதத்தே வரார்ப்பிதம் | த்வந்து சர்மத்ரவத்ரக்தம் ஸைம்ஹம் வையாக்ரமேவ ச 37
பரீதோ தம்பதீ லோகே ஹுத்வா லாஜான் ஹவிர்புஜி |
த்வந்து தேன சிதாவந்நே: ப்ரதக்ஷிணக்ருதோத்யமா || 38

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
ஸம்பவகாண்டே த்ரயோதசோऽத்யாய: ||

மிகச் சிறந்த பர்வதராஜனின் குமாரியாயிருந்தும், பார்ப்பதற்கும், குறிப்பிடுவதற்கும், தகாதவரும், உலகத்தால் நிந்திக்கப்பட்டவருமான, பரமசிவனை எப்படி விரும்புகிறாள்? (30) இம்மாதிரி புத்தி உனக்கு எப்படி உண்டாயிற்று? யாரால் கூறப்பட்டது? நான் இதை மனதினால் கூட அனுமதிக்கமாட்டேன். (31) முற்றும் சுந்தரவடிவமுள்ள சரீரத்தை உடையவளும், அதேபோல் ஸர்வமங்களையுமாகிய உன்னையும், மயானத்தில் குடியிருப்போரும், ஸர்ப்பங்களை ஆபரணமாகப் பூண்டவரும், ஜடை தரித்தவரும், தோல், எலும்பு, இவற்றை அலங்காரமாக தரித்தவரும், பயங்கரரும், எப்பொழுதும் பூத ப்ரேதங்களால் சூழப்பட்டவருமான ருத்ரனையும், நன்கு ஆராய்ந்து யோசிக்குமளவில், எனது மனம் மிகவும் துயரமடைகிறது. (32-33) ஓ அழகு வாய்ந்தவளே! முதலில் கேள்! தம்பதிகள் இருவரும், அழகு வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்க வேண்டிய நீ அவருடன் எப்படி அபஸ்மாரத்தின் மீது வீற்றிருப்பாய். (34). ஓ மங்களகரையே! பட்டுக் கயிற்றை ரக்ஷையாகக் கட்டிக்கொள்ளத் தகுந்தவள். புஸ்ஸென்று சீறிக்கொண்டிருக்கும் ஸர்ப்பத்தின் குளிர்ந்த உடலின் கட்டுதலை எப்படி பொறுத்துக் கொள்வாய்? (35) உலகில் எல்லாப் பெண்களுக்கும் தங்கத்தில் செய்த திருமங்கல்யக் கயிற்றை கழுத்தில் கட்டுவது வழக்கம். ஓ பாக்யம் வாய்ந்தவளே! சூலத்தை தரித்த சிவன் கரும்பாம்பை கழுத்தில் கட்டுவாரே! (36) திருமணப் பெண், மாப்பிள்ளையால் கொடுக்கப்பட்ட பட்டாடையை கட்டிக்கொள்வது வழக்கம். நீயோவெனில், ரத்தம் கசியும் சிங்கத் தோலையும், புலித் தோலையும், எப்படி கட்டிக்கொள்வாய்? (37) உலகில் தம்பதிகள் அக்னியில் பொரியை ஹோமம் செய்து, பிரதக்ஷிணம் செய்வது வழக்கம் நீயோவெனில், அவரது கையை பற்றிக்கொண்டு, மயானத் தீயைச் சுற்றிவர எப்படி முயல்வாய்? (38).

பதிமூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

॥ अथ चतुर्दशोऽध्यायः ॥

श्रीपार्वत्यै श्रीशिवेन निजरूपदर्शनम् ॥

मत्तवारणमारूढौ दंपती द्विजपुंगवैः । स्वस्तिवाचनकैस्तूर्यैः स्तुवन्ति किल वन्दिनः ॥ १
युवां वृद्धोक्षमारूढौ भूतवेतालसेवितौ । निरीक्ष्य जनता लोके स्मेरवक्त्रा भविष्यति ॥ २
अन्यच्च शृणु चार्वङ्गि त्वदीयो निर्गुणो वरः । लौकिकं च न जानाति नग्नो विकृतलक्षणः ॥ ३
श्मशाननिलयोऽत्यर्थं चर्मास्थ्युरगभूषणः । अपस्मारमधिष्ठाय विकीर्यच जटाच्छटाः ॥ ४
बिभ्रदग्निं च डमरुं नानर्ति प्रेतकानने । परेत भूतवेताळ करताळ लयानुगः ॥ ५
कृत्यान्येतानि नान्यस्मिन् लोके सन्ति वरानने । वरसंपच्च लोकेस्मिन् बन्धुलक्षण शीलवान् ॥ ६
विद्याधनसमृद्धात्मा कुलीनो रोगवर्जितः । नविद्यते किमप्यस्मिन् त्रिणेत्रे पश्य सुन्दरि ॥ ७
न वच्मि भवतीमत्र वच्मि ते मातरं गुरुं । यौ त्वामपथगां नैव निवारयत ईदृशीम् ॥ ८
किन्तु सर्वकलाभिज्ञः रुद्रोऽसौ विदितो मया । येनैतादृशमप्येवं मुनयः पर्युपासते ॥ ९
सा त्वं च पतिता हस्ते तस्य माया विनोदतः । अहो सख्यौ किमितिवां सखीयं न निवार्यते ॥ १०

॥ அத சதுர்த்தஶோऽத்யாய: ॥

ஸ்ரீ பார்வதிக்கு ஸ்ரீ பரமசிவன் தன் ஸ்வரூபத்தை காண்பித்தல்.

மத்தவாரணமாரூடௌ தம்பதீ த்விஜபுங்கவை: । ஸ்வஸ்திவாசனகை: தூர்யை: ஸ்துவந்தி கில வந்தின: 1
யுவாம் வ்ருத்தோக்ஷமாரூடௌ பூதவேதாளஸேவிதௌ ।
நிரீக்ஷ்ய ஜனதா லோகே ஸ்மேரவக்த்ரா பவிஷ்யதி ॥ 2
அன்யச்ச ச்ருணு சார்வங்கி த்வதீயோ நிர்குணோ வர: । லௌகிகம் ச நஜானாதி நக்னோ விக்ருதலக்ஷண: 3
ச்மசானநிலயோऽத்யர்த்தம் சர்மாஸ்த்யுரகபூஷண: । அபஸ்மாரமதிஷ்டாய விகீர்யச ஜடாச்சடா: ॥ 4
பிப்ரதக்னிம் ச டமரும் நானர்த்தி ப்ரேதகானனே । பரேதபூதவேதாள கரதாளலயானுக: ॥ 5
க்ருத்யாந்யேதானி நான்யஸ்மின் லோகே ஸந்தி வரானனே ।
வரஸம்பச்ச லோகேஸ்மின் பந்துலக்ஷணசீலவான் ॥ 6
வித்யாதனஸம்ருத்தாத்மா குலீனோ ரோகவர்ஜித: । நவித்யதே கிமப்யஸ்மின் த்ரிணேத்ரே பச்ய ஸுந்தரி 7
ந வச்மி பவதீமத்ர வச்மி தே மாதரம் குரும் । யௌ த்வாமபதகாம் நைவ நிவாரயத ஈத்ருசீம் ॥ 8
கிந்துஸர்வகலாபிக்ஞ: ருத்ரோऽஸௌ விதிதோ மயா । யேனைதாத்ருசமப்யேவம் முனய: பர்யுபாஸதே 9
ஸா த்வம்ச பதிதா ஹஸ்தே தஸ்ய மாயா விநோதத: ।
அஹோ ஸக்யௌ கிமிதிவாம் ஸகீயம் ந நிவார்யதே ॥ 10

பதினான்காவது அத்யாயம்

உலகில் தம்பதிகள், மதயானை மீது ஏறிக்கொண்டு, சிறந்த அந்தணர்களால் செய்யப்படும் ஆசீர்வாத மந்திரங்களுடனும், தூர்ய வாத்யங்களுடனும், கெட்டியக்காரர்களது விருதாவளிகளுடனும், ஊர்வலம் வருவது வழக்கமல்லவா? (1) நீங்களோவென்றால், கிழக்காளை மீது ஏறி, பூத வேதாளங்களால் ஸேவிக்கப்பட்டு வருவதைப் பார்த்து, ஜனஸமூஹமானது சிரித்துப் பரிஹஸிக்கும். (2) அழகிய அங்கம் வாய்ந்தவளே! மற்றொன்றைக் கேள்! நீ கணவனாக வேண்டுகிற பரமசிவன் குணங்களற்றவன், உலகமறியாதவன், உடையற்று இருப்பவன், விகார வடிவம் பொருந்தியவன். (3) பெரும்பாலும் மயானத்தில் இருப்பவன். தோல், எலும்பு, பாம்பு, இவைகளை ஆபரணமாக உடையவன். அபஸ்மாரரோக தேவதையின் மீது அமர்ந்து, சடைகளின் கட்டை விரித்துக் கொண்டும், அக்னியையும், "டமரு" என்னும் வாத்யத்தையும் கையில் வைத்துக் கொண்டு, ப்ரேத, பூத, வேதாளங்களின் கைகளால் போடும் தாளத்தின் லயத்தை அனுஸரித்து, சுடுகாட்டில் அடிக்கடி கூத்தாடுகிறவன்.(4-5) அழகிய முகமுடையவளே! இம்மாதிரிச் செயல்கள் உலகில் வேறு எவரிடத்திலும் கிடையாது. இவ்வுலகில், மாப்பிள்ளைகளுக்குரிய முக்ய ஸம்பத்துக்கள் என்னவென்றால், பந்துக்கள், நல்ல லக்ஷணம், நல்ல நடை, படிப்பு, பொருள், நல்ல மனம், நற்குலப் பிறப்பு, வியாதியின்மை, இவைகளேயாகும். ஓ ஸுந்தரி! முக்கண்ணனிடத்தில், எதுவுமில்லை, நீ பார். (6–7) இதில் நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லை. எவர்கள் கெட்ட வழியில் செல்லும், இம்மாதிரியான உன்னை தடுக்கவில்லையோ, அந்த தாய் தந்தையர்களைத்தான் குறை) கூறுவேன். (8) ஆனால் இந்த ருத்ரன், ஸகல வித்தைகளிலும் தேர்ச்சி பெற்றவன் என்பதை நான் அறிவேன். இவ்வாறு வித்தை இருப்பதால்தான், இப்படிப்பட்ட தோஷங்கள் உள்ளவனாயினும், முனிவர்கள்

किन्तु वच्मि हितं तेऽद्य रुद्रादूनो वरोह्यहम् । वृद्धोऽपि गुणवान् शीली सदाचारवतां मतः ॥ ११
सर्वविद्यासु लोकेस्मिन् संख्यावान्नैव मादृशः । अष्टैश्वर्येण संपन्नः नमत्तो विद्यते भुवि ॥ १२
तं त्वं प्रार्थयसे भ्रान्त्या प्रार्थये त्वामहं सदा । त्रियम्बकः सखातूष्णीम् कुबेरस्य धनैरहम् ॥ १३
सखा सर्वस्यलोकस्य स्वाश्रितस्य यशस्विनि । दास्याम्यभीष्टमनिशं धनिनोऽपि धनीह्यहम् ॥ १४
मद्दास्यनिरतानांहि गेहे ताः कामधेनवः । तद्गृहारामनिलयाः स्वर्भूमिरुहपङ्क्तयः ॥ १५
अतोऽत्र सर्वमालोच्य मां वृणीष्व वरानने । अहं तु तपसा नित्यः वृद्धोऽपि च युवाऽप्यहम् ॥ १६
मत्तोऽन्यं रुद्रमनघे न मानय गिरा गुणम् । उक्त्वैक्षत मुखं देव्याः किंचित् स्मेराननो विभुः ॥ १७
इति वृद्धवचः श्रोत्रे कृत्वा कोपपरिप्लुता । कर्णौ पिधाय सहसा कृत्वा तं पृष्ठतो द्विजम् ॥ १८
अयि वृद्धोऽसुरः कश्चिदागतो मत्तपोवनम् । अथवाऽऽगो मयापूर्वं कृतं किंवाऽन्यजन्मसु ॥ १९
तदिदं मूर्तमाहोस्वित् विघ्नोऽयं केन निर्मितः । निवार्यतामालिपुनः विवक्षुः वृद्धपूरुषः ॥ २०

கிந்து வச்மி ஹிதம் தேऽத்ய ருத்ராத்யூநோவரோஹ்யஹம் |
வ்ருத்தோऽபி குணவான் சீலீ ஸதாசாரவதாம் மத: || 11
ஸர்வவித்யாஸு லோகேஸ்மின் ஸங்க்யாவான் நைவமாத்ருச: |
அஷ்டைச்வர்யேண ஸம்பன்ன: நமத்தோ வித்யதே புவி || 12
தம் த்வம் ப்ரார்த்தயஸே ப்ராந்த்யா ப்ரார்த்தயே த்வாமஹம் ஸதா |
த்ரியம்பக: ஸகாதூஷ்ணீம் குபேரஸ்ய தனைரஹம் || 13
ஸகா ஸர்வஸ்ய லோகஸ்ய ஸ்வாச்ரிதஸ்ய யசஸ்வினி |
தாஸ்யாம்யபீஷ்டமனிசம் தனினோऽபி தனிஹ்யஹம் || 14
மத்தாஸ்யநிரதானாம்ஹி கேஹே தா: காமதேனவ: | தத்க்ருஹாராமநிலயா: ஸ்வர்பூமிருஹபங்க்தய: || 15
அதோऽத்ர ஸர்வமாலோச்ய மாம் வ்ருணீஷ்வ வரானனே |
அஹம் து தபஸா நித்ய: வ்ருத்தோऽபி ச யுவாऽப்யஹம் || 16
மத்தோऽன்யம் ருத்ரமனகே நமானய கிரா குணம்| உக்த்வைக்ஷதமுகம்தேவ்யா: கிஞ்சித் ஸ்மேரானனோ விபு:
இதி வ்ருத்தவச: ச்ரோத்ரே க்ருத்வா கோபபரிப்லுதா |
கர்ணௌ பிதாய ஸஹஸா க்ருத்வா தம் ப்ருஷ்டதோ த்விஜம் || 18
அயி வ்ருத்தோऽஸுர: கச்சித் ஆகதோ மத்தபோவனம் |
அதவாऽऽகோ மயாபூர்வம் க்ருதம் கிம்வாऽந்யஜன்மஸு || 19
ததிதம் மூர்த்தமாஹோஸ்வித் விக்னோऽயம் கேன நிர்மித: | நிவார்யதாமாளிபுன: விவக்ஷு: வ்ருத்தபூருஷ:

உபாஸிக்கின்றனர். (9) அந்த நீயும், அவனது மாயா விநோதத்தினால் அவன் கையில் அகப்பட்டுக் கொண்டாய். ஓ தோழிகளே! நீங்கள் உங்களது தோழியை ஏன் தடுக்கவில்லை? (10) ஆனால், நான் இப்பொழுது உனக்கு நன்மையைச் சொல்கின்றேன் கேள். யௌவனமுள்ள சிவனைக் காட்டிலும், நானே சிறந்த வரன். நான் கிழவனாயினும், நல்ல குணங்களுள்ளவன், நல்லொழுக்கமுடையவன், பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவன். (11) இவ்வுலகில், என்னைப் போன்ற எல்லா வித்தைகளிலும், தேர்ச்சிபெற்ற வேறு வித்வான் யாருமில்லை. என்னைக் காட்டிலும் அஷ்டைச்வர்யத்துடன் கூடியவனும், இப்பூமியில் இல்லை. (12) நீ வீண் பிரமத்தினால் அவனை வேண்டுகிறாய். நான் உன்னை எப்பொழுதும் பிரார்த்திக்கின்றேன். பொருளற்ற புருஷனாகிய முக்கண்ணன், குபேரனுக்கு அவனுடைய பணத்திற்காக ஸ்நேகமாக இருக்கிறான். ஓ கீர்த்தி வாய்ந்தவளே! நானோவெனில் என்னை அண்டின எல்லா உலகத்தினருக்கும் நண்பன். செல்வமுடையவர்களுக்கெல்லாம் மேல்பட்ட செல்வத்தை உடைய நான் வேண்டிய பொருளை யெல்லாம் எப்பொழுதும் கொடுக்கிறேன். (13–14) எனக்குப் பணிவிடை செய்கின்றவர்களது வீட்டில் பிரஸித்தி பெற்ற காமதேனுக்களும், ஸ்வர்கத்தில் உள்ள கற்பக விருக்ஷத்தின் வரிசைகள் அவர்களது வீட்டுத் தோட்டத்திலும் நிலைத்து இருக்கின்றன. (15) அழகிய முகமுள்ளவளே! ஆதலால் நீ எல்லாவற்றையும் ஆலோசித்து என்னையே கணவனாகச் செய்துகொள். நான் கிழவனாயினும், எனது தவத்தின் பயனால் அழிவற்றவனாகவும், வாலிபனுமாயும் இருக்கின்றேன். (16) குற்றமற்றவளே! என்னைத்தவிர வேறான குணமற்ற ருத்ரனை உனது நாவினால் புகழாதே, என்று இவ்வாறு கூறி பிரபுவானவர், தேவியின் முகத்தை கொஞ்சம் புன்சிரிப்புடன் பார்த்தார். (17) இம்மாதிரியான கிழவரது வார்த்தையைக் கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, காதுகளை மூடிக்கொண்டு, தூரமாக அந்த அந்தணரை பின்புறம் இருக்கும்படி செய்து, தேவியானவள் கூறியதாவது, ஓ தோழி! யாரோ ஒரு அஸுரன் கிழ உருவங்கொண்டு எனது தவ, வனத்திற்கு வந்திருக்கிறானா? அல்லது வேறு ஜன்மங்களில் என்னால் பாவம்

च्युतात्मनाऽप्यनेनेशं एकं प्रति सुभाषितम् । गुणत्रयपथातीतः तमःपारे प्रतिष्ठितः ॥ २१
आदित्यवर्णो भगवान् निर्गुणः स त्वयेरितः । अस्तु सर्वं त्वयोक्तं यत् पित्ताक्रान्तच्युतात्मना ॥ २२
ब्रह्मा विष्णुश्च भगवान् आद्यन्तं नोपलब्धवान् । यस्य सर्वेश्वरस्यास्य को वेद महिमालवम् ॥ २३
कथं वा ज्ञायते शंभुः त्वया वृद्धेन विश्वपाः । निवार्यतामसावालि वृद्धः पलितमूर्धजः ॥ २४
पुनर्विवक्षुर्यत्किञ्चित् प्रस्फुरद्दशनच्छदः । कायं वृद्धो द्विजोऽविद्वान् क सर्वज्ञो महेश्वरः ॥ २५
ध्रुवमेषपुराशाप मध्यगो गौतमस्यहि । दधीचशाप निर्दग्धस्त्वथवा नात्र संशयः ॥ २६
अथवाऽसौ तपो विघ्नः मूर्तिमान् सत्यमद्भुतम् । आत्मानात्मविवेकज्ञः वर्षीयानपि रोगवान् ॥ २७
न गच्छेत्साहसी वृद्धः वारितोऽपि पतिष्यति । इतो गमिष्याम्यधुना नास्याग्रे स्थातुमक्षमा ॥ २८
इति क्रुद्धतरा देवी गन्तुमैच्छत् पराङ्मुखी । ततः प्रसन्नो भगवान् स्मयमान मुखाम्बुजः ॥ २९
स्वं रूपमास्थितो देव्याः प्रादुरासीत् पुरः प्रभुः । नीलकण्ठो विरूपाक्षः नित्यो नित्यं मनोहरः ॥ ३०

ச்யுதாத்மனுப்யனேனேசம் ஏகம் ப்ரதி ஸுபாஷிதம் | குணத்ரயபதாதீத: தம: பாரே ப்ரதிஷ்டித: || 21
ஆதித்யவர்ணோ பகவான் நிர்குண: ஸ த்வயேரித: |
அஸ்து ஸர்வம் த்வயோக்தம் யத் பித்தாக்ராந்தச்யுதாத்மனு || 22
ப்ரம்மா விஷ்ணுச்ச பகவான் ஆத்யந்தம் நோபலப்தவான் |
யஸ்ய ஸர்வேச்வரஸ்யாஸ்ய கோ வேத மஹிமா லவம் || 23
கதம் வா க்ஞாயதே சம்பு: த்வயா வ்ருத்தேன விச்வபா: |
நிவார்யதாமஸாவாளி வ்ருத்த: பலிதமூர்த்தஜ: || 24
புனர்விவக்ஷு: யத்கிஞ்சித் ப்ரஸ்புரத்தசனச்சத: |
க்வாயம் வ்ருத்தோ த்விஜோऽவித்வான் க்வ ஸர்வக்ஞோ மஹேச்வர: || 25
த்ருவமேஷ புராசாபமத்யகோ கௌதமஸ்ய ஹி | ததீச சாபநிர்தக்தஸ்த்வதவா நாத்ர ஸம்சய: || 26
அதவாऽஸௌ தபோவிக்ன: மூர்த்திமான் ஸத்யமத்புதம் |
ஆத்மானாத்மவிவேகக்ஞ: வர்ஷீயானபி ரோகவான் || 27
ந கச்சேத் ஸாஹஸீவ்ருத்த: வாரிதோऽபி பதிஷ்யதி |
இதோ கமிஷ்யாம்யதுனு நாஸ்யாக்ரே ஸ்தாதுமக்ஷமா || 28
இதி க்ருத்ததராதேவீ கந்துமைச்சத்பராங்முகீ | தத: ப்ரஸன்னோ பகவான் ஸ்மயமான முகாம்புஜ: || 29
ஸ்வம்ரூபமாஸ்திதோ தேவ்யா: ப்ராதுராஸீத் புர: ப்ரபு: |
நீலகண்டோ விரூபாக்ஷ: நித்யோநித்யம் மனோஹர: || 30

செய்யப்பட்டதா? அதுவே இம்மாதிரி உருவத்துடன் வந்திருக்கிறதா? அல்லது வேறு யாராலாவது செய்யப்பட்ட இடையூரு? ஓ தோழி! இந்தக் கிழ மனிதன் மறுபடியும் ஏதோ சொல்ல விரும்புகிருன். வெளியில் போகச் சொல். (18-20) மனம் தடுமாறிப் பிதற்றுகின்ற இவனுல், ஈசனைப் பற்றி முக்குணங்களுக் கெட்டாதவர் என்றும், அஞ்ஞானத்திற்கு அப்பால் இருப்பவர் என்றும் கூறிய ஒன்றுதான் நல்ல சொல்லாகும். (21) ஸூர்யனுடைய நிறத்தைக் கொண்ட பரமசிவன் நிற்குணன், என்று உம்மால் சொல்லப்பட்டது நல்லது. ஓ பித்துப்பிடித்தவரே! மனத் தடுமாற்றத்தினுல் கூறிய யாவும் இருக்கட்டும். (22) எவருடைய காலேயும், தலேயையும், பிரும்மாவும், பகவான் விஷ்ணுவும் அறியவில்லேயோ, அந்த ஸர்வேச்வரனுடைய மஹிமையின் திவிலேயைக் கூட யார்தான் அறிவார். (23) உலகத்தைக் காற்கும் பரமசிவனே, கிழவருகிய உம்மால் எப்படி அறிய முடியும்? ஓ தோழி! இன்னும் ஏதோ பேசுவதற்கு உதடு துடிக்கின்ற இந்த நரைத்தலேக் கிழவனே விரட்டிவிடு. யாதுமறியாத இந்தக் கிழப் பிராமணரெங்கே, எல்லாமறிந்த ஸ்ரீ பரமசிவனெங்கே. (24-25) இவர் முன்பு கௌதம சாபத்தில் அகப்பட்டவருக இருக்க வேண்டும். இது நிச்சயம். அல்லது ததீச முனிவரின் சாபத்தால் கெட்டவராக இருக்கவேண்டும். இதில் ஸந்தேஹமில்லே. (26) அல்லது எனது தவத்திற்கு, இடையூரே உருவத்துடன் வந்திருக்க வேண்டும். இது ஸத்யமே, இது ஆச்சர்யம்! ஆத்மா (சேதனன்). அநாத்மா (அசேதனன்) இவற்றை பிரித்து அறிந்திருந்த போதிலும், இந்தக் கிழவர் பித்தம் கொண்டவர். (27) தடுத்தாலும், பிடிவாதம் கொண்ட இந்தக் கிழவர் திரும்பி வந்து விடுவார். வெளியிலும் போகமாட்டார். அதனுல் இப்பொழுது நான் இவர் முன்பு இருக்கத் தகுதியற்றவள். இங்கிருந்து போகிறேன். (28) என்று மிகுந்த கோபம் கொண்டு பின் திரும்பிச் செல்லத் தீர்மானித்தாள். பிறகு ஸ்ரீ பகவான் மந்தஹாஸத்துடன் கூடிய முகாரவிந்தத்துடன் பிரஸன்னராகி, (29) தனது நிஜரூபத்தை அடைந்து, பிரபு, தேவிக்கு முன்பு தோன்றினுர். நீலகண்ட

देववृन्दकरोन्मुक्त पुष्पवृष्टि समुज्वलः । प्रोवाचाद्योऽनवद्यांगि त्वदीय तपसाह्यहम् ॥ ३१
क्रीतोऽस्मि वद किं तेऽद्य ददानि वरमुत्तमम् । इति वादिनि देवेशे शंकरे भवभेषजे ॥ ३२
अह्नाय सा नियमजं क्लेशमुत्सृज्य पार्वती । सकंपभयरोमांच हर्षगद्गदया गिरा ॥ ३३
प्रणम्यांघ्रयब्जयुगळं देवं तुष्टाव साञ्जलिः ।
देवी — यमाहुरेकं पुरुषं वेदान्तेषु विचक्षणाः ॥ ३४
व्याप्य तिष्ठति यो रोदः कुहरं ते नमोनमः । यत् पादकमलद्वंद्व ध्यानर्निधूतकल्मषाः ॥ ३५
प्राप्नुयुर्निर्भया मुक्तिं तस्मै तुभ्यं नमोनमः । यत्कृपादृष्टि दृष्टानां न मोहो नापि दुष्कृतिः ॥ ३६
भवन्ति ते जगद्वन्द्याः तं त्वामीशं श्रितास्म्यहम् । यं विनिद्रा जितश्वासाः शान्ता भक्तिसमन्विताः ॥ ३७
ज्योतिर्मयं प्रपश्यन्ति तं त्वामीशं श्रितास्म्यहम् । अनुग्रहाण देवेश त्वमङ्गीकृत्य मां प्रभो ॥ ३८
भक्तार्तिघ्नो महादेव प्रतीतो भुवनत्रये । भक्ता तेऽहं दयासिन्धो तां मामङ्गीकुरु प्रभो ॥ ३९

தேவப்ருந்தகரோன்முக்த புஷ்பவ்ருஷ்டி ஸமுஜ்வல: |
ப்ரோவாசாத்யோऽநவத்யாங்கி த்வதீயதபஸாஹ்யஹம் || 31
க்ரீதோऽஸ்மி வத கிம்தேऽத்ய ததானிவரமுத்தமம் | இதி வாதிநி தேவேசே சங்கரே பவபேஷஜே || 32
அன்ஹய ஸா நியமஜம் க்லேசமுத்ஸ்ருஜ்ய பார்வதீ | ஸகம்பபயரோமாஞ்ச ஹர்ஷகத்கதயா கிரா || 33
ப்ரணம்யாங்க்ர்யப்ஜயுகளம் தேவம் துஷ்டாவ ஸாஞ்ஜலி: |
தேவீ — யமாஹுரேகம் புருஷம் வேதாந்தேஷு விசக்ஷணா: || 34
வ்யாப்யதிஷ்டதி யோ ரோத:குஹரம் தே நமோ நம:| யத்பாதகமலத்வந்த்வ த்யான நிர்த்தூத கல்மஷா: 35
ப்ராப்னுயு: நிர்பயா முக்திம் தஸ்மை துப்யம் நமோ நம: |
யத்க்ருபா த்ருஷ்டி த்ருஷ்டாநாம் நமோஹோ நாபி துஷ்க்ருதி: || 36
பவந்தி தே ஜகத்வந்த்யா: தம் த்வாமீசம் ச்ரிதாஸ்ம்யஹம் |
யம் விநித்ரா ஜிதச்வாஸா: சாந்தா பக்திஸமன்விதா: || 37
ஜ்யோதிர்மயம் ப்ரபச்யந்தி தம் த்வாமீசம் ச்ரிதாஸ்ம்யஹம் |
அனுக்ரஹாண தேவேச த்வமங்கீக்ருத்ய மாம் ப்ரபோ || 38
பக்தார்திக்னோ மஹாதேவ ப்ரதீதோ புவனத்ரயே |
பக்தா தேऽஹம் தயாஸிந்தோ தாம் மாமங்கீகுரு ப்ரபோ || 39

ரும், நெற்றிக்கண் உடையவரும், அழிவற்றவரும், என்றும் மனோஹரரும், (30) தேவகணங்களால் மலர்மாரி பொழிந்து விளங்கியவருமான, ஆதி புருஷன் கூறியதாவது — சிறந்த அழகு வாய்ந்தவளே! நான் உனது தவத்தினால் விலைக்கு வாங்கப்பட்டு இருக்கிறேன். இப்பொழுது உனக்கு சிறந்த வரனை அளிக்கிறேன். என்ன வேண்டும்? சொல்' என ஸம்ஸாரத்திற்கு மருந்தும், தேவர்களுக்கு ஈசனுமான, சங்கரன் கூறும் போது — (31-32) அந்த பார்வதி தேவியானவள், சீக்கிரமாக தவத்தினால் ஏற்பட்ட சிரமத்தை நீக்கிக்கொண்டு, தேக நடுக்கத்தினாலும், பயத்தினாலும், மயிர்க் கூச்சலினாலும், ஸந்தோஷத்தினாலும், தழதழத்த வார்த்தைகளுடன், (33) சரண கமலங்களை நமஸ்கரித்து, கைகூப்பி, தேவனைத் துதிக்கத் தொடங்கினாள் — (33½) தேவி கூறினாள் — ஞானிகள் வேதாந்தங்களில், முக்ய புருஷனாக எவரைக் கூறுகின்றனரோ, எவர் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், முதலிய எங்கும் வியாபித்து இருக்கிறவரோ, அந்த உமக்கு நமஸ்காரம். (34½) எவருடைய இரண்டு பாத கமலங்களை தியானம் செய்வதினால், பாவங்களைப் போக்கி, பயமற்றவர்களாய், மோக்ஷத்தை அடைகின்றனரோ, அப்படிப்பட்ட தங்களுக்கு நமஸ்காரம். (35½) எவருடைய க்ருபை நிறைந்த கண்களால் பார்க்கப்பட்டவர்கள், அக்ஞானம் அணுகாமலும், பாவம் அணுகாமலும், ஆகி, உலகத்தினரால் நமஸ்கரிக்கத் தகுந்தவர்களாகவும் ஆகிறார்களோ, அப்படிப்பட்ட ஈசனை தங்களை ஆச்ரயிக்கிறேன். (36½) நித்திரையை விட்டு, மூச்சை அடக்கி, பக்திகொண்டு, எவரை தேஜோரூபியாய் பார்க்கின்றனரோ, அந்த ஈசனை தங்களை ஆச்ரயிக்கிறேன். ஓ தேவேசனை பிரபுவே! என்னை அங்கிகரித்து காத்கவேண்டும். (37-38) ஓ மஹாதேவ! தாங்கள், பக்தர்களுடைய மனக் கவலையைப் போக்குகிறவர் என மூவுலகிலும் பிரஸித்தராகிறீர். ஓ கருணைக்கடலாகிய பிரபுவே! நான் தங்களுடைய பக்தை. அந்த என்னை அங்கிகரித்து அருள் செய்ய வேண்டும். (39) அழகிய சந்திர கலையை சிரஸ்ஸில் தரித்த பரமசிவன், இம்மாதிரி துதித்ததால்

इति तत् स्तुतिसन्तुष्टः प्राह मुग्धेन्दुशेखरः । गृह्णामि तेऽद्रिजे पाणिं श्वस्समेत्य महोत्सवे ॥ ४०
त्वत्पितृभ्यामनुज्ञातः सुरसिद्धनिषेवितः । इति दत्वा वरं शंभुः कैलासमगमाश्रयत् ॥ ४१
तत्र सप्तऋषीनीशः सस्मार स्मरशासनः । स्वमेव संभावयतः मनसा मुनिपुंगवान् ॥ ४२
स्मरणाद्देवदेवस्य ते प्रापुः सन्निधिं विभोः । त्वरयाऽवतरन्तस्ते दृष्ट्वा देवाधिनायकम् ॥ ४३
कृत्याकृत्यमजानन्तः विवशेनान्तरात्मना । इदमूचुरनूचानाः गृणन्तो ब्रह्मशाश्वतम् ॥ ४४
किमिदं येन सृजसि येन पालयसि प्रभो । अत्सि येनानुगृह्णासि वदैतद्रूपमीश्वर ॥ ४५
क्रियावानक्रियस्त्वं हि कलावानपि निष्कलः । निरवद्योपि रूपत्वे नीलकण्ठो निरञ्जनः ॥ ४६
सदाशिवोऽसि नित्यत्वान्निर्मलत्वाच्च विश्रुतः । त्वमेकोसि परंब्रह्म नेह नानास्ति किञ्चन ॥ ४७
रुद्रस्त्वं भवसि ब्रह्मा त्वं विष्णुस्त्वं प्रजापतिः । त्वंस्वाहा त्वंवषट्कारः त्वंयज्ञस्त्वं तनूनपात् ॥ ४८
जानीमो न विभो यत्वं नासि कालत्रयेष्वपि । विश्वाधिकोसि विदितो विश्वं भूतमनेकधा ॥ ४९
अतर्क्यैश्वर्यविभवे भवेभुवि महात्मनां । अनुग्रहेण ते भक्तिः भवेदव्यभिचारिणी ॥ ५०

இதி தத்ஸ்துதி ஸந்துஷ்ட: ப்ராஹ முக்தேந்துசேகர: |
க்ருண்ணாமி தேऽத்ரிஜே பாணிம் ச்வ: ஸமேத்ய மஹோத்ஸவே|| 40
த்வத்பித்ருப்யாமநுக்ஞாத: ஸுரஸித்தநிஷேவித: | இதி தத்வா வரம் சம்பு: கைலாஸமகமாச்ரயத் || 41
தத்ர ஸப்தரிஷீனீச: ஸஸ்மார ஸ்மரசாஸன: | ஸ்வமேவ ஸம்பாவயத: மனஸா முனிபுங்கவான் || 42
ஸ்மரணாத் தேவதேவஸ்ய தே ப்ராபு: ஸன்னிதிம் விபோ: |
த்வரயாऽவதரந்தஸ்தே த்ருஷ்ட்வா தேவாதிநாயகம் || 43
க்ருத்யாக்ருத்யமஜானந்த: விவசேனாந்தராத்மனா | இதமூசுரநூசானா: க்ருணந்தோப்ரம்மசாச்வதம் || 44
கிமிதம்யேனஸ்ருஜஸி யேன பாலயஸி ப்ரபோ | அத்ஸி யேனானுக்ருண்ணாஸி வதைதத்ரூபமீச்வர || 45
க்ரியாவாநக்ரியஸ்த்வம்ஹி கலாவானபிநிஷ்கள: | நிரவத்யோऽபி ரூபத்வே நீலகண்டோ நிரஞ்ஜன: || 46
ஸதாசிவோऽஸி நித்யத்வாம் நிர்மலத்வாச்ச விச்ருத: |
த்வமேகோऽஸி பரம்ப்ரம்ம நேஹநானாஸ்தி கிஞ்சன || 47
ருத்ரஸ்த்வம் பவஸிப்ரம்மா த்வம் விஷ்ணுஸ்த்வம் ப்ரஜாபதி: |
த்வம்ஸ்வாஹா த்வம்வஷட்கார: த்வம் யக்ஞஸ்த்வம் தநூநபாத் 48
ஜானீமோ நவிபோயத்வம் நாஸிகாலத்ரயேஷ்வபி | விச்வாதிகோऽஸிவிதித: விச்வம் பூதமனேகதா || 49
அதர்க்யைச்வர்யவிபவே பவே புவி மஹாத்மனாம் | அனுக்ரஹேண தே பக்தி: பவேதவ்யபிசாரிணீ || 50

ஸந்தோஷம் கொண்டு கூறியதாவது — ஓ பார்வதி! நாளைய தினம் கல்யாண மஹோத்ஸவத்தில், உனது தாய் தந்தையர்களால் ஸம்மதிக்கப்பட்டு, தேவர்கள், ஸித்தர்கள், இவர்களுடன் கூடி உன்னை பாணிக்ரஹணம் செய்து கொள்கிறேன். இவ்வாறு வரனை அளித்து பரமசிவன் கைலாஸ மலையை அடைந்தார். (40-41) மன்மதனை தண்டித்த பரமசிவன், தன்னையே தியானம் செய்து கொண்டிருக்கும் சிறந்த ஸப்தரிஷிகளை அப்பொழுது மனதினால் நினைத்தார். (42) தேவர்களுக்கும் தேவனாகிய பிரபு, நினைத்த மாத்திரத்தில் அம்முனிவர்கள் எது செய்யத் தகுந்தது, எது செய்யத்தகாதது, என்பது கூட தெரியாதிருக்கும்படி, உள்ளம் பரவசப்பட்டு, அழிவற்ற பரப்ரும்மத்தை வேத மந்திரத்தால் ஜபித்துக் கொண்டு, தேவர்களுக்கு நாயகனைக் கண்டு, மிகுந்த பரபரப்புடன் விபுவின் ஸன்னிதியை அடைந்தனர். (43-44) ஓ ஜகதீசா! இப்பொழுது தாங்கள் தரித்துக்கொண்டிருக்கும் உருவமானது, உலகங்களை ஸ்ருஷ்டிப்பதற்கா? ரக்ஷிப்பதற்கா? ஸம்ஹரிப்பதற்கா? அல்லது அனுக்ரஹிப்பதற்கா? என்பதை சொல்லி அருள வேண்டும். (45) தாங்கள் சிருஷ்டிஸ்திதி முதலிய கருமங்களைச் செய்த போதிலும் கர்மமற்றவராயிருக்கின்றீர். ஸகல கலைகளையும் உடையவராயினும் நிஷ்களராக இருக்கிறீர். உருவத்தில் குற்றமற்றவராயினும் கழுத்தில் விஷத்தைக் கொண்டிருக்கிறீர். பாவம் புண்யம் இவைகள் அற்றவராயுமிருக்கிறீர். (46) நித்யமாகவும், அழுக்கற்றவராகவும், இருப்பதால் எப்பொழுதும் மங்களமூர்த்தி யென ப்ரஸித்திபெற்றிருக்கிறீர். நீர் ஒருவரே பரபிரும்மம். வேறு பற்பல உண்டென்பது இல்லையே. (47) நீரே ருத்ரன், நீரே பிரும்மா, நீரே விஷ்ணு, நீரே எல்லா பிரஜைகளுக்கும் அதிபதி, நீரே ஸ்வாஹாவஷட் இவைகளின் வடிவம், நீரே யாகம், நீரே அக்னி. (48) ஓ பிரபுவே, தாங்கள் முக்காலத்திலுமிருப்பவர் என நாங்கள் அறிவோம். உலகிலுள்ள மகாத்மாக்களால் சகல புவனங்களுக்கும் மேற்பட்டவரென்றும், அளவற்ற ஐசுவரியங்களையுடைய மஹேச்வரனாகிய உம்மிடமிருந்தே பிரபஞ்சம் அநேக விதமாய் உண்டாகி இருக்கின்றதென்றும்

अधीतस्य सदाऽस्माभिः वेदस्यानुष्ठितस्य च । तपसश्च फलं भूरि यस्य स्मरणपात्रताम् ॥ ५१
इत्येवं कथयन्त ईशितुरिमे देवस्य शंभोः क्षणात् संप्रापुर्निलयं गिरौ गिरिवरे कैलासशैले द्विजाः ।
भक्तानुग्रहतत्परस्य सततं रुद्रस्य रुद्रावणात् नन्दीशं वरगोपुराङ्कणगतं नेमुः प्रहृष्टान्तराः ॥ ५२
मुनिवरगदितां स्तुतिं गृणन्तः शिवदयितां श्रवणेन संपिबन्तः ।
भुविसुतदयिता पशून् लभन्ते सकलमपि सुखं पुनश्च मुक्तिम् ॥ ५३
इति श्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
संभवकाण्डे चतुर्दशोऽध्यायः ॥

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥

श्रीपरमेश्वरेण सप्तऋषि प्रेषणम् ॥

सूतः — ततस्ते सप्तमुनयः शंभोर्दर्शनकांक्षिणः । को देवावसरोऽद्यीति प्रार्थयन्ति स तं द्विजाः ॥ १
लब्धानुज्ञोऽथ देवस्य शिलादमुनिसंभवः । प्रावेशयदमून् विप्रान् निकटं तस्य धूर्जटेः ॥ २

அதீதஸ்ய ஸதாऽஸ்மாபி: வேதஸ்யாநுஷ்டிதஸ்ய ச। தபஸச்ச பலம்பூரி யஸ்ய ஸ்மரணபாத்ரதாம் ॥ 51
இத்யேவம் கதயந்த ஈசிதுரிமே தேவஸ்ய சம்போ: க்ஷணாத்
ஸம்ப்ராபுர்நிலயம் கிரௌ கிரிவரே கைலாஸசைலே த்விஜா: ।
பக்தானுக்ரஹதத்பரஸ்ய ஸததம் ருத்ரஸ்ய ருத்ராவணாத்
நந்தீசம் வரகோபுராங்கணகதம் நேமு: ப்ரஹ்ருஷ்டாந்தரா: ॥ 52
முநிவரகதிதாம்ஸ்துதிம்க்ருணந்த: சிவதயிதாம் ச்ரவணேன ஸம்பிபந்த: ।
புவிஸுததயிதா பசூன் லபந்தே ஸகலமபிஸுகம் புனச்ச முக்திம் ॥ 53

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
ஸம்பவகாண்டே சதுர்தசோऽத்யாய: ॥

॥ அத பஞ்சதசோऽத்யாய: ॥

ஸ்ரீ பரமசிவன் பார்வதியை வரிப்பதற்கு ஸப்தரிஷிகளை அனுப்புதல்.

ஸூத:— ததஸ்தே ஸப்தமுனய: சம்போர்தர்சன காங்க்ஷிண: ।
கோ தேவாவஸரோஹீதி ப்ரார்த்தயந்திஸ்ம தம் த்விஜா: ॥ 1
லப்தாநுக்ஞோऽத தேவஸ்ய சிலாதமுநிஸம்பவ: । ப்ராவேசயதமூன்விப்ரான் நிகடம் தஸ்ய தூர்ஜடே: 2

அறியப்படுகின்றீர். (49½) தங்கள் மீது அகலாது பக்தி என்றும் இருக்க வேண்டுமென அனுக்ரஹிக்க வேண்டும். (50) தங்களுடைய நினைவுக்கு நாங்கள் பாத்திரர்களாக ஆனது, எப்பொழுதும் நாங்கள் வேதத்தை அத்யயனம் செய்ததாலும், தவம் செய்ததாலும், ஏற்பட்ட சிறந்த பயனைத்தவிர வேறில்லை. (51) ஓ பிராம்மணர்களே! இம்முனிவர்கள் இவ்வாறாக கூறிக்கொண்டு, மலைகளில் சிறந்ததாகிய கைலாஸ மலையில் உள்ள தேவனும், ஈசனுமான சம்புவினுடைய ஆலயத்திற்கு, ஓர் க்ஷணத்தில் சென்று, பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்வதில் எப்பொழுதும் கவலை கொண்டவரும், எல்லா ஆதி வ்யாதிகளையும் போக்குவதனால் ஸ்ரீ ருத்ரனென்ற பெயர் கொண்டவருமான ஸ்ரீ பரமசிவனுடைய கட்டளையின்படி கோபுர வாசற்படியில் இருக்கும் நந்திகேசனை, களிப்புற்ற மனமுடையவர்களாய் நமஸ்கரித்தனர். (52) சிறந்த முனிவர்களால் கூறப்பட்டதும், ஸ்ரீ பரமசிவனுக்கு மிகவும் பிரியமுமாகிய இந்த ஸ்தோத்திரத்தை படிக்கின்றவர்களும், கேட்டு ஆனந்திக்கின்றவர்களும், இவ்வுலகில் புத்திரர்கள், மனைவிகள், பசுக்கள், முதலிய ஸகல ஸுகத்தையும், பின்பு முக்தியையும் அடைகின்றனர். (53).

பதினான்காவது அத்யாயம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்யாயம்

ஸூதர் கூறுகிறார் — ஓ பிராம்மணர்களே! பிறகு அந்த ஸப்தரிஷிகள் பரமசிவனைக் காண ஆவல் கொண்டு ஓ தேவா சமயம் யாதென்று நந்திகேசனைப் பார்த்து வேண்டினார்கள். (1) சிலாத முனியின் புத்ரரான நந்திகேசனும் ஸ்ரீ பரமசிவனுடைய உத்திரவைப் பெற்றுக் கொண்டு இந்த ப்ராம்மணர்களை

प्रणम्य दद्दशुर्देवं आरादेव पिनाकिनम् । विराजमानं विप्रेन्द्राः युवानमतिकोमळम् ॥ ३
मण्डितं मण्डनैर्दिव्यैः विचित्रकुसुमोज्ज्वलम् । प्रमोदविवशांगास्ते हर्षाश्रुव्याकुलेक्षणाः ॥ ४
स तान्निनाय शैलादिः मुनीन् सविधमीशितुः । ते विलोक्यातिनिकटे चेकितानमजं प्रभुम् ॥ ५
हृत्स्वेवं मेनिरे सत्यं एनमालोक्य मन्मथः । व्रीळयानङ्गतां प्राप्तः नाळीकेक्षणकीलया ॥ ६
नाळीकनेत्रोऽमुं वीक्ष्य नारीभावमुपागतः । नास्मिन्नाकिमुनीन्द्राणां चित्रं पत्न्योऽपि मोहिताः ॥ ७
पुंसामपि मनांस्येवं स्त्रीणां किमु जगत्पतौ । इत्येवं वीक्ष्य ते भूयो वीक्ष्य वीक्ष्याक्षियुग्मळैः ॥ ८
प्रणेमुर्भावितात्मानः भवं भवभयापहम् । तानुवाच महादेवः वाचा मधुरवर्णया ॥ ९
ईश्वरः — निषीदन्तु भवन्तोऽत्र भक्त्या मय्यतुलामनाः । आसनेषु महाभागाः यूयं मे हृदयङ्गमाः ॥ १०
इति वादिनि देवेशे सर्वे प्राञ्जलयस्तदा । निषेदुरासनेष्वेते यथा वृद्धपरंपराः ॥ ११
ततस्तेषां समुत्थाय वसिष्ठो वदतांवरः । व्यजिज्ञिपन्महेशाय प्राञ्जलिः प्रणतस्तदा ॥ १२

ப்ரணம்ய தத்ருசுர்தேவம் ஆராதேவ பிநாகிநம் | விராஜமானம் விப்ரேந்த்ரா: யுவாநமதிகோமளம் || 3
மண்டிதம் மண்டனைர்திவ்யை: விசித்ர குஸுமோஜ்வலம் |
ப்ரமோதவிவசாங்காஸ்தே ஹர்ஷாச்ருவ்யாகுலேக்ஷணா: || 4
ஸதான் நிநாய சைலாதி: முநீன் ஸவிதமீசிது: | தே விலோக்யாதிநிகடே சேகிதானமஜம் ப்ரபும் || 5
ஹ்ருத்ஸ்வேவம் மேநிரே ஸத்யம் ஏனமாலோக்ய மன்மத: |
வ்ரீளயாநங்கதாம் ப்ராப்த: நாளீகேக்ஷணகீலயா || 6
நாளீகநேத்ரோऽமும் வீக்ஷ்ய நாரீபாவமுபாகத: |
நாஸ்மின்னாகிமுநீந்த்ராணாம் சித்ரம் பத்ந்யோऽபி மோஹிதா: || 7
பும்ஸாமபி மனாம்ஸ்யேவம் ஸ்த்ரீணாம் கிமுஜகத்பதௌ |
இத்யேவம் வீக்ஷ்ய தேபூய: வீக்ஷ்ய வீக்ஷ்யாக்ஷியுக்மளை: || 8
ப்ரணேமு: பாவிதாத்மான: பவம் பவபயாபஹம் | தாநுவாச மஹாதேவ: வாசா மதுரவர்ணயா || 9
ஈச்வர:— நிஷீதந்து பவந்தோऽத்ர பக்த்யா மய்யதுலா மனா: |
ஆஸநேஷு மஹாபாகா: யூயம் மே ஹ்ருதயங்கமா: || 10
இதி வாதிநி தேவேசே ஸர்வே ப்ராஞ்ஜலயஸ்ததா | நிஷேதுராஸநேஷ்வேதே யதா வ்ருத்தபரம்பரா: || 11
தத: தேஷாம்ஸமுத்தாய வஸிஷ்டோ வததாம்வர: | வ்யஜிக்ஞபன் மஹேசாய ப்ராஞ்ஜலி: ப்ரணத: ததா

பரமசிவனது ஸமீபத்திற்கு அழைத்துச் சென்றார். (2) முனிவர்கள், பினாகமென்ற வில்லை கையில் தரித்தவரும், மிக சுந்தர வாலிபரும், ப்ரகாசிக்கின்றவரும், திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், பலவித புஷ்பங்களால் விளங்குகின்றவருமான தேவனை வெகு தூரத்திற்கு அப்பாலே கண்டு நமஸ்கரித்து ஆனந்தத்தால் மெய்மறந்தவர்களாகியும், ஆனந்தக் கண்ணீர் நிரம்பிய கண்களை உடையவர்களாகவும் ஆனார்கள். (3–4) அந்த நந்திகேசர் அப்படிப்பட்ட முனிவர்களை ஈசனருகில் சேர்ப்பித்த பிறகு அவர்கள் ஞானியும் பிறப்பற்றவருமான பிரபுவை ஸமீபத்தினின்று கண்டு உள்ளத்தில் நினைத்துக் கொண்டது யாதெனில், இச்சுந்தரமூர்த்தியைக் கண்டதும் மன்மதன் வெட்கத்தினால் உண்மையாக தேகத்தை இழந்திருக்க வேண்டுமேயன்றி, நெத்திக் கண்ணெருப்பினால் மாண்டானென்பது பொய்யே. (5–6) தாமரைக் கண்ணனாகிய விஷ்ணு இவரழகைக் கண்டு பெண்ணுருவம் கொண்டிருக்கிறார். (குறிப்பு: இக்கதை மேலே வரும் தக்ஷகாண்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.) இவரைக் கண்டதும் தேவ பத்தினிகளும், முனி பத்னிகளும் மோகித்து விட்டார்களென்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. (7) அழகு படைத்த ஜகதீசனைக் கண்டு புருஷர்களது மனம் இவ்வாறாக மயங்குகையில் பெண்களுடைய மனதைப் பற்றி யாது கூறவேண்டும். ஸப்தரிஷிகள் இவ்வாறாக நினைத்து மலர்ந்த விழிகளால் பார்த்துப் பார்த்து (8) ஸம்ஸார பயத்தைப் போக்கும் ஸ்ரீ பரமேச்வரனை தியானித்து நமஸ்கரித்தனர். மகாதேவர் இனிமையான சொற்களால் அவர்களைப் பார்த்து கூறினார். (9) ஈச்வரன் கூறுகிறார் — என் மீது ஒப்பற்ற பக்தி கொண்டவர்களும், நமது மனதிற்கு இசைந்தவர்களும், மஹாபாக்யசாலிகளுமாகிய நீங்கள், ஆஸனங்கள் மீது உட்காருங்கள். (10) இம்மாதிரி தேவேசன் கூறியபொழுது, யாவரும் அஞ்ஜலி செய்து கொண்டு, அவரவர்கள் வயதிற்குத் தக்கவாறு வரிசையாக அமர்ந்தனர். (11) பிறகு அவர்களுள் பேசுவதில் திறமைவாய்ந்த வஸிஷ்ட முனிவர் எழுந்து அஞ்சலி செய்து நமஸ்க்கரித்து, மஹேச்வரரிடம் தெரிவித்தார். (12) **ஓ ஜகதீச! எவனுடைய**

यन्मनःस्मरतीश त्वां स तु धन्यतमाग्रणीः । किमु देव स्मृतानां नो भविता भाग्यगौरवम् ॥ १३
तदिमांश्छाधि भगवन् किंकरांस्तव शंकर । अथवा रक्ष रक्षास्मान् अनन्यान् भवसागरात् ॥ १४
सूतः — अथ देवोऽवदत् यूयं यदर्थमिह संस्मृताः । अहं मूर्तिभिरष्टाभिः अनुगृह्णामि सर्वशः ॥ १५
तं मां विष्णुमुखा देवाः प्रार्थयन्ति स्म भूसुराः । अरिविप्रकृतास्तेषां शान्तयेऽस्मत्तनूभवम् ॥ १६
सेनान्यं शान्तये तेषां मुनीन्द्रास्सुरविद्विषाम् । प्रतिज्ञातं च तेषान्तत् ओमित्येव मयापि च ॥ १७
असुरैस्त्रिभिरद्यापि पीड्यन्ते देवपुङ्गवाः । अहमुत्पाद्य सेनान्यं शूरपद्मं दुरासदम् ॥ १८
संहरिष्यामि सहजैः त्रिपुराणीव पूर्ववत् । इति दत्ताभया जग्मुः देवा विष्णुपुरोगमाः ॥ १९
सोऽहमादातुमिच्छामि दारानद्रीन्द्रसंभवाम् । साऽपि शक्तिर्मदीयैव स्वेच्छाज्ञानक्रियात्मिका ॥ २०
अविभक्ता विभक्तेव भाति भानोरिव प्रभा । तथाऽपि मां समुद्दिश्य तताप परमं तपः ॥ २१
तेनाहमस्या इच्छामि पाणिग्रहणमात्मनः । तदर्थमद्रिरासाद्य प्रष्टव्यो मुनिपुङ्गवैः ॥ २२

யந்மன: ஸ்மரதீசத்வாம் ஸ து தன்யதமாக்ரணீ: | கிமு தேவஸ்ம்ருதாநாம் ந: பவிதா பாக்யகௌரவம் 13
ததிமாம்ச்சாதி பகவன் கிங்கரான் தவ சங்கர | அதவா ரக்ஷரக்ஷாஸ்மான் அனன்யான் பவஸாகராத் || 14
ஸூத :— அத தேவோऽவதத்யூயம் யதர்த்தமிஹ ஸம்ஸ்ம்ருதா: |
அஹம் மூர்த்திபிரஷ்டாபி: அனுக்ருண்ணாமி ஸர்வச: || 15
தம் மாம் விஷ்ணுமுகா தேவா: ப்ரார்த்தயந்தி ஸ்ம பூஸுரா: |
அரிவிப்ரக்ருதாஸ்தேஷாம் சாந்தயேऽஸ்மத்தநூபவம் || 16
ஸேநாந்யம் சாந்தயே தேஷாம் முநீந்த்ரா: ஸுரவித்விஷாம் |
ப்ரதிக்ஞாதஞ்ச தேஷாம் தத் ஓமித்யேவ மயாபி ச || 17
அஸுரைஸ்த்ரிபிரத்யாபி பீட்யந்தே தேவபுங்கவா: | அஹமுத்பாத்ய ஸேநாந்யம் சூரபத்மம் துராஸதம் 18
ஸம்ஹரிஷ்யாமி ஸஹஜை: த்ரிபுராணீவ பூர்வவத் | இதி தத்தாபயா ஜக்மு: தேவா விஷ்ணுபுரோகமா: 19
ஸோऽஹமாதாதுமிச்சாமி தாராநத்ரீந்த்ரஸம்பவாம் |
ஸாऽபி சக்திர் மதீயைவ ஸ்வேச்சாக்ஞான க்ரியாத்மிகா || 20
அவிபக்தா விபக்தேவ பாதி பாநோரிவ ப்ரபா | ததாऽபி மாம் ஸமுத்திச்ய ததாப பரமம் தப: || 21
தேநாஹமஸ்யா இச்சாமி பாணிக்ரஹணமாத்மன: | ததர்த்தமத்ரிராஸாத்ய ப்ரஷ்டவ்யோ முனிபுங்கவை:

द्वारदेशे ततः श्वेतं कलधौताचलप्रभम् । कणत्किंकिणिसन्नादैः बधिरीकृतदिङ्मुखम् ॥ २९

ஆரப்ய ராஜதம் சைலம் ஆஹிமாத்ரே: நிரந்தரம் |
சாமராண்யப்ஸரஸ்த்ரீஷு க்வணத் கங்கண நிஸ்வனை: || 20
வீஜ்யமானாஸு ஸர்வத்ர தாளவ்ருந்தாநி ஸாதரம் |
ஸுகந்திஷு மனோக்ஞேஷு ஸம்ஸிக்தேஷு ஹிமாம்புஷு || 21
கஸ்தூரீபங்கலிப்தேஷு கர்பூரஸிகதேஷு ச | மார்க்கேஷு பேநிலாம்போதி நிபச்சத்ராவ்ருதேஷ்வபி || 22
பதாகா வைஜயந்தீனம் பங்திபிர் நிசிதேஷு ச | தூபிதேஷு ச ஸர்வத்ர தூபைரகருஸம்பவை: || 23
முனீந்த்ரேஷு ததா வேதமுகரேஷு த்விஜாதிஷு |
ஸுமங்கலீஷு யோஷித்ஸு சோபனோத்தாமகீதிஷு || 24
ஜயசப்தபரேஷ்வேவம் ஸூதமாகதவந்திஷு |
ப்ரமதேஷு ததா வேத்ரபாணிஷூத்ஸாரயத்ஸு ச || 25
ருத்ரகந்யாஸஹஸ்ரேஷு ஸ்யந்தனேஷ்வசலேஷ்வத |
ப்ரந்ருத்யந்திஷு ஸர்வேஷு பத்தாஞ்ஜலிஷு யோகிஷு || 26
கரம் கரேண ஸம்பாவ்ய நந்தினச்சந்த்ரசேகர: |
ஆக்ரம்ய பாதுகே சத்ரே ஸர்வரத்னோப சோபிதே || 27
ஸிம்மாஸநாச்சனை: தஸ்மாத் அதிசக்ராம சோபனாத் |
கக்ஷ்யாஸ்ஸப்தகணம்ஸ்தத்ர தத்ர ஸம்ஸ்தாப்ய ரக்ஷகான் || 28
த்வாரதேசே தத: ச்வேதம் களதௌதாசலப்ரபம் |
க்வணத்கிங்கிணிஸன்னாதை: பதிரீக்ருததிங்முகம் || 29

மலையாகிற கயிலைமலை முதல் ஹிமயம் வரை அப்ஸரஸ்த்ரீகள் இடைவிடாது நின்று கொண்டு கைக் கங்கணங்கள் கிலுகிலு என ஒலிக்கும்படி சாமரங்களை வீசினார்கள். (20) அவ்விதமே எங்கும் விசிறி களைப் பற்றிக் கொண்டு மிக ஆதரவுடன் விசிறினார்கள். வழிதோறும் சிறந்த மணமுள்ள பன்னீர் தெளித்து நனைத்து கஸ்தூரிக் குழம்பால் மெழுகி பச்சக்கற்பூரப் பொடிகளை மணலாக நிரவியும் நுரை நிரம்பிய ஸமுத்ரம் போன்று வெண்கொடைகளால் நிறையப் பெற்றும் (21–22) கொடிகள் அச்மான கிரிகள் இவைகளின் வரிசைகளால் அலங்கரிக்கப்பட்டும் எங்கும் பரிமளம் வீசும் அகில் கட்டைகளால் புகைக்கப்பட்டும் இருந்தது. (23) ப்ராம்மணர்களான முனிவர்கள் வேதம் ஓதி நின்றார்கள். ஸுமங்கலி ஸ்த்ரீகள் மங்களகரமான கீதங்களைப்பாடி நின்றார்கள். (24) கட்டியக்காரர்கள் ஹரிக்காரர்கள் வந்திகள் இவர்கள் ஜயாவிஜயீபவ என்றார்கள். பிரமதகணங்கள் எல்லாம் பிரம்புகளை கைகளில் ஏந்தி கூட்டங் களை விலக்கி நின்றார்கள் (25) ஆயிரக்கணக்கான ருத்ரகன்னிகைகள் அசைவற்றுச் செல்லுகின்ற ரதங்களில் நர்த்தனம் செய்தார்கள். யோகீச்வரர்கள் அஞ்ஜலி செய்து நின்றார்கள். இவ்வித வைபவங்களோடு நந்திபகவானின் கைகளைப் பற்றியவராய் ஸ்ரீ சந்த்ரசேகரன் பலவித ரத்னங்கள் இழைக்கப்பட்ட பாதுகைகளையும் கொடையையும் தரித்து மெல்ல எழுந்தருளி, ஏழு ப்ராகாரங்களிலும் காவலுக்காக கணங்களை இருக்கச் செய்து (26-28) முகத்துவாரத்திலிருக்கின்ற வெண்மை நிறமுள்ள தும் வெள்ளிமலைபோல் காந்தி உள்ளதும் நாதத்தினால் நாலா பக்கங்களையும் செவிடாகச் செய்யும் பொன்

चामरावलिभिर्दीप्तं मणिपल्ययनाञ्चितम् । ककुदालंकृतं पीनस्कन्धं रक्तायतेक्षणम् ॥ ३०
अनुगृह्याङ्घ्रिणैकेन पृष्ठं कुंभोदरस्य वै । आरुरोहाद्रिसंकाशं महोक्षं रक्षकस्सताम् ॥ ३१
अपठन् योगिनस्सिद्धाः तापसाश्च सुरेश्वराः । वैदिकानि च सूक्तानि जयशब्दादि मङ्गलैः ॥ ३२
अदितिश्च दितिश्चैव दनुः कद्रूररुन्धती । तुष्टिः पुष्टिश्च कीर्तिश्च स्वधा स्वाहा मतिर्धृतिः ॥ ३३
सरस्वतीच लक्ष्मीश्च सर्वा वै लोकमातरः । देवानां पत्नयश्चैव मुनीनां पत्नयस्तथा ॥ ३४
जगुस्तास्सुस्वरं शम्भोः अपदानानि सर्वशः । गन्धर्वाः किन्नरास्सिद्धाः विद्याधर महोरगाः ॥ ३५
हाहा हूहूश्च महितौ तुम्बुरुर्नारदस्तथा । वैणिकीभिश्च ते सर्वे जगुः कर्माणि वीणया ॥ ३६
कुम्भोदरो गणाधीशः शंभोरन्तिकमाश्रितः । छत्रं शतशलाकाढ्यं चन्द्रमण्डल सन्निभम् ॥ ३७
बभार प्रेमसंस्निग्धहृदयोऽतिमहत्तरम् । तल्लंबिमौक्तिकस्रग्भिः बभौ सर्वेश्वरेश्वरः ॥ ३८
उत्तमाङ्गे पतङ्गः इव पूर्णेन्दुमण्डलात् । खे खेलगामी तं देवं उवाह वृषभेश्वरः ॥ ३९

சாமராவலிபிர்தீப்தம் மணிபல்யயநாஞ்சிதம் | ககுதாலங்க்ருதம் பீநஸ்கந்தம் ரக்தாயதேக்ஷணம் || 30
அனுக்ருஹ்யாங்க்ரிணைகேந ப்ருஷ்டம் கும்போதரஸ்ய வை |
ஆருரோஹாத்ரிஸங்காசம் மஹோக்ஷம் ரக்ஷகஸ்ஸதாம் || 31
அபடன் யோகினஸ்ஸித்தா: தாபஸாச்ச ஸுரேச்வரா: |
வைதிகாநிச ஸூக்தாநி ஜயசப்தாதி மங்களை: || 32
அதிதிச்ச திதிச்சைவ தனு: கத்ரூரருந்ததீ |
துஷ்டி: புஷ்டிச்ச கீர்திச்ச ஸ்வதா ஸ்வாஹா மதிர்த்ருதி: || 33
ஸரஸ்வதீச லக்ஷ்மீச்ச ஸர்வாவை லோகமாதர: |
தேவானும் பத்னயச்சைவ முனீனும் பத்னயஸ்ததா || 34
ஜகுஸ்தா: ஸுஸ்வரம் சம்போ: அபதாநுநி ஸர்வச: |
கந்தர்வா: கின்னராஸ்ஸித்தா: வித்யாதர மஹோரகா: || 35
ஹாஹா ஹூஹூச்ச மஹிதௌ தும்புருர் நாரதஸ்ததா |
வைணிகீபிச்ச தே ஸர்வே ஜகு: கர்மாணி வீணயா || 36
கும்போதரோ கணுதீச: சம்போரந்திகமாச்ரித: |
சத்ரம் சதசலாகாட்யம் சந்த்ரமண்டல ஸன்னிபம் || 37
பபார ப்ரேமஸம்ஸ்னிக்த ஹ்ருதயோऽதி மஹத்தரம் |
தல்லம்பிமௌக்திகஸ்ரக்பி: பபௌ ஸர்வேச்வரேச்வர: || 38
உத்தமாங்கே பதங்கக: இவ பூர்ணேந்துமண்டலாத் |
கே கேலகாமீ தம்தேவம் உவாஹ வ்ருஷபேச்வர: || 39

மணிகளை உடையதும் (29) அனேக சாமரங்கள் கட்டப்பட்ட ஜேணத்தைக் கொண்டதும் முதுகில் உள்ள பெரிய கொண்டையினுல் விளங்குகிறதும், பருத்த கழுத்தை உடையதும் சிவந்து நீண்ட கண்களை உடையதும் பர்வதத்திற்கு நிகராகியதுமான மஹா வ்ருஷபராஜன்மீது ஏறுவதற்காக ஸாதுக்களைக் காக்கும் பரமசிவன் கும்போதரன்மீது ஒரு காலை வைத்து ஏறினுர். (30-31) யோகிகள், ஸித்தர்கள் தபஸ்விகள் ஸுரேச்வரர்கள், வேதத்தில் உள்ள மங்களமான ஸூக்தங்களை ஜயாவிஜயிபவா என்ற சப்தங்களோடு ஜபித்தனர். அதிதி திதி தனு கத்ரு அருந்ததி துஷ்டி புஷ்டி கீர்த்தி ஸ்வதா ஸ்வாஹா மதி த்ருதி ஸரஸ்வதி லக்ஷ்மி முதலியவர்களும் ஸகல லோகமாதாக்களும் தேவபத்னிகளும் ரிஷி பத்னிகளும் (32-34) ஸ்ரீ சம்புவின் ப்ரபாவங்களைப் பற்றிய திவ்ய கீதங்களை ஸுஸ்வரத்துடன் பாடினுர்கள். கந்தர்வர்கள், கின்னரர்கள் ஸித்தர்கள், வித்யாதரர்கள் மஹோரகர்கள் ப்ரஸித்தர்களான ஹாஹா ஹூஹூ என்ற தேவலோகத்துப் பாடகர்களும் தும்புருமுனிவர் நாரதமுனிவர் இவர்கள் எல்லோரும் வீணை வாத்தியத்தில் சிறந்த மாதர்களுடன் பரமேச்வரனுடைய குணுதிசயங்களை வீணையில் வாசித்தனர். (35-46) கணுதிபதியான கும்போதரன் என்பவன் ஸ்ரீ சம்புவின் பக்கத்தில் நின்று நூறு கம்பிகளால் அமைக்கப்பட்ட பெரிய கொடையை (37) பக்தியினுல் நனைந்த மனதுடன் பிடித்தான். அக்குடையைச் சுற்றிலும் நுனியில் தொங்குகின்ற முத்துமாலைக் குஞ்ஜங்களினுல் ஸ்ரீ ஸர்வேச்வரனை பகவான் (38) சந்திரமண்டலத்திலிருந்து கங்கையானது சிரஸில் விழுவதுபோல் விளங்கினுர். (38½) மிக்க மஹிமைவாய்ந்த வ்ருஷபமானது சாமரங்கள் கட்டப்பட்டதும் நிமிர்ந்து செல்லுகையில் மேகங்கள்

धुन्वन् मुहुः प्रोतघने विषाणे धृतचामरे । आससाद क्षणेनैव कैलासादचलेश्वरम् ॥ ४०
हिमवानपि शैलौघैः बन्धुभिः पुत्रपौत्रकैः । अभ्युज्जगाम नगरात् वितानध्वजमण्डितात् ॥ ४१
समीयतुस्तदाऽन्योन्यं ओघाविव समुद्रयोः । सैन्ये देवाधिदेवस्य पर्वतस्य च तत्क्षणात् ॥ ४२
मैनाकेन च पुत्रेण क्रौञ्चेन च हिमाचलः । प्रणम्य देवदेवेशं प्रावेशयदसौ पुरम् ॥ ४३
ओषधिप्रस्थमुत्तुङ्ग गोपुरप्रकराञ्चितम् । रथनागतुरंगौघ पदातिपरिसंकुलम् ॥ ४४
भेरीमृदंगमुरव ध्वनप्रतिविनादितम् । प्रासादं वनिताः प्रापुः ईशालोकनतत्पराः ॥ ४५
त्यक्तकार्या मुदाऽत्यर्थं अर्धमण्डितविग्रहाः । उत्सृष्टनीवीवसनं सव्येनादाय चार्भकम् ॥ ४६
अन्येन काचित् त्वरया पाणिना प्राप जालकम् । अन्या संभाव्य नयनं अञ्जनेन शलाकया ॥ ४७
अन्यत् विस्मृत्य नयनं आगवाक्षं जगाम सा । परा विश्लथधम्मिल्ला स्रस्तवस्त्रविभूषणा ॥ ४८
वातायनपथं पुष्पैः आतनोदञ्चितं मुदा । अलक्तकेन संभाव्य पादमेकमथापरा ॥ ४९

துன்வன் முஹு: ப்ரோதககனே விஷாணே த்ருதசாமரே ।
ஆஸஸாத க்ஷணேனைவ கைலாஸாதசலேச்வரம் ॥ 40

ஹிமவானபி சைலௌகை: பந்துபி: புத்ரபௌத்ரகை: ।
அப்யுஜ்ஜகாம நகராத் விதானத்வஜ மண்டிதாத் ॥ 41

ஸமீயது: ததாऽந்யோந்யம் ஓகாவிவ ஸமுத்ரயோ: ।
ஸைந்யே தேவாதிதேவஸ்ய பர்வதஸ்ய ச தத்க்ஷணாத் ॥ 42

மைனாகேந ச புத்ரேண க்ரௌஞ்சேந ச ஹிமாசல: ।
ப்ரணம்ய தேவதேவேசம் ப்ராவேசயதஸௌ புரம் ॥ 43

ஓஷதிப்ரஸ்தமுத்துங்க கோபுரப்ரகராஞ்சிதம் । ரதநாகதுரங்கௌக பதாதிபரிஸங்குலம் ॥ 44
பேரீம்ருதங்கமுரவ த்வனப்ரதிவினாதிதம் । ப்ராஸாதம் வநிதா: ப்ராபு: ஈசாலோகன தத்பரா: ॥ 45

த்யக்தகார்யா: முதாऽத்யர்த்தம் அர்தமண்டித விக்ரஹா: ।
உத்ஸ்ருஷ்டநீவீ வஸனம் ஸவ்யேநாதாய சார்பகம் ॥ 46

அன்யேந காசித் த்வரயா பாணிநா ப்ராப ஜாலகம் ।
அன்யா ஸம்பாவ்ய நயநம் அஞ்ஜனேந சலாகயா ॥ 47

அன்யத் விஸ்ம்ருத்ய நயநம் ஆகவாக்ஷம் ஜகாம ஸா ।
பரா விச்லததம்மில்லா ஸ்ரஸ்தவஸ்த்ர விபூஷணா ॥ 48

வாதாயநபதம் புஷ்பை: ஆதநோதஞ்சிதம் முதா । அலக்தகேந ஸம்பாவ்ய பாதமேகமதாபரா ॥ 49

கோர்க்கப்படலுற்றவையுமான கொம்புகளைத் தரித்துக் கொண்டு ஸ்ரீ பரமேச்வரனை வஹித்துக் கொண்டு ஆகாய மார்க்கமாய் மிக உல்லாஸத்துடன் கயிலைகிரியினின்று ஓர் நொடிக்குள் ஹிமயகிரியை அடைந்தது. (39-40) ஹிமவானும் பந்துவர்க்கங்களாகிய அனேக பர்வதங்களுடனும் புத்ரபௌத்ர மித்ரர்களுடனும் பல அஸமானகிரிகள் த்வஜங்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட பட்டணத்தினின்று எதிர் கொண்டு சென்றார் (41) பர்வத ராஜனுடையவும் பரமசிவனுடையவும் ஸைன்யங்கள் இரு ஸமுத்ரங்கள் ஒன்றோடொன்று சேருவதுபோல் சேர்ந்தன. இந்த ஹிமவான், மைனாகன் க்ரௌஞ்சன் என்ற புத்ரர்களுடன் தேவேசனை வணங்கி (42-43) மிக உயர்ந்த பல கோபுரங்களால் விளங்குகின்றதும் (44) பேரி மிருதங்கம் முரவம் இவ்வாத்தியங்களின் கோஷங்களினால் எதிரொலி கொண்டதுமான ஓஷதிப்ரஸ்தம் என்ற தன் நகரத்தினுள் அழைத்துச் சென்றான். அந்த நகரத்து ஸ்திரீகள் ஸ்ரீ பரமேச்வரனை தரிசிக்க ஆவலுள்ளவர்களாக தங்கள் தங்கள் உப்பிரிகைகளில் ஏறினார்கள் (45) அவர்களோ வென்றால் மிகுந்த பேரானந்தத்தினால் அவரவர் கைவேலையை விட்டவர்களும் அரைகுறையான அலங்காரத்தைக் கொண்டவர்களும் ஒருவள் முடிச்சு அவிழ்ந்து நழுவிய இடுப்பு வஸ்திரத்தை வலதுகையாலும் இளம் குழந்தையை இடது கையாலும் எடுத்துக் கொண்டு மிக பரபரப்புடன் ஜன்னல் அருகில்வந்து நின்றாள். மற்றொருவள் மையிடும் குச்சியினால் ஒரு கண்ணுக்கு மட்டும் மையிட்டுக்கொண்டு (46-47) மற்றொரு கண்ணை மறந்தவளாய் ஜன்னல்வரை வந்துவிட்டாள். ஒருவள் கூந்தலின் முடிச்சு அவிழ்ந்து ஆடையாபரணங்களும் நழுவலுற்று (48) ஆனந்தத்தால் ஓடிச் செல்லுகையில் வழியெல்லாம் மலர்கள் உதிர்ந்துவிழ ஜன்னலுக்கு வந்தாள். மற்றவர்கள் செம்பரக்கு செம்மஞ்சு இவற்றின் சாயங்களினால் ஒரு காலுக்கு அலங்கரித்ததோடு (49) ஓடிச் செல்லுகையில் வழியெல்லாம் அச்சாயம் சொட்ட ஜன்னல் அருகில்

निर्गत्य तावन्मात्रेण वर्त्मचक्रे तदञ्चितम् । पुरे पुरन्ध्रयः प्रासादजालानि स्वैर्मुखांबुजैः ॥ ५०
अम्भोजावरणानीव चक्रुरिन्दीवरेक्षणाः । भर्ताऽपि प्राप जगतां राजमार्गं सुरैस्सह ॥ ५१
ववर्षुः पुष्पवर्षाणि लाजमध्यानि योषितः । विलोक्य देवदेवेशं आसामक्षाणि मानसैः ॥ ५२
साकं सर्वात्मना चक्षुः प्रापतन् सुतरामिव । ऊचुः परस्परं सर्वाः जगदेतच्चराचरम् ॥ ५३
यस्य संकल्पकलितं ब्रुवन्ति मुनियोगिनः । प्रासादाज्जन्तवोऽस्यैव मुक्तिं विन्दन्ति नान्यथा ॥ ५४
बालाऽपि देवदेवेशं बालेन्दुकृतशेखरम् । चचारातो महद्गौरी तपो दुश्चरितं चिरम् ॥ ५५
वयमद्य कृतार्थाःस्मः महतोऽपि महत्तरम् । कारणं कारणानां च दैवतानां च दैवतम् ॥ ५६
आलोक्य चक्षुषा तेन योगिध्येयं सतां गतिम् । इति श्रोत्रसुखावाचः देवः श्रृण्वन् शनैश्शनैः ॥ ५७
प्राप भूभर्त्तुरतुलं भवनं महदुन्नतम् । अवतीर्य वृषादाशु महतो जगतांपतिः ॥ ५८
आक्रम्य पादुके नीते हरिणा रत्ननिर्मिते । आलंब्य ब्रह्मणो हस्तं हरेरपि हरःप्रभुः ॥ ५९

நிர்கத்ய தாவன்மாத்ரேண வர்த்மசக்ரே ததஞ்சிதம் |
புரே புரந்த்ர்ய: ப்ராஸாதஜாலாநி ஸ்வைர்முகாம்புஜை: || 50
அம்போஜ வரணநீவ சக்ரு: இந்தீவரேக்ஷணா: | பர்தாऽபி ப்ராப ஜகதாம் ராஜமார்கம் ஸுரை:ஸஹ || 51
வவர்ஷு: புஷ்பவர்ஷாணி லாஜமத்யாநி யோஷித: |
விலோக்ய தேவதேவேசம் ஆஸாமக்ஷாணி மானஸை: || 52
ஸாகம் ஸர்வாத்மனு சக்ஷு: ப்ராபதன் ஸுதராமிவ | ஊசு: பரஸ்பரம் ஸர்வா: ஜகதேதச்சராசரம் ||
யஸ்ய ஸங்கல்பகலிதம் ப்ருவந்தி முநியோகின: |
ப்ரஸாதாஜ்ஜந்தவோऽஸ்யைவ முக்திம் விந்தந்தி நாந்யதா || 54
பாலாऽபி தேவதேவேசம் பாலேந்துக்ருதசேகரம் |
சசாராதோ மஹத்கௌரீ தபோ துச்சரிதம் சிரம் || 55
வயமத்ய க்ருதார்த்தாஸ்ம: மஹதோऽபி மஹத்தரம் | காரணம் காரணனும் ச தைவதானும் ச தைவதம் 56
ஆலோக்ய சக்ஷுஷா தேந யோகித்யேயம் ஸதாம்கதிம் |
இதி ச்ரோத்ரஸுகாவாச: தேவ: ச்ருண்வன் சனை:சனை: || 57
ப்ராப பூபர்துரதுலம் பவனம் மஹதுன்னதம் | அவதீர்ய வ்ருஷாதாசு மஹதோ ஜகதாம்பதி: || 58
ஆக்ரம்ய பாதுகே நீதே ஹரிணு ரத்னநிர்மிதே |
ஆலம்ப்ய ப்ரம்மணே ஹஸ்தம் ஹரேரபி ஹர:ப்ரபு: || 59

வந்தாள். இவ்வாறு நீலோத்பல புஷ்பம் போன்ற கண்கள் படைத்த பட்டணத்து ஸ்திரீகள் உப்ரிகையின் ஜன்னல்களை, தாமரை போன்ற தங்கள் முகங்களால் மூடப்பட்டவைபோல் செய்தனர். (50½) லோக நாயகனை ஸ்ரீ பரமேச்வரனும் தேவர்களுடன் ராஜவீதியை அடைந்தார். அப்பொழுது ஸ்திரீகள் நெற் பொறிகளை கலந்து புஷ்பங்களை வர்ஷித்தனர். தேவனைக் கண்டதும் அந்த ஸ்திரீகளுடைய இந்த்ரியங்கள் மனதுடன்கூட ஒருமைபட்டு கண்ணுடன் சேர்ந்ததுபோல இருந்தன. அதாவது இமைக் கொட்ட லின்றி கண்ணுனது ஸ்ரீ பகவானைப் பார்த்தது. மற்ற இந்த்ரியங்கள் வேலை செய்யவில்லை எனக்கருத்து. உலகம் யாவும் இவனுடைய ஸங்கல்பத்தால் உண்டாயிற்று, என்றும் ஜீவராசிகள் இவனுடைய ப்ரஸாதத்தாலேயே முக்தியடைகின்றனர்களேயன்றி வேறில்லை எனவும் முனிவர்களும் யோகிகளும் கூறுவ தாக பெண் மக்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். (51-54) ஆதலால்தான் ஸ்ரீ கௌரியும் சிறு பெண்ணுயினும் இளம் சந்திரனை சிரஸில்தரித்த தேவதேவேசனைக் குறித்து நீண்டகாலம் பிறரால் அனுஷ்டிக்க முடியாத மஹத்தான தபஸை செய்தாள் (55) பெரியதற்கெல்லாம் பெரியவரும் காரணங் களுக்கு எல்லாம் காரணரும், தெய்வங்களுக்கு எல்லாம் தெய்வமாக இருப்பவரும் யோகிகளுக்கு த்யானம் செய்யத்தக்கவரும் ஸாதுக்களுக்கு கதியுமான ஸ்ரீ பரமேச்வரனைக் கண்டதும் க்ருதார்த்தர்கள் ஆனோம் என்றனர். இவ்வாறு செவிக்கினிய சொற்களைக் கேட்டுக்கொண்டு பரமசிவன் கிரிராஜனின் ஒப்பற்றதும் மிகப் பெரியதுமான அரண்மனை வாயிலை அடைந்தார். (56-57½) பெரியதான வ்ருஷபத்திலிருந்து ஜகத்பதியான பரமசிவன் சீக்கிரமாக இறங்கி இந்த்ரனுல் கொண்டுவரப்பட்ட ரத்னங்கள் வைத்து இழைக் கப்பட்ட பாதுகைகளின் மீதேறி ப்ரம்மா விஷ்ணு இவர்கள் கைகளைத்தாங்க பட்டணத்து ஸகல ஸ்திரீகளும் இமை கொட்டாமல் பார்க்கும்போது த்ரிபுராரியானவர் பர்வத ராஜனுடைய பெரிய முன்

अवाप महतीं कक्ष्यां द्वारदेशे महीभृतः । सर्वासामक्षिभिस्साकं पुरन्ध्रीणां पुरामरिः ॥ ६०
ततो वेत्रकरो नन्दी जगामाग्रे तदाऽऽदरात् । पठन् जयजयाधीश सावधानो भवार्तिहन् ॥ ६१
निम्नोन्नतप्रदेशौ त्वं सावधानो विलोकय । पर्वतेन्द्रस्य सा पत्नी वरारोहा गिरीशितुः ॥ ६२
प्रक्षाल्य पादौ पयसा गव्येन च कृपानिधेः । अष्टमङ्गळयुक्ताभिः आनिनायान्तरालयम् ॥ ६३
कल्याणमण्टपं शंभोः कारितं विश्वकर्मणा । नानामणिगणैश्चित्रैः अनेकायामविस्तरम् ॥ ६४
रत्नस्तम्भसहस्राढ्यं मत्तवारणिकावृतम् । तन्मध्ये नीलरत्नौघसमाकलितमुन्नतम् ॥ ६५
दिव्य सिंहासनं चारु चतुस्तंभैरलंकृतम् । अनेकादित्यसंकाशं अक्ष्णां प्रसरतस्करम् ॥ ६६
अलंचकार भगवान् भगनेत्रनिपातनः । कालाग्निरुद्रो रुद्रौघैः गणेन्द्रैर्हाटकेश्वरः ॥ ६७
प्रमथाभूतसंघास्ते परिवार्योपतस्थिरे ॥ ६७½

इति श्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
संभवकाण्डे द्वाविंशोऽध्यायः ॥

அவாப மஹதீம் கக்ஷ்யாம் த்வாரதேசே மஹீப்ருத: |
ஸர்வாஸாமக்ஷிபிஸ்ஸாகம் புரந்த்ரீணாம் புராமரி: || 60
ததோ வேத்ரகரோ நந்தீ ஜகாமாக்ரே ததாSSதராத் |
படன் ஜயஜயாதீச ஸாவதானோ பவார்த்திஹன் || 61
நிம்நோன்னத ப்ரதேசௌ த்வம் ஸாவதானோ விலோகய |
பர்வதேந்த்ரஸ்ய ஸா பத்னீ வராரோஹா கிரீசிது: || 62
ப்ரக்ஷாள்ய பாதௌ பயஸா கவ்யேந ச க்ருபாநிதே: |
அஷ்டமங்களயுக்தாபி: ஆநிநாயாந்தராலயம் || 63
கல்யாண மண்டபம் சம்போ: காரிதம் விச்வகர்மணா |
நாநாமணிகணை: சித்ரை: அனேகாயாமவிஸ்தரம் || 64
ரத்னஸ்தம்பஸஹஸ்ராட்யம் மத்தவாரணிகாவ்ருதம் | தன்மத்யே நீலரத்னௌகஸமாகலிதமுன்னதம் || 65
திவ்ய ஸிம்மாஸனம் சாரு சதுஸ்தம்பைரலங்க்ருதம் | அனேகாதித்யஸங்காசம் அக்ஷ்ணாம் ப்ரஸரதஸ்கரம்
அலஞ்சகார பகவான் பகநேத்ரநிபாதன: |
காலாக்னிருத்ரோ ருத்ரௌகை: கணேந்த்ரை: ஹாடகேச்வர: 67
ப்ரமதாபூதஸங்காஸ்தே பரிவார்யோபதஸ்திரே || 67½

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே,
ஸம்பவகாண்டே, த்வாவிம்சோத்யாய:

கட்டை அடைந்தார் (58-60) அப்பொழுது நந்தியானவர் கையில் பிரம்பு கொண்டு ஜயாவிஜயீபவா. ஸம்ஸார தாபத்தைப் போக்குபவரே கொஞ்சம் ஸாவதனமாக வரவேண்டும். மேடுபள்ளங்களைப் பார்த்து கவனத்துடன் வரவேண்டும் என்று உரைத்துக் கொண்டு ஆதரவுடன் முன்பு சென்றார் (61½) பர்வத ராஜனின் அழகுமிக்க பட்டமஹிஷியான மேனையானவள் தயாநிதியின் சரணங்களை நீராலும் பசுவின் பாலாலும் அலம்பினாள். அஷ்டமங்களங்களை பாடுகின்ற ஸ்திரிகளுடன் அரண்மனைக்குள்ளாகச் சென்றார் (62-63) அங்கு விச்வகர்மாவினால் அனேக ரத்னங்களால் நீளத்திலும் அகலத்திலும் மிகப் பெரிதும் ஆயிரக்கணக்கான ரத்னத் தூண்களாலும் கொடுங்கைகளாலும் விளங்குகிறதும் வெகு விசித்ரமாய் அமைக்கப்பட்டதுமான கல்யாண மண்டபத்திற்கு அழைத்துப்போனாள். (64½) அம்மண்டபத்தின் மத்தியில் அனேக நீல ரத்னங்களால் இழைக்கப்பட்டதும் மிக உயரமானதும் நான்கு கம்பங்களோடு மிக அழகாய் அலங்கரிக்கப்பட்டதும் பல ஸூர்யர்களுக்கு ஒப்பானதும் பார்க்கும் கண்களை மற்றெங்கும் செல்ல விடாததுமான திவ்ய ஸிம்ஹாஸனத்தை பகனின் கண்ணை அபஹரித்த பரமசிவன் அமர்ந்து அலங் கரித்தார் (65-66½) அனேக ருத்ரகணங்களுடன் காலாக்னிருத்ரனும் அனேக கணங்களுடன் ஹாடகேச்வரரும் பிரமதகணங்களும் பூதகணங்களும் பக்கத்தில் சூழ்ந்து நின்றனர். (67½)

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ त्रयोविंशोऽध्याय: ॥

श्री पार्वती विवाह: ॥

सूत: — अथासनेषु चित्रेषु देवदेवेश्वराज्ञया । निषेदु: परिवार्येशं शंकरं चन्द्रशेखरम् ॥ १
विष्णुश्च भगवान् ब्रह्मा मघवानपि भास्कर: । अष्टौ च वसवो रुद्रा: आदित्या द्वादशाश्विनौ ॥ २
ब्रह्मर्षयो वसिष्ठाद्या: नारदाद्यास्सुरर्षय: । योगिनस्सनकाद्याश्च सिद्धविद्याधरोरगा: ॥ ३
मातरस्सप्तलोकानां देवानां पत्नयोऽमला: । मुनीनां पत्नयस्सर्वा: तथैवाप्सरसांगणा: ॥ ४
अदितिश्च दितिश्चैव सर्वास्ता दक्षसूनव: । आवृत्यान्तर्महादेवं अतिष्ठन्नासनेष्वमी ॥ ५
अथाद्रिराजो जननीं जगतां सहमेनया । पुरन्ध्रीभिश्च पौराणां अलंचक्रे सुमङ्गलाम् ॥ ६
सुगन्धितैलेनेशान्या: चक्रुरभ्यंगमंगना: । भद्रपीठे महादेवीं प्राङ्मुखीं धृतपंकजाम् ॥ ७
गौरीकल्याणवैभोगं गायन्त्यश्च मुदान्विता: । नानातीर्थैस्समानीतै: अभिषेकमकुर्वत ॥ ८
नदत्सु शंखशृंगेषु भेरीमुरवडिंडिमै: । अलंकृत्य ततो देवीं आनिन्युर्गिरिशान्तिकम् ॥ ९

॥ அத த்ரயோவிம்சோऽத்யாய: ॥

ஸ்ரீ பார்வதீ கல்யாணம்.

ஸூத:— அதாஸனேஷு சித்ரேஷு தேவதேவேச்வராக்ஞயா ।
நிஷேது: பரிவார்யேசம் சங்கரம் சந்த்ரசேகரம் ॥ 1
விஷ்ணுச்ச பகவான் ப்ரம்மா மகவானபி பாஸ்கர: ।
அஷ்டௌச வஸவோ ருத்ரா: 'ஆதித்யா த்வாதசாச்விநௌ ॥ 2
ப்ரம்மர்ஷயோ வஸிஷ்டாத்யா: நாரதாத்யா: ஸுரர்ஷய: ।
யோகின: ஸனகாத்யாச்ச ஸித்தவித்யாதரோரகா: ॥ 3
மாதர: ஸப்தலோகானாம் தேவானாம் பத்னயோऽமலா: ।
முனீநாம் பத்னயஸ்ஸர்வா: ததைவாப்ஸரஸாம் கணா: ॥ 4
அதிதிச்ச திதிச்சைவ ஸர்வாஸ்தா தக்ஷஸூநவ: ।
ஆவ்ருத்யாந்தர் மஹாதேவம் அதிஷ்டன் ஆஸனேஷ்வமீ ॥ 5
அதாத்ரிராஜோ ஜனனீம் ஜகதாம் ஸஹமேனயா । புரந்த்ரீபிச்ச பௌராணாம் அலஞ்சக்ரே ஸுமங்களாம்
ஸுகந்திதைலேநேசான்யா: சக்ருரப்யங்கமங்கணா: ।
பத்ரபீடே மஹாதேவீம் ப்ராங்முகீம் த்ருதபங்கஜாம் ॥ 7
கௌரீகல்யாணவைபோகம் காயந்த்யச்ச முதாந்விதா: । நாநாதீர்தைஸ்ஸமாநீதை: அபிஷேகமகுர்வத 8
நதத்ஸு சங்கச்ருங்கேஷு பேரீமுரவடிண்டிமை: । அலங்க்ருத்ய ததோ தேவீம் ஆனின்யு: கிரிசாந்திகம் 9

இருபத்தி மூன்றாவது அத்தியாயம்.

ஸூதர் கூறுகிறார்— பிறகு தேவதேவேச்வரனுடைய கட்டளையினால் பகவானான விஷ்ணு, ப்ரம்மதேவன், இந்திரன், ஸூரியன், அஷ்டவஸுக்கள், ஏகாதச ருத்ரர்கள், துவாதசாதித்யர்கள், அச்வினி தேவர்கள், வஸிஷ்டர் முதலிய ப்ரம்மரிஷிகள், நாரதர் முதலிய தேவரிஷிகள், ஸனகர் முதலிய யோகிகள், ஸித்தர்கள், வித்தியாதரர்கள், நாகர்கள், சந்திரசேகரனும் சங்கரனுமான ஸ்ரீ பரமேச்வரனைச் சுற்றிலுமுள்ள, விசித்திரமான ஆஸனங்களில் உட்கார்ந்தனர். (1-3) உலகத்திலுள்ள ஸப்தமாதர்கள், அழகுவாய்ந்த தேவர்களின் மனைவிகள், எல்லா முனிவர்களின் மனைவிகள், அவ்விதமே அப்ஸரஸ்ஸுக்களின் கூட்டங்கள், அதிதிதேவி, திதிதேவி, தக்ஷனுடைய எல்லாப் பெண்கள் ஆகிய யாவரும் ஸ்ரீ மஹாதேவனைச் சுற்றிருக்கும் ஆஸனங்களில் வீற்றிருந்தார்கள். (4-5) பிறகு பர்வதராஜன் தனது மனைவியான மேனையுடன் பட்டணத்திலுள்ள ஸுமங்கலி ஸ்த்ரீகளைக்கொண்டு உலகிற்கு மாதாவும் மங்களகரையுமான, பார்வதியை அலங்கரித்தான். (6) ஈசானியான ஸ்ரீ அம்பாளுக்கு நல்ல வாசனையுள்ள தைலங்களால் அப்யங்கஸ்நானத்தை ஸுமங்கலிகள் செய்வித்தனர். மங்களமான ஆஸனத்தில் கிழக்குமுகமாக தாமரைப் பூவை கையில் கொடுத்து உட்காரவைத்து "கௌரீ கல்யாண வைபோகம்" என்று பாடிக்கொண்டு ஸந்தோஷம் கொண்டவர்களாய் பல நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புண்ய தீர்த்தங்களால் மங்கள ஸ்நானம் செய்வித்தார்கள். (7-8) சங்கம், சிருங்கம், பேரீ, முரவம், டிண்டிமம் முதலிய

रराज देव्या देवेशः दिव्यसिंहासने शिवः । मेरोश्शिखर मारूढः रोहिण्या चन्द्रमाइव ॥ १०
(तदाऽलंकारसंयुक्तां नानारत्नैश्च शोभिताम् । सुगन्धिपुष्पमालाढ्यां स्वर्णशृंखलया युताम् ॥ ११
डोलां तत्र स्थितां दृष्ट्वा विष्णुः प्रार्थितवान् शिवम् । भगवन् परमेशान डोलामारुह्य कांचनीम् ॥ १२
देव्या सह विनोदं च कृत्वाऽस्माकं प्रियं कुरु । विष्णवादिभिः प्रार्थितैवं तथेत्युक्त्वाऽऽरुरोह सः ॥ १३
हिमवानपि तां देवीं तत्र स्थाप्य च पार्श्वके । तुम्बुरुर्नारदश्चैतौ गायमानौ तदा मुदा ॥ १४
पश्चान्मङ्गळदीपैश्च पूजां चक्रुश्च लौकिकैः । मेनाऽपि सहसा पश्चात् सपत्नीभिस्सहागता ॥ १५
देव्या देवस्य पादौ च प्रक्षाळ्य पयसा मुदा । ईश्वरोऽपि ततः प्राप कल्याणमण्टपे च सः ॥ १६
ब्राह्मणैर्वेदमन्त्रैश्च रंगमण्टपमाययौ ॥) ततो गिरिवराधीशः सपुत्रगणबान्धवः ॥ १७
पादौ प्रक्षाळ्य विधिवत् प्रभोस्संप्राश्य तज्जलम् । संप्रोक्ष्य मूर्धसु स्वेषु श्रद्धया सहमेनया ॥ १८
मधुपर्कं महेशाय कृत्वा भक्त्या विधानतः । [ईश्वरस्य च वस्त्रादीन् देव्या धारणपूर्वकम् ॥ १९

ரராஜ தேவ்யா தேவேச: திவ்ய ஸிம்மாஸனே சிவ: ।
மேரோ: சிகரமாரூட: ரோஹிண்யா சந்த்ரமா இவ ॥ 10
ததாऽலங்காரஸம்யுக்தாம் நானாரத்னைச்ச சோபிதாம் ।
ஸுகந்திபுஷ்பமாலாட்யாம் ஸ்வர்ணச்ருங்கலயா யுதாம் ॥ 11
டோலாம் தத்ர ஸ்திதாம் த்ருஷ்ட்வா விஷ்ணு: ப்ரார்த்திதவான் சிவம் ।
பகவன் பரமேசான டோலாமாருஹ்ய காஞ்சனீம் ॥ 12
தேவ்யா ஸஹ விநோதஞ்ச க்ருத்வாऽஸ்மாகம் ப்ரியம் குரு ।
விஷ்ண்வாதிபி: ப்ரார்த்திதைவம் ததேத்யுக்த்வாऽऽருரோஹ ஸ: 13
ஹிமவானபி தாம் தேவீம் தத்ர ஸ்தாப்யச பார்ச்வகே । தும்புருர் நாரதச்சைதௌ காயமானௌ ததா முதா
பச்சாத் மங்களதீபைச்ச பூஜாம் சக்ருச்ச லௌகிகை: ।
மேனாऽபி ஸஹஸா பச்சாத் ஸபத்னீபி: ஸஹாகதா ॥ 15
தேவ்யா தேவஸ்ய பாதௌ ச ப்ரக்ஷாள்ய பயஸா முதா ।
ஈச்வரோऽபி தத: ப்ராப கல்யாணமண்டபம் ச ஸ: ॥ 16
ப்ராம்மணை: வேதமந்த்ரைச்ச ரங்கமண்டபமாயயௌ । ததோ கிரிவராதீச: ஸபுத்ரகணபாந்தவ: ॥ 17
பாதௌ ப்ரக்ஷாள்ய விதிவத் ப்ரபோ: ஸம்ப்ராச்ய தஜ்ஜலம் ।
ஸம்ப்ரோக்ஷ்ய மூர்த்தஸு ஸ்வேஷு ச்ரத்தயா ஸஹ மேனயா ॥ 18
மதுபர்கம் மஹேசாய க்ருத்வா பக்த்யா விதானத: ।
ஈச்வரஸ்ய ச வஸ்த்ராதீன் தேவ்யா தாரணபூர்வகம் ॥ 19

வாத்தியங்கள் முழங்கும் பொழுது ஸ்ரீ பார்வதீதேவியை அலங்கரித்து பரமேச்வரனருகில் அழைத்து வந்தார்கள். (9) திவ்யமான ஸிம்மாஸனத்தில் ஸ்ரீ பார்வதீதேவியுடன் தேவர்களுக்கு ஈசனான சிவன் அமர்ந்து மேருவின் உச்சியில் ரோகிணீதேவியுடன் வீற்றிருக்கும் சந்திரன்போல் விளங்குகிறார். (10) அப்பொழுது அங்கு அலங்கரிக்கப்பட்டதும், பல ரத்னங்களால் சோபிப்பதும், நல்ல வாசனை உள்ள புஷ்ப மாலைகளினால் நிறம்பியதும், தங்கச் சங்கிலியுடன் கூடியதுமான (11) மஞ்சத்தை (ஊஞ்சலை)ப் பார்த்து ஸ்ரீ மகாவிஷ்ணு பரமசிவனை வேண்டினார், ஓ பகவானான பரமேச்வரா இந்த தங்கஊஞ்சலில் ஸ்ரீ தேவியுடன் உட்கார்ந்துகொண்டு விநோதமாய் -பொன்னூஞ்சலாடி எங்களுக்கு ஆனந்தத்தை அளிக்க வேண்டும். என்று விஷ்ணு முதலிய தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டபோது அந்த பரமசிவனும் அப்படியே நல்லதென்று சொல்லி ஊஞ்சலில் அமர்ந்தார். (12-13) ஹிமவானும் ஸ்ரீ பரமசிவனுக்குப் பக்கத்தில் தேவியை உட்காரவைத்தார். அப்போது தும்புரு நாரதர் இருவரும் ஸந்தோஷத்துடன் பாடினார்கள். (14) பிறகு உலக வழக்கப்படி மங்கள தீபங்களால் பூஜித்தனர். பிறகு மேனையும் சக்களத்திகளுடன் வேகமாக அங்கு வந்தாள் (15) தேவியினுடையவும் ஸ்ரீ தேவனுடையவும் கால்களை சந்தோஷத்துடன் பாலினால் அலம்பினாள். அந்த பரமசிவனும் பிறகு கல்யாண மண்டபத்தை அடைந்தார் (16) பிராமணர்கள் வேத மந்திரத்தை ஜபிக்கும்போது அந்த கல்யாண மண்டபத்திற்குள் வந்து சேர்ந்தார். பிறகு ஹிமவான் மேனையுடனும், புத்ரமித்திர, பந்து வர்கங்களுடனும் மிக பக்தியுடன் ஸ்ரீ பிரபுவினுடைய கால்களை முறைப்படி அலம்பி அந்த தீர்த்தத்தை உட்கொண்டு தங்கள் தங்கள் தலையில் ப்ரோக்ஷணம் செய்துகொண்டு மகேச்வரனுக்கு மிக பக்தியுடன் முறைப்படி மதுபர்க்கமளித்து

मंगळ्याभरणादीनि देव्याः कण्ठे बबन्ध सः ॥] भृङ्गाराज्जलमादाय सौवर्णात्सुरसंसदि ॥ २०
अभ्यर्च्य देवदेवेशं वस्त्राभरणपूर्वकैः । समन्त्रकं ददौ देवीं धारापूर्वं शिवाय ताम् ॥ २१
[कन्यां कनकसंपन्नां सर्वाभरणभूषिताम् । दास्यामि शंभवे तुभ्यं सर्वमङ्गळशोभनाम् ॥ २२
प्रतिगृह्णीष्व देवेश मम सायुज्यदो भव । प्रतिजग्राह शंभुस्तां सर्वलोकहिताय वै ॥ २३]
ततोत्सवो महानासीत् जयशब्दादिमङ्गळैः । जग्राह पाणिं परया मुदा गौर्या महेश्वरः ॥ २४
सर्वमासीत्ततोहृष्टं जगत्स्थावरजंगमम् । प्रणेमुः पार्वतीं देवाः परमेशं च भक्तितः ॥ २५
मुनयश्च गणाधीशाः आत्मनो ज्ञानयोगिनः । ततो मही महाभारभुग्ना सा दक्षिणोन्नता ॥ २६
अतिनीचोत्तरा भूयः त्रासमापुर्जनाहृदि । अथ भीतास्सुराः प्रोचुः अधःपतनशंकया ॥ २७
प्रणम्य शूलिने शश्वत् मुनयश्च तपोधनाः । शंभो जय दयासिन्धो महीयात्यधरोत्तरा ॥ २८
न पतेयुरिमे क्षिप्रं यथा देव विधीयताम् । आज्ञया तव देवेश समीकुरु महीमिमाम् ॥ २९

மங்கள்யாபரணாதீனி தேவ்யா: கண்டே பபந்த ஸ: |
ப்ருங்காராஜ்ஜலமாதாய ஸௌவர்ணாத் ஸுரஸம்ஸதி || 20
அப்யர்ச்ய தேவதேவேசம் வஸ்த்ராபரணபூர்வகை: |
ஸமந்த்ரகம் ததௌ தேவீம் தாராபூர்வம் சிவாய தாம் || 21
[கன்யாம் கனகஸம்பன்னாம் ஸர்வாபரணபூஷிதாம்| தாஸ்யாமி சம்பவே துப்யம் ஸர்வமங்களசோபனாம் 22
ப்ரதிக்ருண்ணீஷ்வ தேவேச மம ஸாயுஜ்யதோ பவ |
ப்ரதிஜக்ராஹ சம்புஸ்தாம் ஸர்வலோகஹிதாய வை | 23]
ததோத்ஸவோ மஹாநாஸீத் ஜயசப்தாதி மங்களை:| ஜக்ராஹ பாணிம் பரயா முதா கௌர்யா மஹேச்வர:
ஸர்வமாஸீத் ததோஹ்ருஷ்டம் ஜகத்ஸ்தாவரஜங்கமம் |
ப்ரணேமு: பார்வதீம் தேவா: பரமேசம் ச பக்தித: || 25
முநயச்ச கணாதீசா: ஆத்மநோ க்ஞானயோகின:| ததோ மஹீ மஹாபாரபுக்னஸா தக்ஷிணோன்னதா || 26
அதிநீசோத்தராபூய: த்ராஸமாபு: ஜனஹ்ருதி| அத பீதாஸ்ஸுரா: ப்ரோசு: அத: பதனசங்கயா || 27
ப்ரணம்ய சூலிநே சச்வத் முநயச்ச தபோதனா:| சம்போ ஜய தயாஸிந்தோ மஹீயாத்யதரோத்தரா || 28
ந பதேயுரிமே க்ஷிப்ரம் யதா தேவ விதியதாம்| ஆக்ஞயா தவ தேவேச ஸமீகுரு மஹீமிமாம் || 29

மகாதேவிக்கு திருமண வஸ்திரம் உடுத்துவதற்குமுன்பு ஸ்ரீ பரமேச்வரனுக்கு வஸ்திரம் முதலியவைகளை ஸமர்ப்பித்து, ஸ்ரீ தேவியின் கழுத்தில் மங்களாபரணம் முதலியவைகளைப் பூட்டினர் (17-19½) பிறகு அந்த ஹிமவான் ஸ்வர்ணகிண்டியால் ஜலமெடுத்து, தேவர்களின் ஸபையில் தேவதேவனை ஸ்ரீ பரமேச்வரனை வஸ்திரம் ஆபரணங்கள் முதலியவைகளால் நன்கு பூஜித்து அப்பரமசிவனுக்கு அந்த பார்வதீதேவியை தீர்த்த தாரையுடன் மந்திரம் சொல்லிதானம் செய்தான் (20-21) ஸ்வர்ண மயமாய் விளங்குகிறவளும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும், எல்லா மங்களங்களால் சோபிக்கிறவளுமான கன்னிகையை பரமேச்வரனை தங்களுக்கு தானம் செய்கிறேன். (22) ஓ தேவேச, தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும், எனக்கு ஸாயுஜ்ய பதவியை அளிக்கவேண்டும். ஸ்ரீ பரமேச்வரனும் எல்லா உலகத்தின் நன்மைக்காக அந்த தேவியை பெற்றுக்கொண்டார் (23). அப்போது ஜயாவிஜயீபவா, என்றது முதலான மங்கள வசனங்களால் மகோத்ஸவமானது கொண்டாடப்பட்டது. ஸ்ரீ மகேச்வரனும் மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸ்ரீ பார்வதீ தேவியினுடைய கையைப் பற்றினர். (42) பிறகு ஸ்தாவர ஜங்கமங்கள் முதலிய எல்லா உலகங்களும் ஸந்தோஷம் அடைந்தன. தேவர்கள் முனிவர்கள், தனது ப்ரமதகணங்கள், ஞானயோகிகள் முதலிய யாவரும் ஸ்ரீ பரமேச்வரனையும் ஸ்ரீ பார்வதியையும் மிக பக்தியுடன் நமஸ்கரித்தனர் (25½). பிறகு பூமி அதிக பாரத்தால் தெற்கில் உயர்ந்து வடக்கில் தாழ்ந்தும் போயிற்று. மக்கள் உள்ளத்தில் பயத்தை அடைந்தனர். (26½) அப்பொழுது தேவர்களும் தபோதனர்களும் கீழே விழுந்துவிடுவோமென்ற கவலையால் பயந்து சூலபாணியை பலமுறை வணங்கி வேண்டிக் கொண்டார்கள். ஓ சம்போ ஜயஜய, கருணைக்கடலே, பூமி வடபக்கம் கீழே சாய்கிறது. (27-28) ஓ மஹாதேவ, நாங்கள் விழாதபடி சீக்கிரம் அருள்புரிய வேண்டும். ஓ தேவேச, தங்கள் கட்டளையினால் பூமியைச் சமமாகச் செய்ய வேண்டும் (29)

एवं संप्रार्थितो देवैः स्मितं कृत्वा शिवः स्वयम् । अगस्त्यमात्मनस्तुल्यं प्राहिणोद्रोहिणीशधृत् ॥ ३०
चक्रे तं दक्षिणाशेशं अधीशस्सुधियं मुनिम् । कल्याणवेषं तत्रैव तस्मै सन्दर्शयच्छिवः ॥ ३१
सोऽप्याज्ञयाऽस्य दुःखेन सपत्नीको मुनीश्वरः । वियन्मार्गेण संप्राप मलयाद्रेरुपत्यकाम् ॥ ३२
शिवभावनया तुल्ये शिवस्य मुनिपुङ्गवे । मलयं समनुप्राप्ते विषमाभूस्समाऽभवत् ॥ ३३
अथ विज्ञापयामास ब्रह्मा देवं कृताञ्जलिः । वह्नौ कार्या महेशान क्रिया वैवाहिकी विभो ॥ ३४
लोकश्रेष्ठेन यत्कर्म समनुष्ठितमादरात् । अनुतिष्ठति तत्सत्यं श्रेष्ठस्त्वमसि यद्विभो ॥ ३५
तदाऽऽकर्ण्य वचस्तस्य स्मयमानमुखांबुजः । ददावनुज्ञामीशोऽस्मै विधये विधिपूर्वकम् ॥ ३६
हव्यवाहः स्वयंमूर्त्तः विवाहाध्वरमण्टपे । साक्षिभावे प्रजज्वाल प्रणम्य शिवयोस्तदा ॥ ३७
बर्हिभिस्संपरिस्तीर्य परिधीन्परिधायच । आज्यं विलाप्य विधिवत् आज्यस्थाल्यान्निरूप्यच ॥ ३८
अङ्गारेषु प्रतिष्ठाप्य द्वे दर्भाग्रे निधायच । उपर्युदीच्यां प्रज्वाल्य पर्यग्निकरणं तथा ॥ ३९

ஏவம் ஸம்ப்ராத்திதோ தேவை: ஸ்மிதம் க்ருத்வா சிவ: ஸ்வயம் ।
அகஸ்த்யமாத்மன: துல்யம் ப்ராஹிணோத் ரோஹிணீசத்ருத் ॥ 30

சக்ரே தம்தக்ஷிணேசம் அதீசஸ்ஸுதியம் முநிம் । கல்யாணவேஷம் தத்ரைவ தஸ்மை ஸந்தர்சயச்சிவ: 31

ஸோப்யாக்ஞயாऽஸ்ய து:கேன ஸபத்னீகோ முநீச்வர: ।
வியன்மார்கேண ஸம்ப்ராப மலயாத்ரேருபத்யகாம் ॥ 32

சிவபாவனயா துல்யே சிவஸ்ய முனிபுங்கவே । மலயம் ஸமனுப்ராப்தே விஷமாபூஸ்ஸமாऽபவத் ॥ 33

அத விக்ஞாபயாமாஸ ப்ரம்மா தேவம் க்ருதாஞ்ஜலி: ।
வன்னௌ கார்யா மஹேசான க்ரியா வைவாஹிகீ விபோ ॥ 34

லோகச்ரேஷ்டேன யத்கர்ம ஸமனுஷ்டிதமாதராத் ।
அனுதிஷ்டதி தத்ஸத்யம் ச்ரேஷ்டஸ்த்வமஸி யத்விபோ ॥ 35

ததாऽऽகர்ண்ய வசஸ்தஸ்ய ஸ்மயமானமுகாம்புஜ: । ததாவனுக்ஞாமீசோऽஸ்மை விதயே விதிபூர்வகம் 36

ஹவ்யவாஹ: ஸ்வயம்மூர்த: விவாஹாத்வரமண்டபே ।
ஸாக்ஷிபாவே ப்ரஜஜ்வால ப்ரணம்ய சிவயோஸ்ததா ॥ 37

பர்ஹிபிஸ்ஸம் பரிஸ்தீர்ய பரிதீன் பரிதாய ச । ஆஜ்யம் விலாப்ய விதிவத் ஆஜ்யஸ்தால்யாம் நிருப்ய ச 38

அங்காரேஷு ப்ரதிஷ்டாப்ய த்வே தர்பாக்ரே நிதாய ச ।
உபர்யுதீச்யாம் ப்ரஜ்வால்ய பர்யக்னிகரணம் ததா ॥ 39

இம்மாதிரி மிகவும் தேவர்களால் வேண்டப்பட்ட சந்த்ரசேகரனை பரமேச்வரன் புன்னகை செய்து தனக்கு ஒப்பான அகஸ்தியரை ஏவினர் (30) சிவன், மிக புத்திசாலியான அகஸ்தியமுனிவரை தெற்கு திக்கிற்கு அதிபதியாக்கினர். அவரின்பொருட்டு அங்கே கல்யாண வேஷத்தையும் காண்பித்தார் (31) அம்முனீச்வரரும் மனைவியுடன் மிக்க துக்கங்கொண்டு ஆகாசமார்க்கமாய் மலையகிரியின் அடிவாரத்தை அடைந்தார்.(32) பரமசிவனை மனதில் எப்பொழுதும் த்யானம் செய்வதால் சிவனுக்கு ஒப்பானவரான அகஸ்தியர் மலைய பர்வதத்தை அடைந்ததும் மேடுபள்ளமான பூமியானது ஸமமாக ஆகிவிட்டது (33) பிறகு பிரம்மதேவன் அஞ்ஜலி செய்துகொண்டு ஓ ப்ரபுவான மஹேச்வர, அக்னியில் விவாஹத்திற்குரிய சடங்குகளைச் செய்யவேண்டும் என தெரிவித்துக் கொண்டார்(34) சிறந்தவனால் அன்புடன் எந்தக் காரியம் செய்யப்படுகிறதோ, அதையே உலகில் உள்ள ஜனங்கள் ஸத்யமென நம்பிச் செய்கிறார்கள். தாங்கள் உலகில் சிறந்தவரல்லவா! (35) அப்பொழுது ஜகதீசன் ப்ரம்மனது வார்த்தையைக்கேட்டு புன்சிரிப்புடன் முறைப்படி செய் என ப்ரம்மதேவனுக்கு உத்தரவிட்டார். (36) கல்யாண யாக மண்டபத்தில் அக்னிபகவானும் ஸ்வய உருவத்துடன் பார்வதி பரமேச்வரர்களை நமஸ்கரித்து நன்கு ஜ்வலித்தார். (37) ப்ரம்மதேவனும் அக்னிக்கு நான்கு பக்கங்களிலும் தர்ப்பங்களை பரிஸ்தரணமாகப்போட்டு ஸமித்துக்களை மூன்று பக்கங்களில் போட்டு கீழ்ப்பக்கத்தில் இரு ஸமித்துக்களை மேல்நோக்கும்படி அக்னியில் சொருகி நெய்யை முறைப்படி உருக்கி ஆஜ்யஸ்தாலி என்ற பாத்திரத்தில்விட்டு நிரப்பி அக்னியிலிருந்து எடுத்த தணல்களில் ஆஜ்ய பாத்திரத்தை வைத்து அதில் இரு தர்ப்பங்களின் நுனிகளைபோட்டு பிறகு வேறு ஒரு தர்ப்பத்தை எடுத்து அக்னியில் கொளுத்தி ஆஜ்ய பாத்ரத்தில்காட்டி வடதிசையில் எறிந்து மற்றொரு தர்ப்பத்தைக் கொளுத்தி மூன்றுமுறை ஆஜ்ய பாத்ரத்தைச்சுற்றி வடதிசையில் எறிந்து ஆஜ்ய பாத்ரத்தை வடக்கில் இறக்கி முன் தனியாக எடுத்த தணலை அக்னியில் சேர்த்து அவ்வக்னியில் வடக்கில் வைக்கப்பட்ட தர்வி

उदगुद्वास्य सर्पिस्तत् संयोज्यांगारमग्निना । अग्नि तज्जुहवांचक्रे दर्व्याऽऽसादितया विधिः ॥ ४०
समिदाज्यचरूल्लाजान् दम्पत्योः प्रीतिवृद्धये । पादमीशोऽपि पाणिभ्यां भवान्याश्शनकैःस्मयन् ॥ ४१
पदानि सप्त संभाव्य दृषदग्रे न्यवेशयत् । [एकमिषेविष्णुस्त्वान्वेतु मन्त्रेणचदेवपः ॥ ४२]
परीयतुः पावकं तं दम्पती तौ मुदान्वितौ । [ब्राह्मणैराशिषं प्राप्य सन्तुष्टौ लोकदम्पती ॥ ४३]
एकासनगतौ पश्चात् दर्शनं ददतुः प्रभू । प्रथमं प्रमथेन्द्राणां कालाग्नेर्हाटकेशितुः ॥ ४४
हरिब्रह्ममहेन्द्राग्निप्रमुखानां च योगिनाम् । मुनीन्द्रोरगसिद्धानां सर्वासां सुरयोषिताम ॥ ४५
वाचा संभावयामास कालाग्निं हाटकेश्वरम् । गणेन्द्रानपि तान् सर्वान् सितेन मधुसूदनम् ॥ ४६
आलोकनेन ब्रह्माणं ईषदालोकनैस्सुरान् । कंपेन तापसान् मूर्ध्नः संभावनमथाचरत् ॥ ४७
अत्रान्तरे कामपत्नी वृत्रारिप्रमुखैस्सह । अप्रार्थयन्महेशानं भर्तारं मुहुरात्मनः ॥ ४८
हैमवत्या तदालोकि तिरश्चीनदृशा शिवः । हरिणा ब्रह्मणाचापि स्वस्वभोगोपपत्तये ॥ ४९

உதகுத்வாஸ்ய ஸர்பிஸ்தத் ஸம்யோஜ்யாங்காரமக்னிஞ |
அக்னிம் தஜ்ஜுஹவாம்சக்ரே தர்வ்யாSSஸாதிதயா விதி: || 40
ஸமிதாஜ்ய சரூல்லாஜான் தம்பத்யோ: ப்ரீதிவ்ருத்தயே |
பாதமீசோSபி பாணிப்யாம் பவான்யா: சனகை: ஸ்மயன் || 41
பதாநி ஸப்த ஸம்பாவ்ய த்ருஷதக்ரே ந்யவேசயத் |
ஏகமிஷே விஷ்ணுஸ்த்வான்வேது மந்த்ரேணச தேவப: || 42
பரீயது: பாவகம் தம் தம்பதீ தெள முதான்விதெள |
ப்ராம்மணைராசிஷம் ப்ராப்ய ஸந்துஷ்டெள லோகதம்பதீ || 43
ஏகாஸநகதெள பச்சாத் தர்சனம் தததுः ப்ரபூ | ப்ரதமம் ப்ரமதேந்த்ராணும் காலாக்னேர்ஹாடகேசிது: 44
ஹரிப்ரம்மமஹேந்த்ராக்னிப்ரமுகாணும் ச யோகிணும் |
முநீந்த்ரோரகஸித்தாணும் ஸர்வாஸாம் ஸுரயோஷிதாம் || 45
வாசா ஸம்பாவயாமாஸ காலாக்னிம் ஹாடகேச்வரம் |
கணேந்த்ரானபி தான் ஸர்வான் ஸ்மிதேன மதுஸூதனம் || 46
ஆலோகனேன ப்ரம்மாணம் ஈஷதாலோகனைஸ்ஸுரான் |
கம்பேன தாபஸான் மூர்த்ன: ஸம்பாவன மதாசரத் || 47
அத்ராந்தரே காமபத்னீ வ்ருத்ராரிப்ரமுகைஸ்ஸஹ |
அப்ரார்த்தயன் மஹேசானம் பர்த்தாரம் முஹுராத்மன: || 48
ஹைமவத்யா ததாலோகி திரச்சீனத்ருசா சிவ: | ஹரிணு ப்ரம்மணு சாபி ஸ்வ ஸ்வ போகோபபத்தயே 49

(ஹோமம் செய்யும் பாத்திரம்) யால் ஹோமம் செய்தார். (38-40) மேலும் அப்ப்ரம்மதேவன் தம்பதிகளில் ஒருவர்க்கொருவர் அன்பு வளருவதற்காக ஸமித், ஆஜ்யம், ஹவிஸ், பொறி இவைகளை ஹோமம் செய்தார். பிறகு ஸ்ரீ பரமசிவனும் பவானிதேவியின் கால்களை தன் இரு கைகளால் புன்னகையுடன் மெல்லப் பிடித்து ஏகமிஷே என்ற மந்த்ரத்தால் ஏழடி தூக்கிவைத்து பிறகு அம்மியின் மேலும் எடுத்துவைத்தார். தேவர்களைக் காக்கும் அந்த ஸ்ரீ சிவனும் உமையும் ஸந்தோஷத்துடன் அக்னியைச் சுற்றிவந்தார்கள். ப்ராம்மணர்களின் ஆசீர்வாதத்தைப்பெற்று உலக தம்பதிகளான அவர்கள் ஸந்தோஷமடைந்தார்கள். (41-43) பிறகு ப்ரபுவான அவ்விருவர்களும் ஒரே ஆஸனத்தில் அமர்ந்து எல்லோருக்கும் தரிசனமளித்தார்கள். (43½) முதலில் பிரமதகணங்கள் காலாக்னிருத்ரர் ஹாடகேச்வரர் இவர்களுக்கும், விஷ்ணு, ப்ரம்மா, இந்திரன், அக்னி, முதலியவர்களுக்கும் யோகீச்வரர்களுக்கும், முனீந்த்ரர்கள், உரகர்கள், ஸித்தர்கள், ஸகல தேவ ஸ்திரீகள் முதலியோருக்கும் தரிசனமளித்தார்கள் (44-45) அவர்களுள் காலாக்னிருத்ரர், ஹாடகேச்வரர், ஸகலகணுதிபர்கள், இவர்களை வாக்காலும், ஸ்ரீ மஹா விஷ்ணுவை புன்சிரிப்பாலும், ப்ரம்மாவை பார்வையாலும், மற்ற தேவர்களை கடைக்கண் பார்வையாலும், தபஸ்விகளை தலை அசைப்பினுலும் வெகுமதித்தார். (46-47) இந்த சந்தர்ப்பத்தில் மன்மதனின் மனைவியான ரதியானவள் இந்த்ரன் முதலியவர்களோடுகூட மஹேச்வரனைக்குறித்துக் கணவனை அடிக்கடி வேண்டினுள். (48) அச்சமயத்தில் ஹிமவானின் பெண்ணுன பார்வதியும் கடைக்கண்ணுல் ஸ்ரீ பரமசிவனை நோக்கினுள். விஷ்ணுவும் ப்ரம்மாவும் தன் தன் போக ஸுகத்திற்காக யாசித்தனர். (49)

कर्ताऽपि तत्र तत्सर्वं दृष्ट्वा हृष्टमनाः स्वयम् । प्रोवाच रतिमालोक्य रतयेऽस्तु पतिस्तव ॥ ५०
आत्मनामपि सर्वेषां अनंगोऽङ्गी तवैव सः । कामारिराख्ययाऽस्म्यद्यप्रभृत्यस्मिन् जगत्त्रये ॥ ५१
अनंगीकृत्य तं भद्रे सोऽहमंगीकरोमि च । तवैव सोऽङ्गवान् कामः त्वांचैवाङ्गीकरिष्यति ॥ ५२
इति वादिनि देवेशे प्रयाणाभिमुखे सति । हिमवान् सहपुत्राभ्यां प्रणम्य प्रभुसन्निधौ ॥ ५३
मधुपर्कस्य शेषस्य विनियोगं व्यजिज्ञिपत् । अर्थिनस्तस्य ते देवाः हरिब्रह्ममुखा विभोः ॥ ५४
अद्राक्षुर्मुखमाधाय शिरस्यञ्जलिमञ्जसा । अवेत्यतद्भवस्तेषां विभजस्वेति चादिशत् ॥ ५५
ततोऽहमहमित्येवं निर्माल्यं निर्मलाहृतम् । अमराः स्वात्मशुद्ध्यर्थं स्वीकृत्यासन् सुनिर्मलाः ॥ ५६
अनुगृह्य ततोऽद्रीन्द्रं प्रभुरद्रीन्द्रकार्मुकः । ककुद्मन्तंसमारुह्य कैलासं गिरिजासखः ॥ ५७
प्रतस्थे गणपैस्साकं देवैस्सह महर्षिभिः । संप्राप्येशः क्षणार्धेन तत्र भोगपुरे शुभे ॥ ५८
स्थित्वाऽऽत्मसद्मनश्शम्भुः द्वारदेशे वृषोपरि । विससर्ज सुरान् सर्वान् कालाग्निप्रमुखानपि ॥ ५९
ऋषीनपि वसिष्ठादीन् आत्मनश्च चराचरान् । भ्रूसंज्ञयैवभूतेशः वृषादुत्तीर्य च क्षणात् ॥ ६०

கர்த்தாபி தத்ர தத்ஸர்வம் த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமனா: ஸ்வயம் |
ப்ரோவாச ரதிமாலோக்ய ரதயேSஸ்து பதிஸ்தவ || 50
ஆத்மனாமபி ஸர்வேஷாம் அனங்கோSங்கீ தவைவ ஸ: |
காமாரிராக்யயாSஸ்ம்யத்ய ப்ரப்ருத்யஸ்மின் ஜகத்ரயே || 51
அனங்கீக்ருத்ய தம் பத்ரே ஸோSஹமங்கீகரோமி ச |
தவைவ ஸோSங்கவான் காம: த்வாம்சைவாங்கீகரிஷ்யதி || 52
இதி வாதினி தேவேசே ப்ரயாணாபிமுகே ஸதி |
ஹிமவான் ஸஹபுத்ராப்யாம் ப்ரணம்ய ப்ரபுஸன்னிதௌ || 53
மதுபர்கஸ்ய சேஷஸ்ய விநியோகம் வ்யஜிக்ஞிபத் | அர்த்தினஸ்தஸ்ய தே தேவா: ஹரிப்ரம்மமுகா விபோ: 54
அத்ராக்ஷு: முகமாதாய சிரஸ்யஞ்ஜலிமஞ்ஜஸா | அவேத்ய தத்பவஸ்தேஷாம் விபஜஸ்வேதி சாதிசத் 55
ததோSஹமஹமித்யேவம் நிர்மால்யம் நிர்மலாத்ருதம் |
அமரா: ஸ்வாத்மசுத்யர்த்தம் ஸ்வீக்ருத்யாஸன் ஸுநிர்மலா: || 56
அனுக்ருஹ்ய ததோSத்ரீந்த்ரம் ப்ரபுரத்ரீந்த்ரகார்முக: | ககுத்மந்தம் ஸமாருஹ்ய கைலாஸம் கிரிஜா ஸக:
ப்ரதஸ்தே கணைபைஸ்ஸாகம் தேவைஸ்ஸஹ மஹர்ஷிபி: |
ஸம்ப்ராப்யேச: க்ஷணார்த்தேன தத்ர போகபுரே சுபே || 58
ஸ்தித்வாSSத்மஸத்மனச்சம்பு: த்வாரதேசே வ்ருஷோபரி |
விஸஸர்ஜ ஸுரான் ஸர்வான் காலாக்னி ப்ரமுகானபி || 59
ருஷீனபி வஸிஷ்டாதீன் ஆத்மனச்ச சராசரான் | ப்ரூஸம்க்ஞயைவ பூதேச: வ்ருஷாதுத்தீர்யச க்ஷணாத் 60

உலகிற்குக் கர்த்தாவான பரமசிவன் அங்குள்ள எல்லாவற்றையும் பார்த்து ஸந்தோஷம் கொண்டு ரதியைப் பார்த்து போகத்திற்காக உனது கணவன் இருக்கக்கடவன் (50) எல்லா ஜீவராசிகளுக்கும் அனங்கனாக (உருவமற்றவன்) வும் உனக்கு மட்டும் அங்கி (உருவுடன் கூடியவனாக) யாகவும் இருக்கக் கடவன் இன்று முதல் இம்மூவுலகிலும் காமாரி எனப்பெயர் அடைகிறேன். (51) ஓ மங்களே உடலில்லாமலே நான் அவனை ஏற்றுக்கொள்ளுகிறேன். உனக்குமட்டும் காமன் அங்கமுள்ளவனாக அன்பளிப்பான். (52) இவ்வாறு ஸ்ரீ மஹாதேவன் சொல்லி புறப்படவிருக்கையில் ஹிமவான் இருபுத்ரர்களுடன் ப்ரபுஸன்னிதியில் நமஸ்கரித்து மதுபர்க்கத்தின் மீதியை எப்படி விநியோகிப்பது என தெரிவித்துக் கொண்டான் (52-53½) மதுபர்க்கத்தின் சேஷத்தைப் பெறுவதற்கு விருப்பங்கொண்டு விஷ்ணு, ப்ரம்மா முதலிய தேவர்கள் ஸ்ரீ பரமசிவனுடைய முகத்தை அஞ்சலி செய்தவாறு பரபரப்புடன் பார்த்தார்கள். ஸ்ரீ பரமசிவனும் அதை அறிந்து மீதமுள்ளதை அவர்களைப் பிரித்துக்கொள்ளும்படி உத்திரவிட்டார். (54-55) பிறகு எல்லா தேவர்களும் நிர்மலனான ஸ்ரீ பரமசிவனால் உட்கொண்டு மீதியுள்ள மதுபர்க்கத்தை தாங்கள் சித்தியடைவதற்காக எனக்கு எனக்கு என வேண்டி பெற்றுக்கொண்டு நிர்மலர்களானார்கள். (56) மேருவை வில்லாகக்கொண்ட பரமசிவன் ஹிமவானை அநுக்ரஹித்து வ்ருஷபத்தின்மீதேறி பார்வதியுடன் கைலாஸத்திற்குப் புறப்பட்டார். (57) கணாதிபர்களுடனும், தேவர்களுடனும், மஹரிஷிகளுடனும் புறப்பட்டார். அரைநொடியில் அங்குள்ள மங்களமான போகபுரத்திற்குச் சென்று, தன் மாளிகையின் வாயிற்படியில் விருபஷத்தின்மீது இருந்துகொண்டு எல்லா தேவர்களையும் காலாக்னிருத்ரர் முதலியவர்களை

नन्दिहस्तमथालम्ब्य स्वं निशान्तमथाविशत् । अन्तरंगगणैस्सार्धं देव्या शीतांशुशेखरः ॥ ६१
इतीदं परमेशस्य कल्याणं गिरिराड्भुवः । नित्यं पठति यो भक्त्या शृणुयाद्वा समाहितः ॥ ६२
नारीवाथ नरोवापि योवा कोवा द्विजोत्तमाः । कल्याणाध्यायमीशस्य हैमवत्याश्च सादरम् ॥ ६३
शृणोति सम्यगभ्यर्च्य वक्तारं विदुषांवरम् । कन्यार्थी लभते कन्यां पतिकामा पतिं शुभम् ॥ ६४
विद्यार्थी लभते विद्यां जयकामो जयं लभेत् । पुत्रार्थी लभते पुत्रान् आयुष्कामो वयोऽमितम् ॥ ६५
इदं पुरा मुरारातिः श्रुत्वा श्रद्धापुरस्सरम् । लक्ष्मीमापामृतोद्भूतां साऽपितं पुरुषोत्तमम् ॥ ६६
वाचं ब्रह्मा पुरा श्रुत्वा साऽपितं चतुराननम् । पुलोमजां महानिन्द्रः महत्या देवसंपदा ॥ ६७
गौतमोऽपि तथाऽहल्यां अन्येऽपि मुनयोऽमलाः । अस्याध्यायस्य पठनात् स्वंस्वमिष्टमथाप्नुवन् ॥ ६८
तस्मात् सर्वप्रयत्नेन कल्याणाध्यायमुत्तमम् । शृणुयुश्च पठेयुर्वा स्वस्वाभीष्टस्य सिद्धये ॥ ६९

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
संभवकाण्डे त्रयोविंशोऽध्यायः ॥

நந்திஹஸ்தமதாலம்ப்ய ஸ்வம் நிசாந்தமதாவிசத் । அந்தரங்ககணைஸ்ஸார்த்தம் தேவ்யா சீதாம்சுசேகர: 61
இதீதம் பரமேசஸ்ய கல்யாணம் கிரிராட்புவ: । நித்யம் படதி யோ பக்த்யா ச்ருணுயாத்வா ஸமாஹித: 62
நாரீவாऽத நரோவாபி யோ வா கோ வா த்விஜோத்தமா: ।
கல்யாணாத்யாயமீசஸ்ய ஹைமவத்யாச்ச ஸாதரம் ॥ 63
ச்ருணோதி ஸம்யகப்யர்ச்ய வக்தாரம் விதுஷாம்வரம் । கன்யார்த்தீ லபதே கன்யாம் பதிகாமா பதிம் சுபம் 64
வித்யார்த்தீ லபதே வித்யாம் ஜயகாமோ ஜயம் லபேத் ।
புத்ரார்த்தீ லபதே புத்ரான் ஆயுஷ்காமோ வயோऽமிதம் ॥ 65
இதம் புரா முராராதி: ச்ருத்வா ச்ரத்தாபுர:ஸரம் ।
லக்ஷ்மீமாபாம்ருதோத்பூதாம் ஸாபி தம் புருஷோத்தமம் ॥ 66
வாசம் ப்ரம்மா புரா ச்ருத்வா ஸாபி தம் சதுராநநம் । புலோமஜாம் மஹாநிந்த்ர: மஹத்யா தேவஸம்பதா 67
கௌதமோऽபி ததாऽஹல்யாம் அன்யேऽபி முனயோऽமலா: ।
அஸ்யாத்யாயஸ்ய படனாத் ஸ்வம் ஸ்வமிஷ்டமவாப்னுவன் ॥ 68
தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன கல்யாணாத்யாயமுத்தமம் ।
ச்ருணுயுச்ச படேயுர்வா ஸ்வஸ்வாபீஷ்டஸ்ய ஸித்தயே ॥ 69

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
ஸம்பவகாண்டே த்ரயோவிம்சோऽத்யாய: ॥

யும், வஸிஷ்டர் முதலிய ரிஷிகளையும் ஸ்தாவர ஜங்கமங்களான சேதனர்களையும் பூதகங்களுக்கு ஈசனான சிவன், புருவத்தால் ஸம்ஜ்ஞைகாட்டி விடைகொடுத்தார். (58-60) வ்ருஷபத்திலிருந்து ஒரு க்ஷணத்தில் இறங்கி நந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீ பார்வதீதேவியுடன் தன் அந்தரங்க கணங்களுடன் தன் அந்தப்புரத்திற்குள் சென்றார். (61) ஓ, த்விஜோத்மர்களே, இப்படிப்பட்ட பார்வதீ கல்யாணத்தைக் கூறும் இந்த அத்யாயத்தை எவன் நித்யம் பக்தியுடன் படிக்கிறானோ அல்லது ஒருமைப்பட்ட மனதுடன் கேட்கிறானோ, அவன் புருஷனோ, அல்லது ஸ்திரீயோ, அல்லது வேறு யாராயிருந்தாலும், அந்த அத்யாயத்தை உபதேசித்த ஆசார்யனை நன்கு பூஜித்து கேட்பானேயாகில், கன்னிகையைக் கோருகிறவன் கன்னிகையை அடைவான். கணவனை வேண்டுகிறவள் நல்ல கணவனை அடைவாள். (62-64) வித்யையைக் கோருகிறவன் வித்யையை அடைவான். ஜயத்தைக் கோருகிறவன் ஜயத்தை அடைவான். பிள்ளைகளைக் கோருகிறவன் பிள்ளைகளை அடைவான். ஆயுளை விரும்புகிறவன் அளவற்ற ஆயுளை அடைவான். (65) முன்பு ஸ்ரீ விஷ்ணுவானவர் சிரத்தையுடன் இந்த அத்யாயத்தை சிரவணம் செய்து பாற்கடலில் தோன்றிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும், ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்ரீ நாராயணனையும் அடைந்தாள். (66) முன்பு ப்ரும்ம தேவன் இதைக் கேட்டு ஸரஸ்வதியையும், ஸரஸ்வதிகேட்டு ப்ரும்ம தேவனையும் அடைந்தாள், மஹாத்மாவான இந்திரனும், இதை சிரணம் செய்து ஏராளமான தேவ ஸம்பத்துடன் இந்திராணியை அடைந்தான். (67) அவ்வாறே கௌதமமுனிவரும் அஹல்யையை அடைந்தார். நிர்மலர்களான மற்ற முனிவர்களும், இவ்வத்யத்யாயத்தை படித்ததால் அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டங்களை அடைந்திருக்கிறார்கள். (68) ஆகையால் எல்லா முயற்சியாலும் சிறந்த இக்கல்யாணாத்யாயத்தை தங்கள் தங்கள் கோரிக்கையை பூர்த்திசெய்து கொள்வதின்பொருட்டு படிக்கவும், கேட்கவும் வேண்டும். (69)

இருபத்து மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ चतुर्विंशोऽध्यायः ॥

ब्रह्मादिभिः श्री शिवं प्रति वायुप्रेषणम् ॥

सूतः — ततः प्रविश्य भवनं नवरत्नोपशोभितम् । अलंचकार भगवान् आसनं हैममीश्वरः ॥ १
नवोढया हिमाद्रीन्द्र सुतया स तयोमया । तदानीं सा शिवाभिन्नाप्याश्रिता योषितांमतम् ॥ २
व्रीळानम्राननाऽत्यर्थं नानाननगणाधिपैः । आलोक्य मुमुदे चेष्टां आहतां मातृभिस्तथा ॥ ३
जहौ व्रीळां नवोढा सा कालेनैव शनैश्शनैः । एवं गते बहुतिथे काले शूलिनि खेलति ॥ ४
उद्यानेषु विचित्रेषु तत्रतत्र तया सह । जगत्स्वपि च सर्वत्र स्त्रीपुम्भावो व्यजृम्भत ॥ ५
सकामोऽपि सकामस्सन् रत्या पत्न्या जगत्त्रयम् । पञ्चानां पुष्पबाणानां वशन्निन्ये प्रयत्नतः ॥ ६
अथ देवा हरिमुखाः ऋषयश्च तपोधनाः । उत्सवान्ते विसृष्टास्ते स्वं स्वं लोकं त्रिशूलिना ॥ ७
अशक्नुवन्तस्संभूय शूरपद्मभयात्तदा । महामेरुगुहां प्राप्य मन्त्रयामासुरञ्जसा ॥ ८

॥ அத சதுர்விம்சோऽத்யாய: ॥

ப்ரம்மா முதலியவர்கள் ஸ்ரீ சிவனைக்குறித்து வாயுவை அனுப்புதல்.

ஸூத:— தத: ப்ரவிச்ய பவனம் நவரத்னோபசோபிதம் |
அலஞ்சகார பகவான் ஆஸனம் ஹைமமீச்வர: || 1
நவோடயா ஹிமாத்ரீந்த்ரஸுதயா ஸ தயோமயா |
ததாநீம் ஸா சிவாபின்னாபி ஆச்ரிதா யோஷிதாம் மதம் || 2
வ்ரீளாநம்ராநநாऽத்யர்த்தம் நாநாநநகணாதிபை: |
ஆலோக்ய முமுதே சேஷ்டாம் ஆத்ருதாம் மாத்ருபிஸ்ததா || 3
ஜஹௌ வ்ரீளாம் நவோடாஸா காலேனைவ சனை: சனை: | ஏவம் கதே பஹுதிதே காலே சூலினி கேலதி 4
உத்யாநேஷு விசித்ரேஷு தத்ர தத்ர தயா ஸஹ |
ஜகத்ஸ்வபிச ஸர்வத்ர ஸ்த்ரீபும்பாவோ வ்யஜ்ரும்பத || 5
ஸகாமோऽபி ஸகாமஸ்ஸன் ரத்யா பத்ன்யா ஜகத்ரயம் |
பஞ்சானாம் புஷ்பபாணாநாம் வசம் நின்யே ப்ரயத்னத: || 6
அத தேவா ஹரிமுகா: ருஷயச்ச தபோதனா: |
உத்ஸவாந்தே விஸ்ருஷ்டாஸ்தே ஸ்வம் ஸ்வம் லோகம் த்ரிசூலினா || 7
அசக்னுவந்த: ஸம்பூய சூரபத்மபயாத் ததா | மஹாமேரு குஹாம் ப்ராப்ய மந்த்ரயாமாஸுரஞ்ஜஸா || 8

இருபத்து நான்காவது அத்தியாயம்.

ஸூதர் கூறுகிறார், பிறகு பகவானான ஈச்வரன், புதிதாக விவாஹம் செய்துகொண்ட உமா தேவியுடன், நவரத்னங்களால் அமைக்கப்பட்ட தனது அரண்மனைக்குச்சென்று ஸ்வர்ண சிம்மாஸனத்தில் வீற்றிருந்தார் (1½) அப்பொழுது ஸ்ரீ சிவாதேவியானவள், சிவனைக்காட்டிலும் வேறுபடாதவளாயினும், பெண்களின் வழக்கத்தைத் தழுவிபக்கத்தில் தனித்து உட்கார்ந்தாள். (2) அந்த தேவியானவள் பல முகங்களை உடைய கணாதிபர்களாலும், ஸப்தமாத்ருக்களாலும், செய்யப்படுகிற கேளிக்கைகளினால் நாணங்கொண்டு மிகவும் தலைகுனிந்தவளாய் மகிழ்ச்சியடைந்தாள் (3) புதிதாக மணம்புரிந்த அந்த தேவியானவள் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக வெட்கத்தைவிட்டாள். இவ்வாறாக வெகு காலத்திற்குப்பிறகு பல விசித்ரங்களான உத்யானங்களில் ஆங்காங்கு அத்தேவியோடுகூட ஸ்ரீ சூலபாணியான ஸ்ரீ பரமேச்வரன் சந்தோஷமாக விளையாடி வருகையில் ஸகல லோகங்களிலும், ஸ்த்ரீ, புருஷர்களுடைய சிருங்கார சேஷ்டைகள் வ்ருத்தியடைந்தன. (4-5) மன்மதனும் தனது மனைவியாகிய ரதியோடு ச்ருங்கார லீலைகளை அனுபவித்துக்கொண்டு முயற்சியுடன் மூவுலகங்களையும் தனது பஞ்சபாணங்களுக்கு வசமாக்கினான். (6) பிறகு ஸ்ரீ விஷ்ணு முதலிய தேவர்களும், தபோதனர்களான முனிவர்களும், கல்யாணோத்ஸவம் முடிந்ததும் த்ரிசூலியான பரமேச்வரரின் உத்திரவின்பேரில் தங்கள் தங்கள் உலகங்களுக்குச் சென்றார்கள். (6-7) அப்பொழுது அவர்கள் சூரபத்மனின் பயத்தால், அவனுடைய உபத்ரவத்தை ஸஹிக்க முடியாதவர்களாகி எல்லோரும் மஹாமேரு குஹைக்கு விரைந்து சென்று ஒன்றுகூடி யோசனை செய்தார்கள். (8) வ்ருத்ராஸுரனைக் கொன்ற தேவேந்திரன், ஸரஸ்வதியின் கணவரான

वृत्रारिरत्र भर्त्तारं गिरोमायाश्च साञ्जलिः । उवाच भगवन्विष्णो पितामह जगच्चिरम् ॥ ९
शूरपद्महनं शम्भुः सुब्रह्मण्यं स्वमात्मजम् । रक्षिष्येऽद्य समुत्पाद्य प्रतिज्ञामकरोदिति ॥ १०
सत्यस्य सत्यवाचोऽस्य प्रतिज्ञैषा विळम्बते । अस्माकं किंकरोतीशः दुरदृष्टैर्विजृम्भितम् ॥ ११
अहो किमिति हा कष्टं भाग्यवन्तश्च तेऽसुराः । शिवैकशरणा दैत्याः तमेवमनसागताः ॥ १२
एवमेव दिशामीशाः चिखिदुर्मुनयश्च ते । ततो ब्रह्माऽब्रवीत् वाक्यं संप्रेक्ष्य विबुधांस्तदा ॥ १३
ईशोऽस्माभिरुपास्यो हि पुनरेव दयानिधिः । असुराश्च सुराश्चान्ये जगत्स्थावरजङ्गमम् ॥ १४
जगन्मयस्य देवस्य तुल्या एव विचारणे । अथवा किं करोतीति विचार्यो जगतांपतिः ॥ १५
अन्तःपुरे तदा देव्या हैमवत्या सुरोत्तमाः । कोवाऽद्य प्रेषणीयस्स्यात् समीपं त्रिपुरद्विषः ॥ १६
विचार्य तेन वृत्तान्तं बालचन्द्रशिखामणेः । ततः परन्तु यच्छक्यं तत्कर्तव्यं प्रयत्नतः ॥ १७
साध्वमन्यत गोविन्दो विधिवाक्यं दिवस्पतिः । देवाश्च सर्वे दिक्पालाः बह्वमन्यन्त सादरम् ॥ १८

வ்ருத்ராரிரத்ர பர்த்தாரம் கிரோமாயாச்ச ஸாஞ்ஜலி:। உவாச பகவன் விஷ்ணோ பிதாமஹ ஜகச்சிரம் ॥ 9
சூரபத்மஹநம் சம்பு: ஸுப்ரம்மண்யம் ஸ்வமாத்மஜம் ।
ரக்ஷிஷ்யேऽத்ய ஸமுத்பாத்ய ப்ரதிக்ஞாமகரோதிதி ॥ 10
ஸத்யஸ்ய ஸத்யவாசோऽஸ்ய ப்ரதிக்ஞைஷா விளம்பதே ।
அஸ்மாகம் கிம்கரோதீச: துரத்ருஷ்டை: விஜ்ரும்பிதம் ॥ 11
அஹோ கிமிதி ஹாகஷ்டம் பாக்யவந்தச்ச தேऽஸுரா:। சிவைகசரணா தைத்யா: தமேவ மனஸாகதா: 12
ஏவமேவ திசாமீசா: சிகிதுர்முனயச்ச தே ।
ததோ ப்ரம்மாऽப்ரவீத் வாக்யம் ஸம்ப்ரேக்ஷ்ய விபுதான் ததா ॥ 13
ஈசோऽஸ்மாபிருபாஸ்யோ ஹி புனரேவ தயாநிதி:। அஸுராச்ச ஸுராச்சான்யே ஜகத் ஸ்தாவரஜங்கமம்
ஜகன்மயஸ்ய தேவஸ்ய துல்யாஏவ விசாரணே । அதவா கிம்கரோதீதி விசார்யோ ஜகதாம்பதி: ॥ 15
அந்த புரே ததா தேவ்யா ஹைமவத்யா ஸுரோத்தமா: ।
கோவாऽத்ய ப்ரேஷணீயஸ்யாத் ஸமீபம் த்ரிபுரத்விஷ: ॥ 16
விசார்ய தேந வ்ருத்தாந்தம் பாலசந்த்ரசிகாமணே:। தத: பரந்து யச்சக்யம் தத்கர்த்தவ்யம் ப்ரயத்னத: 17
ஸாத்வமன்யத கோவிந்த: விதிவாக்யம் திவஸ்பதி: ।
தேவாச்ச ஸர்வே திக்பாலா: பஹ்வமன்யந்த ஸாதரம் ॥ 18

ப்ரும்மதேவனையும், லக்ஷ்மியின் பர்த்தாவான ஸ்ரீ விஷ்ணுவையும் அஞ்சலி செய்து பகவானான ஓ விஷ்ணுவே, ஓ ப்ரும்மதேவனே, ஸ்ரீ பரமேச்வரன்தான் சூரபத்மனை வதம் செய்யும் ஸுப்ரமண்யன் என்ற ஓர் பிள்ளையைப் பெற்று உலகத்தை வெகுகாலம் காக்கப்போகிறேன் என ப்ரதிக்ஞை செய்தார். (9-10) ஸத்ய ஸ்வரூபியும், ஸத்யமான வார்த்தையைக் கொண்டவருமாகிய ஸ்ரீ பகவானுடைய ப்ரதிக்ஞையும் தாமதிக்கின்றதே, நமது பாக்யக் குறைவால் கஷ்டங்கள் வ்ருத்தியாவதற்கு ஜகதீசன் என்ன செய்வார்? ஹா, இது என்ன கஷ்டம், அவ்வஸுரர்களோ, பாக்யசாலிகள். ஸ்ரீ பரமேச்வரனையே சரணடைந்திருக்கிறார்கள். அவரையே மனதினால் தியானிக்கிறார்கள் என்றான். (11-12) இவ்விதம் திக்பாலகர்களும், முனிவர்களும், தன் தன் கஷ்டங்களை வெளியிட்டார்கள். அப்பொழுது ப்ரும்மன், தேவர்களை நோக்கிக் கூறியதாவது (13) நாம் மறுபடியும் கருணாமூர்த்தியான ஸ்ரீ பரமேச்வரனை உபாஸிக்கவேண்டும். ஸகல ப்ரபஞ்ச ஸ்வரூபியான ஸ்ரீ பரமேச்வரனுக்கு அஸுரர்களும் தேவர்களும், மற்றும் சராசராத்மகமான உலகமும், யோசனை செய்யுமளவில் ஒன்றேயாகும், அல்லவா? (14½) அப்படி இல்லாவிடில் ஓ, தேவச்ரேஷ்டர்களே ஹிமவானின் புத்ரியான பார்வதீதேவியோடு லோகநாயகனான ஸர்வேச்வரன் அந்தப்புரத்தில் என்ன செய்கிறார்? த்ரிபுராரியான ஸ்ரீ பரமேச்வரனுடைய ஸமீபத்திற்கு இப்பொழுது யாரை அனுப்பலாம்? (15-16) ஆகையால் சந்திரமௌளியான பரமேச்வரனுடைய வரலாற்றை அறிந்து, அதன் பிறகு எது செய்ய முடியுமோ அதை யோசித்து முயற்சியுடன் செய்ய வேண்டும். (17) இவ்விதம் ப்ரும்ம தேவன் கூறியதைக்கேட்ட ஸ்ரீ கோவிந்தனான விஷ்ணுவும், இந்திரனும் உசிதம் எனக் கருதினார்கள். எல்லா தேவர்களும், திக்பாலகர்களும், ப்ரும்மதேவனின் வார்த்தையை மிகவும் பெரியதென அன்புடன் கருதினார்கள். (18) ஸ்ரீ மஹாவிஷ்ணு, தேவேந்திரன் முதலிய தேவச்ரேஷ்டர்கள்

अनुमत्या सुरेन्द्राणां विष्णोश्च वलवैरिणः । परमेष्ठी समाहूय पवनं गगनोद्भवम् ॥ १९
संभाव्य वाचा बहुधा सर्वेषामेव सन्निधौ । इदमाह महाबाहुः बहुमानेन वाक्पतिः ॥ २०
ब्रह्मा — वायो वयममीसर्वे कायमात्रावशेषिताः । हृतस्वा हृतलोकास्स्मो बहुकालं महासुरैः ॥ २१
नियन्तारं न पश्यामस्तेषां स्कन्दादृते किल । स्कन्दश्च शूलिनोत्पाद्यः शर्वाण्यामूर्ध्वरेतसा ॥ २२
पञ्चकृत्यपरेणैव प्रपञ्चस्यास्य कृत्स्नशः । चिरमीशेन वै देव्या दिव्यान्तःपुरवासिना ॥ २३
क्रियते किमिति प्रेत्य जानीहि त्वं सदागते । प्राणोऽसि प्राणिनां लोके देवस्यापि वपुर्महत् ॥ २४
अग्रगोहि श्रुतो वेदे गत्वा शीघ्रं कुरु प्रियम् । सुराणामपि सर्वेषां त्रैलोक्यस्यास्य मारुत ॥ २५
पवमानस्तु तच्छ्रुत्वा त्वरमाणोऽब्रवीद्वचः । नाहमस्मि विधे शक्तः सोमन्तःपुरे शिवम् ॥ २६
नापि चान्ये पुरा मारो वचःश्रुत्वाऽमृतान्धसाम् । रत्या देवं समासाद्य भस्मासीद्विदितं च वः ॥ २७

அனுமத்யா ஸுரேந்த்ராணாம் விஷ்ணோச்ச வலவைரிண: ।
பரமேஷ்டீ ஸமாஹூய பவநம் ககநோத்பவம் ॥ 19
ஸம்பாவ்ய வாசா பஹுதா ஸர்வேஷாமேவ ஸன்னிதௌ ।
இதமாஹ மஹாபாஹு: பஹுமாநேந வாக்பதி: ॥ 20
ப்ரம்மா—வாயோ வயமமீஸர்வே காயமாத்ராவ சேஷிதா: ।
ஹ்ருதஸ்வா ஹ்ருதலோகாஸ்ம: பஹுகாலம் மஹாஸுரை: ॥ 21
நியந்தாரம் நபச்யாம: தேஷாம் ஸ்கந்தாத்ருதே கில ।
ஸ்கந்தச்ச சூலிநோத்பாத்ய: சர்வாண்யாமூர்த்வரேதஸா ॥ 22
பஞ்சக்ருத்யபரேணைவ ப்ரபஞ்சஸ்யாஸ்ய க்ருத்ஸ்நச: ।
சிரமீசேந வை தேவ்யா திவ்யாந்த:புரவாஸிநா ॥ 23
க்ரியதே கிமிதி ப்ரேத்ய ஜாநீஹி த்வம் ஸதாகதே ।
ப்ராணோ஽ஸி ப்ராணிநாம் லோகே தேவஸ்யாபி வபுர்மஹத் ॥ 24
அக்ரகோஹி ச்ருதோ வேதே கத்வா சீக்ரம் குரு ப்ரியம் ।
ஸுராணாமபி ஸர்வேஷாம் த்ரைலோக்யஸ்யாஸ்ய மாருத ॥ 25
பவமானஸ்து தச்ச்ருத்வா த்வரமாணோ஽ப்ரவீத் வச: ।
நாஹமஸ்மி விதே சக்த: ஸோமமந்த:புரே சிவம் ॥ 26
நாபி சான்யே புராமார: வச: ச்ருத்வா஽ம்ருதாந்தஸாம் ।
ரத்யா தேவம் ஸமாஸாத்ய பஸ்மாஸீத் விதிதம்ச வ: ॥ 27

இவர்களின் அனுமதியின்பேரில், ஆகாயத்திலுண்டான வாயுபகவானை அழைத்து (19) எல்லோருடைய முன்னிலையில் வாக்கால் பலவிதமாக கௌரவித்து, பராக்ரமசாலியான ப்ரம்மதேவன் வெகுமானத்துடன் இவ்வாறு கூறினார். (20) ப்ரம்மா கூறுகிறார், ஓ வாயுபகவானே, இந்த யாவரும் மிக்க பலமுள்ள அஸுரர்களால் சரீரம்மட்டும் மீதமுள்ளவர்களாகவும், பொருளை இழந்தவர்களாகவும், ஸ்தானத்தை இழந்தவர்களாகவும் வெகுகாலமாய் இருந்துவருகிறோம். (21) முருகனைத்தவிர வேறு யாவரையும் அவர்களை அடக்கக்கூடியவனாக நாங்கள் காணவில்லை. மேல் நோக்கிய வீர்யத்தை உடைய பரமேச்வரனே சர்வாணியிடத்தில் ஸ்ரீ முருகனை உண்டுபண்ண முடியும். (22) உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், அனுக்ரஹம், திரோதானம், என்ற ஐந்து கார்யங்களைச் செய்துவரும் ஜகதீசன் திவ்யமான அந்தப்புரத்தில் தேவியுடன் வெகுகாலமாய் வஸித்துக்கொண்டு (23) என்ன செய்கிறார், என்பதை நீ சென்று அறிந்து வருவாய். எப்பொழுதும் ஸஞ்சரிக்கும் ஓ வாயுவே, நீ உலகிலுள்ள ப்ராணிகளுக்கெல்லாம் உயிராக இருக்கிறாய். மேலும் நீ பரமேச்வரனுக்கு சிறந்த உடலாகவும் இருக்கிறாய். (24) வேதத்தில் முந்திச் செல்கிறவர் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஓ வாயுவே, எல்லா தேவர்களுக்கும், மூவுலகிற்கும், விரைந்துசென்று நன்மையைச் செய்யும் (25) வாயுபகவான் அதைக்கேட்டு பரபரப்புற்று ஓ ப்ரம்மதேவனே, அந்தப்புரத்தில் உமையுடன் உல்லாஸமாக இருக்கின்ற ஸ்ரீ பரமேச்வரரிடம் செல்வதற்கு நான் சக்தனல்ல. (26) மற்ற எவராலும் இது நடவாது. முன்பு மன்மதன் அம்ருதபானம்செய்த தேவர்களின் வார்த்தையைக்கேட்டு ரதிதேவியுடன் ஸ்ரீ பரமேச்வரரிடம் சென்று சாம்பலானது தாங்கள் அறிந்ததே என்று கூறினான். (27) வாயுவின் இவ்வார்த்தையைக் கேட்ட

प्रभञ्जनवचः श्रुत्वा पुनरुक्तं स्वयंभुवा । ब्रह्मा — उपदेशपरं शंभुं वटमूलनिवासिनम् ॥ २८
युयोज निजया पत्न्या तदेनस्तद्विनाशकृत् । अष्टमूर्तेर्भवान्मूर्तिरिष्टा शिष्टसुपूजिता ॥ २९
सुरकार्ये महत्यस्मिन् त्वामेव वयमाश्रिताः । प्रत्याख्यानं न कर्तव्यं विलम्बमपि माकुरु ॥ ३०
गच्छ सन्तु शिवा नित्यं पन्थानः पवमान भोः । अप्रार्थयन् सुराश्चैवं विप्रा ब्रह्मर्षयोऽमलाः ॥ ३१
संप्रार्थितो मतिं चक्रे कथञ्चित्कथमाशुगः । आमंत्र्याभिप्रतस्थे तानचलं राजतं मरुत् ॥ ३२
औत्तरोऽपि ततः पूर्वो दक्षिणः पश्चिमः क्षणात् । दक्षिणोऽपि च मन्दस्सन् पुरमीशितुराश्रितः ॥ ३३
गोपुरेण पुरं प्राप्य स्वामिनो वासमासदत् । दिव्यमाणिक्यखचितं दृष्टिप्रसरतस्करम् ॥ ३४
अनेकादित्यसंकाशं अभ्रंलिहगृहाद्भुतम् । अतीतकक्ष्यो गणपैर्द्वास्थैर्भीमैरलक्षितः ॥ ३५
अन्तःपुराधिपस्यापि नन्दिनो निलयंगतः । वायुस्वरूपवांस्तत्र तेनाबोधि समीरणः ॥ ३६
उक्तश्च स क्रुधा याहि साहसी त्वं प्रभञ्जन । विशसित्वं प्रभोस्तावत् किमर्थं सदनं वद ॥ ३७

ப்ரபஞ்ஜனவச: ச்ருத்வா புனருக்தம் ஸ்வயம்புவா ।
ப்ரம்மா—உபதேசபரம் சம்பும் வடமூலநிவாஸினம் ॥ 28
யுயோஜ நிஜயா பத்ன்யா ததேநஸ்தத் விநாசக்ருத் ।
அஷ்டமூர்த்தேர்பவான் மூர்தி: இஷ்டா சிஷ்டஸுபூஜிதா ॥ 29
ஸுரகார்யே மஹத்யஸ்மின் த்வாமேவ வயமாச்ரிதா: ।
ப்ரத்யாக்யானம் நகர்தவ்யம் விளம்பமபி மாகுரு ॥ 30
கச்ச ஸந்து சிவா நித்யம் பந்தான: பவமான போ: ।
அப்ரார்த்தயன் ஸுராச்சைவம் விப்ரா ப்ரம்மர்ஷயோऽமலா: ॥ 31
ஸம்ப்ரார்திதோ மதிம் சக்ரே கதஞ்சித் கதமாசுக: ।
ஆமந்த்ர்யாபிப்ரதஸ்தே தான் அசலம் ராஜதம் மருத் ॥ 32
ஔத்தரோபி தத: பூர்வ: தக்ஷிண: பச்சிம: க்ஷணாத் । தக்ஷிணோபிச மந்தஸ்ஸன் புரமீசிதுராச்ரித: ॥ 33
கோபுரேண புரம் ப்ராப்ய ஸ்வாமினோ வாஸமாஸதத் । திவ்யமாணிக்யகசிதம் த்ருஷ்டிப்ரஸரதஸ்கரம் ॥ 34
அனேகாதித்யஸங்காசம் அப்ரம்லிஹக்ருஹாத்புதம் ।
அதீதகக்ஷ்யோ கணபை: த்வாஸ்தைர்பீமைரலக்ஷித: ॥ 35
அந்த:புராதிபஸ்யாபி நந்திநோ நிலயம் கத: । வாயுஸ்வரூபவான் தத்ர தேநாபோதி ஸமீரண: ॥ 36
உக்தச்ச ஸ க்ருதாயாஹி ஸாஹஸீத்வம் ப்ரபஞ்ஜன ।
விசஸித்வம் ப்ரபோஸ்தாவத் கிமர்தம் ஸதனம் வத ॥ 37

ப்ரம்மதேவன் மீண்டும் கூறுகிறார். ப்ரம்மா கூறுகிறார். ஆலமரத்தடியில் வஸித்து உபதேசம் செய்து வரும் ஸ்ரீ சம்புவை மன்மதன் தனது பக்தியுடன் சென்று அடித்தான், அந்த பாவம் அவனைக் கொன்றது (28½) நீயோவென்றால் அஷ்டமூர்த்தி ஸ்வரூபியான பரமேச்வரனுக்கு சிஷ்டர்களால் பூஜிக்கப்பட்ட இஷ்டமான ஓர் மூர்த்தியாவாய். (29) இந்த பெரியதான தேவகார்யத்தில் உங்களையே நாங்கள் ஆச்ரயித்திருக்கிறோம், இதை மறுக்கக் கூடாது. தாமதிக்கவும் கூடாது. (30) ஓ வாயுவே, நீ செல்லும் மார்க்கத்தில் உனக்கு மங்களமுண்டாகட்டும், இவ்விதம் தேவர்களும், நிர்மலர்களான ப்ராம்மணர்களும் வேண்டினார்கள். (31) இவ்வாறு கோரப்பட்ட வாயுவும் மிக்க மனவருத்தத்துடன் ஏற்றுக்கொண்டு அவர்களிடம் விடைபெற்று வெள்ளிமலையான கைலாஸத்திற்குப் புறப்பட்டார் (32) வாயுவானவர், வடக்கு நோக்கிச் செல்லவேண்டியவராயினும், கிழக்கு, தெற்கு, மேற்கு, இத்திசைகளுக்குச் சிறிது சென்று பிறகு வேகமாய் செல்ல ஸாமர்த்யமிருந்தும் மெதுவாய்ச்சென்று பரமேச்வரனுடைய பட்டணமான கைலாஸத்தை அடைந்தார். (33) திவ்யமாணிக்கங்களால் இழைக்கப்பட்டதும், கண்களைப் பறிக்கக் கூடியதும், அனேக ஸூர்யர்களுக்கு ஒப்பானதும், ஆகாசத்தை அளாவி நிற்கின்ற பல வீடுகளால் ஆச்சர்யப்படத்தகுந்ததுமான அப்பட்டணத்தைச் சேர்ந்து, பயங்கரர்களும், கணாதிபர்களுமான வாயிற்காப்போர்களால் காணப்படாதவனாய், அந்தப்புரத்திற்கதிபதியான நந்தியினுடைய வாஸஸ்தானத்தை அடைந்தார். அங்கு வாயு, உருவங்கொண்டவராகவே நந்திபகவானுக்குக் காணப்பட்டார். (34-36) பிறகு நந்திபகவான் கோபங்கொண்டு சொன்னதாவது, ஏ வாயுவே நீ மிகவும் துணிவு உள்ளவன், போ, நீ என்ன காரணமாக இங்கு திருடன்போல் என்னுடைய உத்திரவில்லாமல் ப்ரபுவும் ஈச்வரனும் சந்திரசூடனுமான பகவானுடைய மாளிகையை ப்ரவேசித்தாய்?

निशाम्तं चन्द्रचूडस्य मह्यं नोक्त्वाऽत्र चोरवत् । नन्दीशवचनं श्रुत्वा निवृत्तगतिरग्रतः ॥ ३८
सदागतिः प्रणम्याथ शैलादेः प्राञ्जलिःपुरः । आप्तोऽस्मि देवकार्यार्थमादिष्टोऽस्मि सुरैर्मुहुः ॥ ३९
उपमन्योर्ऋषिश्रेष्ठाच्छ्रुत्वा कृष्णो जगत्पतिः । भौमादीनसुरान्पापान् हतवान् क्षणमात्रतः ॥ ९०
श्रुत्वा पितामहाच्छुक्रात् दधीचस्तपतांवरः । आख्यानमेतदखिलं अजयद्धरिमच्युतम् ॥ ९१

इति श्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
युद्धकाण्डे पञ्चत्रिंशोऽध्यायः ॥

॥ युद्धकाण्डः समाप्तः ॥

பித்ரோ: க்ருத்யாநி க்ருத்வாயம் ஐச்வர்யம் க்ஷணபங்குரம் |
விநிந்த்ய சிவமுத்திச்ய மோக்ஷார்த்தீ தப ஆச்ரித: || 87
ய: படேத் ச்ருணுயாதேதத் ஆக்யானம் பரமாத்புதம் |
தஸ்ய சத்ருபயம் நாஸ்தி ஸுப்ரம்மண்ய க்ருபாபலாத் || 88
ச்ருத்வாருஷிமுகேப்யஸ்தத் ஏதத்விஷ்ணுர்முரம் ரிபும் |
காலநேமிம் மஹாகோரம் அஜயத் ப்ராம்மணோத்தமா: || 89
உபமன்யோர்ருஷிச்ரேஷ்டாத் ச்ருத்வா க்ருஷ்ணோ ஜகத்பதி: |
பௌமாதீனஸுரான் பாபான் ஹதவான் க்ஷணமாத்ரத: || 90
ச்ருத்வா பிதாமஹாத் சுக்ராத் ததீசஸ்தபதாம் வர: | ஆக்யானமேததமலம் அஜயத்தரிமச்யுதம் || 91

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
யுத்தகாண்டே பஞ்சத்ரிம்சோத்யாய:

|| யுத்தகாண்டஸ்ஸமாப்த: ||

சென்று (86) மாதாபிதாக்களுக்கு செய்யவேண்டிய கர்மாக்களைச் செய்துவிட்டு ஐச்வர்யமானது ஓர் நொடியில் நசிக்கக்கூடியதென நிந்தித்துவிட்டு மோக்ஷத்தை விரும்பி ஸ்ரீ பரமேச்வரனைக் குறித்து தவம் செய்தான். (87) மிக ஆச்சரியமான இந்த சரித்திரத்தை எவன் படிப்பானோ அல்லது கேழ்ப்பானோ அவனுக்கு ஸ்ரீ சுப்பிரமண்யருடைய க்ருபாபலத்தினால் சத்துருபயம் கிடையாது. (88) ஓ ப்ராம்மணோத்தமர்களே! இந்த சரித்திரத்தை முனிவர்கள் முகமாய் ஸ்ரீ மஹாவிஷ்ணு கேட்டு சத்துருவான முரன் என்னும் அசுரனையும் மகா கோரனான காலனேமியையும் ஜயித்தார். (89) ஜகத்பதியான ஸ்ரீ கிருஷ்ணனும் இந்த சரித்திரத்தை உபமன்யு என்னும் ரிஷியினிடமிருந்து கேட்டு மஹா பாபிகளான நரகாசுரன் முதலிய அசுரர்களை க்ஷண நேரத்தில் கொன்றார். (90) தபஸ்விகளில் சிறந்த, ததீச முனிவரும் மிக பரிசுத்தமான இந்த சரித்திரத்தை பாட்டனாகிய சுக்ராசார்யாரிடமிருந்து கேட்டு அச்சுதரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஜயித்தார். (91).

முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

யுத்த காண்டம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

श्री महागुरुभ्यो नमः ॥ श्री विघ्नेश्वराय नमः ॥ अविघ्नमस्तु ॥
श्री शरवणोद्भवाय नमः ॥

श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
॥ देवकाण्ड प्रारम्भः ॥

॥ देवकाण्डे प्रारम्भ मङ्गल श्लोकाः ॥

कल्याणं ददतं कटाक्षलवतो भक्ताय हत्वा रिपून् कल्याणाचल कार्मुकस्य तनुजं कारुण्यपाथो निधिम् ।
कल्याणाकृतिमव्ययं गिरिसुता प्रेमास्पदं पावनम् कल्याणाय भजेऽनुजं गणपतेः श्रीदेवसेनापतिम् ॥
भजेतरामहं वल्ली देवसेनापतिं गुहम् । मयूरवाहनं शक्तिधरं तारकमारकम् ॥

॥ ஸ்ரீ சரவணோத்பவாய நம: ॥

ஸ்ரீ ஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
॥ தேவகாண்ட ப்ராரம்ப: ॥

॥ தேவகாண்டப்ராரம்ப மங்கள ச்லோகா: ॥

கல்யாணம் தததம் கடாக்ஷலவதோ பக்தாய ஹத்வா ரிபூந்
கல்யாணாசல கார்முகஸ்ய தநுஜம் காருண்ய பாதோநிதிம் ।
கல்யாணாக்ருதிமவ்யயம் கிரிஸுதா ப்ரேமாஸ்பதம் பாவநம்
கல்யாணாய பஜேநுஜம் கணபதே: ஸ்ரீ தேவஸேனாபதிம் ॥

பஜேதராமஹம் வல்லீ தேவஸேனாபதிம் குஹம் । மயூரவாஹநம் சக்திதரம் தாரகமாரகம் ॥

மங்களச்லோகத்தின் உரை :—

கொஞ்சம் கடைக்கண் பார்வை மாத்திரத்தினால் பக்தர்களுடைய சத்துருக்களை நாசம் செய்து அவர்களுக்கு கல்யாணத்தை அளிப்பவரும் மேருமலையை வில்லாய்க் கொண்ட ஸ்ரீ பரமேச்வரனுடைய புதல்வரும் கருணைக்கடலும் கல்யாண சுந்தரமூர்த்தியும் என்றும் அழிவற்றவரும் பர்வதராஜ புத்ரியான பார்வதியினுடைய அன்புக்கு உரியவரும் மிக பரிசுத்தரும் கணபதிக்கு தம்பியும் தேவஸேனைக்கு பதியுமான ஸ்ரீ முருகனை மங்களத்தைக் கோரி பஜிக்கிறேன்.

தாரகனைக் கொன்றவரும் வேலை தரித்தவரும் மயில்மீது அமர்ந்தவரும் வள்ளி தேவஸேனை இவர்களுக்கு கணவருமான ஸ்ரீ குஹனை நன்கு பஜிக்கிறேன்.

॥ अथ प्रथमोऽध्यायः ॥

श्री देवसेना विवाह निश्चयः ॥

अथावेक्ष्य गुहो देवान् जयन्तप्रमुखानिह । बन्धितानानयेत्याह वीरबाहुं तदाऽसुरैः ॥ १
स तथेति विनिर्गत्य गुहाज्ञां शिरसा वहन् । जयंतादीनवाप्यायं वन्दितस्तैर्महाबलः ॥ २
वृत्तान्तमुक्त्वा तान् शीघ्रादानयित्वा समागतः । प्रणम्य ते गुहं दृष्ट्वा स्तुतिं चक्रुस्तरां तदा ॥ ३
तानुवाच कृपांभोधिस्सुखिनो भवताधुना । स्वर्गभोगान् यथापूर्वं भुक्त्वा यूयमितिद्विजाः ॥ ४
कृताशिषो जयंतादि देवाः परमया मुदा । प्रणेमुरिन्द्रमभ्याशे स्थितमग्निभुवस्तदा ॥ ५
परितुष्टस्सुरेशानो जयंतादीन् सुरानिमान् । आलिंग्य प्रणयेनायमुवाच वचसंच तान् ॥ ६
यानि भूतानि वीराश्च मृताः पूर्वं रणस्थले । उत्तिष्ठन्तु पुनश्शीघ्रादिति सस्मार षण्मुखः ॥ ७
तदाज्ञया मृतास्सर्वे नमिताः प्राप्त चेतनाः । अपांपतिमवेक्ष्याथ गुहः परनिषूदनः ॥ ८
महेन्द्रनगरं दैत्यकृतावासं मदाज्ञया । कबळीकुरु शीघ्रात्त्वमित्याज्ञां कृतवान् द्विजाः ॥ ९

॥ அத ப்ரதமோத்யாய: ॥

தேவஸேனா விவாஹ நிச்சயம்.

அதாவேக்ஷ்ய குஹோ தேவாந் ஜயந்த ப்ரமுகாநிஹ ।
பந்திதாநாநயேத்யாஹ வீரபாஹும் ததாऽஸுரை: ॥ 1
ஸ ததேதி விநிர்கத்ய குஹாக்ஞாம் சிரஸாவஹந் । ஜயந்தாதீநவாப்யாயம் வந்திதஸ்தைர்மஹா பல: ॥ 2
வ்ருத்தாந்த முக்த்வா தாந் சீக்ராதாநயித்வா ஸமாகத: ।
ப்ரணம்யதே குஹம் த்ருஷ்ட்வா ஸ்துதிஞ்சக்ரு: தராம் ததா ॥ 3
தாநுவாச க்ருபாம்போதி: ஸுகிநோ பவதாதுநா । ஸ்வர்கபோகாந்யதா பூர்வம் புக்த்வா யூயமிதி த்விஜா:
க்ருதாசிஷோ ஜயந்தாதி தேவா: பரமயா முதா । ப்ரணேமுரிந்த்ரமப்யாசே ஸ்திதமக்னிபுவஸ்ததா ॥ 5
பரிதுஷ்டஸ்ஸுரேசாநோ ஜயந்தாதீந்ஸுராநிமான் ।
ஆலிங்க்ய ப்ரணயேநாயம் உவாச வசநஞ்சதான் ॥ 6
யாநி பூதாநி வீராச்ச ம்ருதா: பூர்வம் ரணஸ்தலே ।
உத்திஷ்டந்து புநச்சீக்ராத் இதிஸஸ்மாரஷண்முக: ॥ 7
ததாக்ஞயா ம்ருதாஸ்ஸர்வே நமிதா: ப்ராப்தசேதநா: । அபாம்பதி மவேக்ஷ்யாத குஹ: பர நிஷூதந: ॥ 8
மஹேந்த்ர நகரம்தைத்யக்ருதாவாஸம் மதாக்ஞயா ।
கபளீகுரு சீக்ராத்த்வம் இத்யாக்ஞாம் க்ருதவாந் த்விஜா: ॥ 9

ஸ்ரீ ஸ்காந்தபுராணம் சங்கரஸம்ஹிதை சிவரஹஸ்யகண்டத்தில் தேவகாண்டம்.

முதல் அத்தியாயம்.

பின்பு ஸ்ரீ குஹன் வீரபாகுவைப் பார்த்து ஜெயிலில் அடைக்கப்பட்ட ஜயந்தன் முதலிய தேவர்களை இங்கு அழைத்து வா என உத்திரவிட்டார். (1) அந்த வீரபாகுவும் ஸ்ரீ முருகனுடைய கட்டளையை தலையால் வஹித்து புறப்பட்டு ஜயந்தன் முதலியவர்கள் இருக்குமிடம் சென்று அவர்களால் நமஸ்கரிக்கப் பட்டவராகி அந்த பலவான் (2) அவர்களுக்கு எல்லா விருத்தாந்தங்களையும் தெரிவித்து சீக்கிரமாய் அவர்களை அழைத்து வந்தார். அப்பொழுது அவர்கள் ஸ்ரீ முருகனைப் பார்த்து நமஸ்கரித்து மிகுதியாய் துதித்தார்கள். (3) ஓ முனிவர்களே! கருணைக்கடலாகிய ஸ்ரீ முருகன் ஓ ஜயந்தன் முதலிய தேவர்களே! நீங்கள் முன்போல் இப்பொழுது ஸ்வர்க போகங்களை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருங்கள் எனக் கூறினார். (4) இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்பட்ட ஜயந்தன் முதலிய தேவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு ஸ்ரீ முருகனுக்கு சமீபத்திலிருந்த இந்திரனை நமஸ்கரித்தார்கள். (5) மிக சந்தோஷமடைந்த தேவ ராஜன் ஜயந்தன் முதலிய இந்த தேவர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு மிக அன்புடன் அவர்களிடம் சில வார்த்தைகள் பேசினான். (6) பிறகு ஸ்ரீ முருகன் யுத்தரங்கத்தில் முன் இறந்த பூதர்களும் வீரர்களும் மறுபடி சீக்கிரம் பிழைத்து எழுந்திருக்கட்டும் என நினைத்தார். (7) அவருடைய ஆக்ஞையால் இறந்த எல்லோரும் நல்ல அறிவைப்பெற்று ஸ்ரீ முருகனை நமஸ்கரித்தார்கள். சத்துருக்களை நாசம் செய்கின்ற ஸ்ரீ முருகன் ஸமுத்ர ராஜனைப் பார்த்து (8) அசுரர்கள் வாசம் செய்து வந்த வீரமஹேந்திர

स तथैव चकाराशु संप्रीत्यांभोनिधिः पुरम् । विनिर्गत्य ततो देवैर्वीरैरन्यैश्च षण्मुखः ॥ १०
श्रीसन्धिनगरं रम्यमाप वाद्यमहारवैः । तत्र गत्वा मयूरात्स्वादवरुह्यासनं महत् ॥ ११
सैंहमध्यारुरोहाथ सूर्यश्चास्तं गतस्तदा । कुमारं तत्र ते भक्त्या (पद्धत्या) देवादेवमपूजयन् ॥ १२
तदानीं तेषु कृपया दृष्टिं चक्रे सुरेश्वरः । उदिते तु पुनस्सूर्ये परेद्युष्षण्मुखः स्वयम् ॥ १३
अपूजयन्महेशानं जगतां पितरं तदा । पूजयित्वा पुरारातिं षण्मुखो हृष्टमानसः ॥ १४
आरुह्य बर्हिणं रम्यं नानालंकारमण्डितम् । श्रीसन्धिनगराद्वीरैस्सेनेशैस्स्यन्दनस्थितैः ॥ १५
प्रतस्थे परया प्रीत्या पराचलमभि द्विजाः । गुहाज्ञया तदा विष्णुब्रह्ममुख्यास्सुरेश्वराः ॥ १६
स्वं स्वं वाहनमारुह्य निर्ययुस्सहसा द्विजाः । छत्रचामरसंघाश्च निर्ययुर्व्यजनैस्सह ॥ १७
ध्वजा महोन्नतास्तद्वद्वाद्यानि विविधान्यपि । चञ्चुनाभूमिमुल्लिख्य मयूरो भीषयन्नहिम् ॥ १८
केकारवैर्महाघोरैर्विचचाल क्षणात् द्विजाः । कुक्कुटोऽपि महामेघानशनिं निजचञ्चुना ॥ १९

ஸ ததைவ சகாராசு ஸம்ப்ரீத்யாம்போநிதி: புரம் |
விநிர்கத்ய ததோ தேவைர்வீரைரன்யைச்ச ஷண்முக: || 10
ச்ரீஸந்திநகரம் ரம்யமாப வாத்ய மஹாரவை: | தத்ரகத்வா மயூராத் ஸ்வாத் அவருஹ்யாஸநம் மஹத் ||
ஸைம்ம மத்யாருரோஹாயம் ஸூர்யச்சாஸ்தம் கதஸ்ததா |
குமாரம் தத்ர தே பக்த்யா (பத்தத்யா) தேவதேவ மபூஜயன் || 12
ததாநீம் தேஷு க்ருபயா த்ருஷ்டிஞ்சக்ரே ஸுரேச்வர: |
உதிதேது புந: ஸூர்யே பரேத்யுஷ்ஷண்முக: ஸ்வயம் || 13
அபூஜயன் மஹேசாநம் ஜகதாம் பிதரம் ததா | பூஜயித்வா புராராதிம் ஷண்முகோ ஹ்ருஷ்டமாநஸ: || 14
ஆருஹ்ய பர்ஹிணம் ரம்யம் நாநாலங்கார மண்டிதம் |
ச்ரீஸந்திநகராத்வீரை: ஸேநேசைஸ்ஸ்யந்தந ஸ்திதை: || 15
ப்ரதஸ்தே பரயா ப்ரீத்யா பராசலமபித்விஜா: | குஹாக்ஞயா ததா விஷ்ணு ப்ரும்ம முக்யாஸ்ஸுரேச்வரா:
ஸ்வம் ஸ்வம் வாஹநமாருஹ்ய நிர்யயுஸ்ஸஹஸா த்விஜா: |
சத்ரசாமர ஸங்காச்ச நிர்யயுர்வ்யஜநைஸ்ஸஹ || 17
த்வஜா மஹோந்நதாஸ்தத்வத் வாத்யாநி விவிதாந்யபி |
சஞ்சுனா பூமி முல்லிக்ய மயூரோ பீஷயன் அஹிம் || 18
கேகாராவைர் மஹாகோரை: விசசால க்ஷணாத் த்விஜா: | குக்குடோபி மஹாமேகாநசநிம் நிஜசஞ்சுனா ||

பட்டணத்தை எனது உத்திரவின்படி சீக்கிரம் விழுங்கிவிடு என உத்திரவிட்டார். (9) ஸமுத்ர ராஜனும் சந்தோஷத்தோடு அப்பட்டணத்தை அப்படியே செய்துவிட்டார். பிறகு ஸ்ரீ ஷண்முகன் தேவர்கள் வீரர்கள் முதலிய இன்னும் மற்றவர்களுடன் புறப்பட்டு (10) மிகுந்த வாத்ய கோஷங்களோடு அழகிய திருச்செந்தூர் நகரத்திற்கு வந்தார். அங்கு சென்று தனது மயிலிலிருந்து இறங்கி (11) பெருமைபொருந்திய ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது சூரியனும் அஸ்தமனத்தை அடைந்தார். அங்கு தேவர்கள் ஸ்ரீ குமரேசனை மிகுந்த பக்தியோடு பூஜை செய்தார்கள். (12) அப்பொழுது தேவேசன் அவர்கள்மீது க்ருபையோடு பார்வையைச் செலுத்தினார். மறுநாள் சூரியன் உதயமானவுடன் ஸ்ரீ ஷண்முகன் தானும் (13) ஸகல உலகங்களுக்கும் தந்தையான ஸ்ரீ மஹேச்வரனை பூஜை செய்தார். த்ரிபுரனுக்கு சத்ருவாகிய ஸ்ரீ பரமசிவனை பூஜை செய்து ஸ்ரீ ஷண்முகன் வெகு சந்தோஷமடைந்த மனமுடையவராகி (14) அனேகவித ஆபரணங்களால் அலங்கரிந்ததும் அழகானதுமான மயிலின்மீது ஏறிக்கொண்டு தேரில் ஏறிக்கொண்ட வீரர்களோடும் ஸேனாதிபர்களோடும் திருச்செந்தூரிலிருந்து (15) திருப்பரம்குன்றத்தை நோக்கி புறப்பட்டார். ஓ முனிவர்களே! அப்பொழுது விஷ்ணு ப்ரும்மா முதலிய எல்லா தேவ ச்ரேஷ்டர்களும் (16) தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிக் கொண்டு வேகமாய் புறப்பட்டார்கள். குடைகள் சாமரங்கள் இவைகளுடைய வரிசைகள் விசிறிகளோடு கூட புறப்பட்டன (17) மிக உன்னதங்களான த்வஜங்களும் அவ்விதமே அனேகவித வாத்யங்களும் கூடச் சென்றன. ஓ முனிவர்களே! மயிலானது மூக்கினால் பூமியை கிரிக்கொண்டு மஹாகோரமான அகவுதலின் சப்தங்களால் ஸர்பங்களை பயமுறுத்திக்கொண்டும் சென்றது. ஓ ப்ராஹ்மண தேவர்களே! கோழியானது மகா மேகங்களையும் இடிகளையும் தன் மூக்கினால் (18-19) கொத்திக்கொண்டு மிகுந்த

लेलिहानो महारावो निरगाद्भूसुरास्तदा । मृगाणां चापि भूतानामारावैस्तु मृगाःपरे ॥ २०
गुहां प्रविविशुस्त्रस्ताः पर्वतस्य समंततः । केकीकुक्कुटशब्देभ्य भृशंत्रस्ता महोरगाः ॥ २१
बिलानि विविशुश्शीघ्रं गंभीराणि तदा द्विजाः । समजायत वेदाना (देवाना) मारावोऽपि ऋषीश्वराः ॥
अस्तुवन् गुहमीशानं स्तोत्रवर्यैः स्तुतिप्रियम् । तदा किन्नरमुख्यानां गानासक्तमनागुहः ॥ २३
पराचलं महारावैरापायं दानवान्तकः । ऋषयष्षड्विधात्राद्या देवा अपि गुहं तदा ॥ २४
स्थातव्यमत्र देवेश भवता पर्वतोत्तमे । एवमप्रार्थयन् स्तुत्या सुब्रह्मण्यं सुरेश्वरम् ॥ २५
तानुवाच गुहो वीक्ष्य युष्माभिस्सम्यगीरितम् । याथाज्ञातं मया पूर्वं तदेतत् स्मारितं किल ॥ २६
इत्युदीर्य गिरेरूर्ध्वमारुरोह सुरेश्वरः । तत्रगत्वा गुहो वीक्ष्य विश्वकर्माणमग्रतः ॥ २७
निर्मातव्यं त्वया रम्यं पुरं मम सुरप्रिय । इति संभाषयामास कारुण्यामृत विग्रहः ॥ २८
स तस्य भवनं मूर्ध्नि कृत्वा तक्षाच नाकिनाम् । निर्ममेऽथ पुरं रम्यं नानावृक्षोपशोभितम् ॥ २९
गोपुराट्टालसंयुक्तं प्राकारवलभीवृतम् । नानाश्चर्यसमोपेतं नानालंकारमण्डितम् ॥ ३०

லேலிஹாநோ மஹாராவ: நிரகாத்பூஸுராஸ்ததா ।
ம்ருகாணாஞ்சாபிபூதாநாம் ஆராவைஸ்து ம்ருகா: பரே ॥ 20
குஹாம் ப்ரவிவிசுஸ்த்ரஸ்தா: பர்வதஸ்ய ஸமந்தத: ।
கேகீகுக்குடசப்தேப்ய: ப்ருசம் த்ரஸ்தா மஹோரகா: ॥ 21
பிலாநி விவிசு: சீக்ரம் கம்பீராணி ததா த்விஜா: । ஸமஜாயத வேதாநாம் ஆராவோபி ரிஷீச்வரா: ॥ 22
அஸ்துவன் குஹமீசாநம் ஸ்தோத்ரவர்யை: ஸ்துதிப்ரியம் ।
ததா கின்னரமுக்யாநாம் காநாஸக்தமனா குஹ: ॥ 23
பராசலம் மஹாராராவை: ஆபாயத்தாநவாந்தக: । ரிஷய: ஷட்விதாத்ராத்யா: தேவா அபி குஹம் ததா ॥ 24
ஸ்தாதவ்யமத்ர தேவேச பவதா பர்வதோத்தமே ।
ஏவமப்ரார்தயன் ஸ்துத்யா ஸுப்ரம்மண்யம் ஸுரேச்வரம் ॥ 25
தாநுவாச குஹோ வீக்ஷ்ய யுஷ்மாபி: ஸம்யகீரிதம் ।
யாதாக்ஞாதம் மயாபூர்வம் ததேதத் ஸ்மாரிதம்கில ॥ 26
இத்யுதீர்ய கிரேரூர்த்வம் ஆருரோஹ ஸுரேச்வர: । தத்ரகத்வா குஹோ வீக்ஷ்ய விச்வகர்மாணமக்ரத: ॥
நிர்மாதவ்யம் த்வயா ரம்யம் புரம் மம ஸுரப்ரிய । இதி ஸம்பாஷயாமாஸ காருண்யாம்ருத விக்ரஹ: ॥ 28
ஸதஸ்ய வசநம் மூர்த்நி க்ருத்வா தக்ஷாச நாகிநாம் । நிர்மமேச புரம்ரம்யம் நாநாவ்ருக்ஷோபசோபிதம் ॥
கோபுராட்டாலஸம்யுக்தம் ப்ராகாரவளபீவ்ருதம் । நாநாச்சர்ய ஸமோபேதம் நாநாலங்காரமண்டிதம் ॥ 30

சப்தத்தோடு சென்றது. அவரவர் வாகனங்களான ம்ருகங்களுடையவும் பூதர்களுடையவும் சப்தங்களால் மற்ற மிருகங்களெல்லாம் (20) பயந்தவைகளாகி நான்கு பக்கங்களிலுமுள்ள மலைகளின் பொந்துகளில் புகுந்துகொண்டன. மயில் கோழி இவைகளுடைய சப்தங்களால் பெரிய ஸர்பங்களெல்லாம் மிக பயந்து(21) மிகுந்த ஆழமுள்ள பொந்துகளில் சீக்கிரம் நுழைந்தன. ஓ முனிவர்களே! அப்பொழுது வேத கோஷங்களும் உண்டாயின. ரிஷிச்ரேஷ்டர்களெல்லாம் (22) அஷ்டைச்வர்யமுடையவரும் ஸ்துதிகளில் பிரியமுள்ளவருமான ஸ்ரீ முருகனை ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்பொழுது அசுரர்களுக்கு யமனான ஸ்ரீ முருகன் கின்னர ச்ரேஷ்டர்களுடைய கானத்தில் விருப்பமுள்ள மனமுள்ளவராய் பெரும் கூச்சலோடு திருப்பரங்குன்றம் வந்தார். (சாபத்தால் முன்பு மீனுருவம் கொண்டிருந்த) ஆறு முனிவர்களும் ப்ரும்மா முதலிய தேவர்களும் ஸ்ரீ முருகனைப் பார்த்து (23-24) ஓ தேவேச! மேன்மையுள்ள இம்மலையில் (திருப்பரங்குன்றத்தில்) தங்கவேண்டும் என அந்த சுப்ரமணியரை ஸ்தோத்திரங்களால் வேண்டினார்கள். (25) அவர்களைப் பார்த்து ஸ்ரீ முருகன் கூறினார் நீங்கள் நன்றாய்ச் சொன்னீர்கள், நான் முன்பு எதைக் கட்டளையிட்டேனோ அந்த விஷயம் இப்பொழுது ஞாபகப்படுத்தப்பட்டது. (26) இவ்வாறு கூறிவிட்டு ஸ்ரீ தேவேசன் அந்த மலையின்மீது ஏறினார். அங்கு சென்று ஸ்ரீ முருகன் தன் முன்னின்ற விச்வகர்மாவைப் பார்த்து (27) தேவர்களுக்குப் பிரியனான ஓ விச்வகர்மாவே! ஓர் அழகான பட்டணத்தை எனக்காக நிர்மாணம் செய்யவேண்டும் என்று கருணையினால் நனைந்த உருவங்கொண்ட ஸ்ரீ முருகன் கூறினார். (28) அந்த தேவதச்சனும் அந்த மலையின் சிகரத்தில் பல வ்ருக்ஷங்களால் சோபை கொண்டதாகவும், கோபுரம் அட்டான மண்டபம் இவைகளுடன் கூடியதாகவும், ப்ராகாரங்கள் கொடுங்கைகள் இவைகளால் சூழப்பட்டதாகவும், பலவித ஆச்சரியங்களோடு கூடியதாகவும், பல

एवं निर्मितमन्वीक्ष्य त्वष्ट्रा सन्तुष्टमानसः । वीथीषु वीरान् भूतानि विनियोज्य बलाधिपैः ॥ ३१
प्रविश्य स्वालयं रम्यं मयूरादवरुह्य सः । सिंहासनं समारुह्य पार्श्वयोश्च सुरांस्तदा ॥ ३२
स्थापयित्वा स्वयं वीरैः कृतनानोपचारवान् । ऋषिभिष्षड्भिरत्यन्तं पूजितः पार्वती सुतः ॥ ३३
तदा तेषां सुविज्ञानं उपदेष्टुमनास्सुरान् । ब्रह्मादीन् स्वस्वभवनं प्रेरयामास भूसुराः ॥ ३४
प्रेरयित्वा स्वविज्ञानं उपदिश्यात्र संस्थितः । ब्रह्मविष्णुमुखानिन्द्रः प्रोवाच स्वसुतामिह ॥ ३५
गुहाय संप्रयच्छामि विवाहोक्तविधानतः । इति तस्य वचः श्रुत्वा सन्तोषेण तथेति ते ॥ ३६
आपिरे स्वानि वेश्मानि कृतकृत्या इव क्षणात् । स्वगृहं प्राप्य मघवानिन्द्राणीं स्वसुतांगजाम् ॥ ३७
आनेतुं प्रेषयामास तथेति स्वभटांस्तदा । तइमे शीघ्रमेवैनामिन्द्राणीं मेरुवासिनीम् ॥ ३८
प्रणम्य शूरमुख्यानां संहारं देवमोचनम् । पराचलप्रवेशंच गुहस्य परमात्मनः ॥ ३९
सुतोद्वाहप्रसङ्गंच यथेन्द्रेण सुभाषितम् । उक्त्वा तामानयित्वाशु ससुतां सगजां तथा ॥ ४०

ஏவம் நிர்மிதமன்வீக்ஷ்ய த்வஷ்ட்ரா ஸந்துஷ்டமாநஸ: |
வீதீஷு வீரான் பூதாநி விநியோஜ்ய பலாதிபை: || 31
ப்ரவிச்ய ஸ்வாலயம் ரம்யம் மயூராதவருஹ்யஸ: |
ஸிம்மாஸநம் ஸமாருஹ்ய பார்ச்வயோ:ச ஸுராம்ஸ்ததா || 32
ஸ்தாபயித்வா ஸ்வயம் வீரை: க்ருத நாநோபசாரவான் |
ரிஷிபி: ஷட்பிரத்யந்தம் பூஜித: பார்வதிஸுத: || 33
ததா தேஷாம் ஸுவிக்ஞானமுபதேஷ்டுமநா: ஸுரான் |
ப்ரம்மாதீன் ஸ்வஸ்வ பவநம் ப்ரேரயாமாஸ பூஸுரா: || 34
ப்ரேரயித்வா ஸ்வவிக்ஞானம் உபதிச்யாத்ர ஸம்ஸ்தித: | ..
ப்ரம்ம விஷ்ணு முகாநித்தர: ப்ரோவாச ஸ்வஸுதாமிஹ || 35
குஹாய ஸம்ப்ரயச்சாமி விவாஹோக்த விதாநத: | இதி தஸ்ய வச: ச்ருத்வா ஸந்தோஷேண ததேதி தே ||
ஆபிரே ஸ்வாநிவேச்மாநி க்ருதக்ருத்யா இவ க்ஷணாத் |
ஸ்வக்ருஹம் ப்ராப்ய மகவான் இந்த்ராணீம் ஸ்வஸுதாம்கஜாம் || 37
ஆநேதும் ப்ரேஷயாமாஸ ததேதி ஸ்வபடாம்ஸ்ததா |
தஇமே சீக்ரமேவைநாம் இந்திராணீம் மேருவாஸிநீம் || 38
ப்ரணம்ய சூரமுக்யாநாம் ஸம்ஹாரம் தேவமோசனம் | பராசல ப்ரவேசஞ்ச குஹஸ்ய பரமாத்மந: || 39
ஸுதோத்வாஹப்ரஸங்கஞ்ச யதேந்திரேண ஸுபாஷிதம் |
உக்த்வா தாமாநயித்வாசு ஸஸுதாம் ஸகஜாம் ததா || 40

அலங்காரங்களால் சோபை கொண்டதாகவும் உள்ள ஓர் நகரத்தை உண்டாக்கினான். (29-30) இவ்வாறு த்வஷ்டாவால் கட்டப்பட்ட நகரத்தை ஸ்ரீ முருகன் பார்த்து மிகுந்த சந்தோஷம் கொண்டவராகி வீதிகளில் ஸேனாதிபர்களோடு பூதகணங்களை இருக்கும்படிச் செய்து (31) மயிலைவிட்டு கீழே இறங்கி அழகிய தனது அரண்மனைக்குள் பிரவேசித்து ஸிம்மாஸனத்தில் அமர்ந்தார். இரண்டு பக்கங்களிலும் தேவர்களை இருக்கும்படிச் செய்தார். வீரர்களால் செய்யப்பட்ட பற்பல உபசாரங்களை உடையவராகவும் ஆறு முனிவர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவராகவும் ஸ்ரீ பார்வதி குமாரன் விளங்கினார். (32-33) ஓ முனிவர்களே! அப்பொழுது அந்த ஆறு முனிவர்களுக்கும் ஸ்வரூபானுபவத்தை உபதேசிக்க மனம் கொண்டு ப்ரும்மாதி தேவர்களை தங்கள் தங்கள் வீட்டிற்குச் செல்லும்படி உத்திரவிட்டார். (34) அவர்களை அனுப்பிவிட்டு தனது ஸ்வரூபானுபவத்தை உபதேசித்து அங்கு வீற்றிருந்தார். பிறகு ப்ரும்மா விஷ்ணு முதலியவர்களைப் பார்த்து இந்திரன் கூறியது இங்கு எனது குமாரியை (35) விவாஹ முறைப்படி குஹனுக்கு நான் மணம் புரிவிக்கிறேன் என்று கூறியதைக் கேட்டு ஸந்தோஷத்துடன் அவ்வாறே ஆகட்டுமென்று ஓர் நொடியில் க்ருதார்த்தர்களாய் ஆனதுபோல் எண்ணி தன் தன் இருப்பிடத்தை அடைந்தார்கள். இந்திரன் தன் அரண்மனையை அடைந்து மனைவியான இந்திராணியையும் தன் பெண்ணை கஜநாயகியையும் (36-37) அழைத்துவரும்படி தன் சேவகர்களை அனுப்பினான். அப்பொழுது அவர்களும் அவ்வாறே ஆகட்டுமென்று வேகமாகச் சென்று மஹாமேருவிலிருக்கும் இந்திராணியை (38) வணங்கி சூரன் முதலியவர்களுடைய ஸம்ஹாரத்தையும் தேவர்களின் விடுதலையையும் பரமாத்மாவான ஸ்ரீ முருகனுடைய திருப்பரங்குன்ற விஜயத்தையும் (39) இந்திரனால் நன்கு கூறப்பட்ட பெண்ணின் கல்யாண விஷயத்தையும் அவளுக்கு அறிவித்து ஏவலர் பெண்ணுடனும்

प्रापुरिन्द्रस्य भवनं नानालंकारशोभितम् । तामागतां शचीं दृष्ट्वा बन्दीग्राहभिताश्रयाः ॥ ४१
कन्याः प्रणेमुरागत्य परिफुल्लकपोलकाः । जयन्तोऽपि समागत्य नमश्चक्रे स्वमातरम् ॥ ४२
आलिङ्ग्य तं सा रुदती (सुदती) दुःखमाप तदा भृशम् । समीचीनामुवाचैषा वाचं स्त्रीणांच नाकिनाम् ॥ ४३
सर्वे जना निशम्यैतत् कल्याणं शरजन्मनः । तुष्टिमापुस्तदाऽत्यन्तं प्रसन्नेनान्तरात्मना ॥ ४४
विनिर्गत्य सुराधीशस्समागत्य सुरैस्सह । प्रणम्य षण्मुखं प्राह विनयेन नताननः ॥ ४५
शूरपद्ममुखान् दैत्यान् स्वामिन् हत्वा सुरानिमान् । ररक्षिथ कृपासिन्धो दत्वाऽस्मभ्यं पदं स्वकम् ॥ ४६
प्रयच्छामस्ततः किंवा लीलामङ्गलविग्रह । तथापि देवदेवेश भक्तानामिष्टपूरक ॥ ४७
रक्षायै देवतानां त्वं मत्पुत्र्याः पाणिसंग्रहम् । कुरु सर्वामरेशान रक्ष रक्ष दयानिधे ॥ ४८
इत्युक्त्वा प्रणनामायं दण्डवत्पृथिवीतले । तमाह देवदेवेशस्तथेत्युक्त्वा पुरन्दरम् ॥ ४९
परेद्युरेव कल्याणं भवत्वत्र मदाज्ञया । उत्तिष्ठ शीघ्रं गच्छत्वं तदर्थं यत्नमाचर ॥ ५०
इत्युक्त्वा प्रेषयामास सन्तोषेणामराधिपम् । ततोऽमरेशो निर्गत्य तुष्ट्या परमया युतः ॥ ५१

ப்ராபுரிந்த்ரஸ்ய பவனம் நாநாலங்காரசோபிதம் | தாமாகதாம் சசீம் த்ருஷ்ட்வா பந்திக்ராஹமிதா:சயா: ||
கன்யா: ப்ரணேமுராகத்ய பரிபுல்லகபோலகா: | ஜயந்தோபிஸமாகத்ய நம:சக்ரே ஸ்வமாதரம் || 42
ஆலிங்க்ய தம் ஸா ருததி து:கமாப ததா ப்ருசம் | ஸமீசீநா முவாசைஷா வாசம் ஸ்திரீணாஞ்சநாகிநாம் ||
ஸர்வே ஜநா நிசம்யைதத் கல்யாணம் சரஜன்மன: |
துஷ்டிமாபுஸ்ததாத்யந்தம் ப்ரஸன்னேநாந்தராத்மநா || 44
விநிர்கத்ய ஸுராதீச: ஸமாகத்ய ஸுரை:ஸஹ | ப்ரணம்ய ஷண்முகம் ப்ராஹ விநயேந நதாநந: || 45
சூரபத்ம முகான் தைத்யான் ஸ்வாமின் ஹத்வாஸுராநிமான் |
ரரக்ஷித க்ருபா ஸிந்தோ தத்வாऽஸ்மப்யம் பதம் ஸ்வகம் || 46
ப்ரயச்சாமஸ்தத: கிம்வா லீலாமங்கள விக்ரஹ | ததாபி தேவதேவேச பக்தாநாமிஷ்டபூரகா || 47
ரக்ஷாயை தேவதாநாம் த்வம் மத்புத்ரியா: பாணிஸங்க்ரஹம் |
குரு ஸர்வாமரேசாந ரக்ஷ ரக்ஷ தயா நிதே || 48
இத்யுக்த்வா ப்ரண நாமாயம் தண்டவத் ப்ருதிவிதலே |
தமாஹ தேவதேவேச: ததேத்யுக்த்வா புரந்தரம் || 49
பரேத்யுரேவ கல்யாணம் பவத்வத்ர மதாக்ஞயா | உத்திஷ்ட சீக்ரம் கச்சத்வம் ததர்த்தம் யத்னமாசர || 50
இத்யுக்த்வா ப்ரேஷயாமாஸ ஸந்தோஷேணாமராதிபம் |
ததோऽமரேசோ நிர்கத்ய துஷ்ட்யா பரமயா யுத: || 51

ஐராவதத்துடனும் கூட அழைத்துக்கொண்டு (40) பல அலங்காரங்களால் பிரகாசிக்கின்ற இந்திரன் மாளிகைக்கு வந்தார்கள். சிறையில் அடைக்கப்பட்டிருந்த தேவ கன்னிகைகளெல்லாம் அங்கு வந்த இந்திராணியைப் பார்த்து (41) மலர்ந்த கன்னத்தை உடையவர்களாகி வந்து நமஸ்கரித்தார்கள். ஜயந்தனும் வந்து தனது தாயை நமஸ்கரித்தான். (42) இந்திராணியானவள் ஜயந்தனை ஆலிங்கனம் செய்துகொண்டு மிகவும் வருந்தினாள். அவள் தேவ ஸ்திரீகளோடு நல்ல பிரியமான வார்த்தைகளைப் பேசினாள். (43) ஸகல ஜனங்களும் சரவணபவருக்கு கல்யாணம் நடக்கப்போவதைக் கேட்டு மனம் குளிர்ந்து மிகவும் சந்தோஷமடைந்தார்கள். (44) பிறகு தேவராஜன் ஸகல தேவர்களோடும் கூட புறப்பட்டுவந்து ஸ்ரீ ஷண்முகனை நமஸ்கரித்து வினயத்தினால் முகம் வணங்கினவனாகி தெரிவித்துக் கொண்டதாவது (45) ஓ கருணைக்கடலே! தாங்கள் சூரபத்மன் முதலிய அசுரர்களைக் கொன்று எங்களுக்கு தனது ஸ்தானத்தைக் கொடுத்து தேவர்களையெல்லாம் காப்பாற்றினீர். (46) விளையாட்டாக பெற்ற மங்கள விக்ரஹத்தை உடையவரே! நாங்கள் நங்களுக்கு எதைக் கொடுக்கப் போகின்றோம். அப்படி இருந்தபோதிலும் பக்தர்களுடைய எண்ணத்தை பூர்த்திசெய்பவரே! தேவாதி தேவா! (47) எல்லா தேவர்களுக்கும் ஈச்வரனே! கருணைக்கடலே! தேவர்களை ரக்ஷிப்பதற்காக தாங்கள் என் குமாரியினுடைய பாணிக்ரஹணத்தைச் செய்துகொண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டும். ரக்ஷிக்க வேண்டும் (48) எனக் கூறி தண்டம்போல் பூமியில் நமஸ்கரித்தான். அப்பொழுது ஸ்ரீ முருகன் அப்படியே ஆகட்டுமென்று இந்திரனிடம் சொல்லிவிட்டு (49) ஓ இந்திரா! நமது உத்திரவின்படி நாளைதினமே கல்யாணம் நடக்கவேண்டும். ஆகையால் நீ சீக்கிரம் சென்று அதற்கு ஆகவேண்டிய முயற்சியைச் செய்வாயாக (50) எனக்கூறி தேவத் தலைவனை சந்தோஷத்தோடு அனுப்பினான். பிறகு

स्वगेहं प्राप्य दूतान् स्वान् प्रेषयामास शीघ्रतः । भूपतीन्मुचुकुन्दादीन् गन्धर्वाधिपतीन्सुरान् ॥ ५२
आनयध्वं गुहस्यात्र श्वःकल्याणमिति द्विजाः । पुनश्च विश्वकर्माणं कुरु कल्याणमण्टपम् ॥ ५३
वापीकूपतटाकादीनन्यानिकरणान्यपि । इति सञ्चोदयामास मघवान् सुरवर्द्धकिम् ॥ ५४
स तथेति चकाराशु तत्सर्वं सुरवर्धकिः । एवमिन्द्रस्तदा कृत्वा कल्याणापेक्षितः स्थितः ॥ ५५
मुचुकुन्दमुखान्दूता भूपतीनमरानपि । व्यजिज्ञिपन्निदंसर्वं वृत्तान्तं ब्राह्मणोत्तमाः ॥ ५६
मुचुकुन्दस्समाकर्ण्य कल्याणं षण्मुखस्य सः । प्रीत्या परमयाऽभ्यर्च्य दूतांस्तानुपचारतः ॥ ५७
सबन्धुभिर्नागरैश्च स्वदेशस्थैर्विलासिभिः । नागरीभिश्च योषाभिः पुरन्ध्रीभिर्विनिर्गतः ॥ ५८
प्राप तत्पत्तनं रम्यं यत्र स्कन्दो विराजते । अन्येऽपि पृथिवीपाला दिगन्तेषु स्थिताद्विजाः ॥ ५९
चन्द्रसूर्यौ तथा देवा ऋषयः पुण्यशालिनः । श्रुत्वा दूतमुखेभ्यस्ते कल्याणं शरजन्मतः ॥ ६०
प्रहृष्टमनसस्सर्वे नानालंकार मन्धराः । चतुरंगबलैस्साकं वाद्यानांच महारवैः ॥ ६१
शिबिकान्दोलिकारूढैः प्रभुभिश्च समन्ततः । सुन्दरीभिस्सुरम्याभि र्विनिर्गत्य महाबलाः ॥ ६२

ஸ்வகேஹம் ப்ராப்ய தூதான் ஸ்வான் ப்ரேஷயாமாஸ சீக்ரத: ।
பூபதீன் முசுகுந்தாதீன் கந்தர்வாதிபதின் ஸுரான் ॥ 52
ஆநயத்வம் குஹஸ்யாத்ர ச்வ: கல்யாணமிதி த்விஜா: ।
புந:ச விச்வகர்மாணம் குருகல்யாணமண்டபம் ॥ 53
வாபீகூபதடாகாதீநி அன்யாநி கரணுன்யபி । இதி ஸஞ்சோதயாமாஸ மகவான் ஸுரவர்தகிம் ॥ 54
ஸததேதி சகாராசு தத்ஸர்வம் ஸுரவர்தகி: । ஏவமிந்த்ரஸ்ததா க்ருத்வா கல்யாணுபேக்ஷித: ஸ்தித: ॥
முசுகுந்தமுகான் தூதா பூபதீநமராநபி ।
வ்யஜிக்ஞிபந்நிதம் ஸர்வம் வ்ருத்தாந்தம் ப்ராம்மணுேத்தமா: ॥ 56
முசுகுந்த: ஸமாகர்ண்ய கல்யாணம் ஷண்முகஸ்ய ஸ: ।
ப்ரீத்யா பரமயாப்யர்ச்ய தூதாம்ஸ்தாநுபசாரத: ॥ 57
ஸபந்துபிர்நாகரை:ச ஸ்வதேசஸ்தைர்விலாஸிபி: । நாகரீபி:ச யோஷாபி: புரந்த்ரீபிர்விநிர்கத: ॥ 58
ப்ராப தத்பத்தனம் ரம்யம் யத்ர ஸ்கந்தோ விராஜதே ।
அன்யேபி ப்ருதிவீபாலா திகந்தேஷு ஸ்திதா த்விஜா: ॥ 59
சந்த்ரஸூர்யௌ ததா தேவா ரிஷய: புண்யசாலிந: ।
ச்ருத்வா தூத முகேப்யஸ்தே கல்யாணம் சரஜன்மந: ॥ 60
ப்ரஹ்ருஷ்டமநஸ: ஸர்வே நாநாலங்காரமந்தரா: । சதுரங்கபலை: ஸாகம் வாத்யாநாஞ்ச மஹாரவை: ॥
சிபிகாந்தோளிகாரூடை: ப்ரபுபி:ச ஸமந்தத: । ஸுந்தரீபி: ஸுரம்யாபி: விநிர்கத்ய மஹாபலா: ॥ 62

அமரேசன் மிகுந்த சந்தோஷத்தோடு புறப்பட்டு (51) ஓ முனிவர்களே! தன் வீடு சேர்ந்து தனது தூதர்களைப் பார்த்து ஓ தூதர்களே! முசுகுந்தன் முதலிய அரசர்களையும் கந்தர்வ ராஜர்களையும் மற்ற தேவர்களையும் ஸ்ரீ முருகனுக்கு நாளைக்கு கல்யாணமென்று சீக்கிரம் அழைத்துவாருங்கள் என உத்திரவிட்டு அனுப்பினுன். மறுபடி தேவத் தச்சனை விச்வகர்மாவை நோக்கி ஓர் கல்யாண மண்டபத்தையும் ஓடைகள் கிணறுகள் குளங்கள் முதலியவைகளையும் மற்றும் வேண்டியவைகளையும் அமைப்பாயாக என உத்திரவிட்டான். (52-54) அந்த தேவத் தச்சனும் அப்படியே ஆகட்டுமென்று அவற்றையெல்லாம் சீக்கிரம் செய்து முடித்தான். இவ்விதம் இந்திரன் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்துவிட்டு கல்யாணுேத்ஸவத்தை எதிர்பார்த்து காத்திருந்தான். (55) ஓ முனிவர்களே! தூதர்கள் இந்த விருத்தாந்தங்களை யெல்லாம் முசுகுந்தன் முதலிய அரசர்களுக்கு தெரியப்படுத்தினுர்கள். (56) ஸ்ரீ முசுகுந்தனும் ஸ்ரீ ஷண்முகருடைய கல்யாணத்தைக் கேட்டு மிகுந்த சந்தோஷத்தினுல் அந்த தூதர்களை அதிக உபசாரத்தோடு பூஜித்து (57) தன் நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஸகல பந்துவர்க்கங்களுடனும் நாகரீகமுள்ளவர்களும் கற்புடையவர்களுமான சுமங்கலி ஸ்திரீகளோடு புறப்பட்டார். (58) எங்கு ஸ்ரீ கந்தன் பிரகாசிக்கிருரோ அந்த நேர்த்தியான பட்டணத்தை வந்து அடைந்தான். ஓ அந்தணர்களே நாலா திசைகளிலுமுள்ள மற்ற அரசர்களும் (59) சூரிய சந்திரர்களும் தேவர்களும் புண்யசாலிகளான ரிஷிகளும் தூதர்கள் முகமாக சரவணபவனின் கல்யாண வைபவத்தை கேட்டு (60) எல்லோரும் சந்தோஷமுள்ள மனமுடையவர்களாகி பலவித அலங்காரங்களைச் செய்து கொண்டவர்களாய் நால்வகை படைகளுடனும் வாத்ய கோஷங்களுடனும் (61) பல்லக்கு மஞ்சம் இவைகளில் ஏறிச்செல்லும் பிரபுக்

पराचलबहिर्भूषु स्वावासं चक्रिरे मुदा । पुष्पारामेषु वृक्षाणामारामेषु सरित्स्वपि ॥ ६३
प्रपासु मण्टपेष्वत्र संबाधेन महीसुराः । मुचुकुन्दमुखाभूपा देवाश्च ऋषयस्तदा ॥ ६४
शतक्रतोर्गृहं गत्वा दृष्ट्वा तं त्वरया सह । मिथः कृतोपचारास्ते कृतसल्लापिनोऽवसन् ॥ ६५
समागतास्तु देवानां भूपानांच वराः स्त्रियः । इन्द्राणीनिकटं गत्वा प्रणम्यैनांच तत्सुताम् ॥ ६६
कल्याणवेषां तां देव्यो गजनायिकसंज्ञिकाम् । अलंचक्रुस्ततस्तास्तां दिव्यांबरविभूषणैः ॥ ६७
ततो विधात्रा निर्दिष्टस्समयोऽयमिति द्विजाः । कल्याणाय निशम्यैतदिन्द्रो विष्ण्वादिभिस्सह ॥ ६८
सुब्रह्मण्यस्य भवनं गत्वा देवं प्रणम्य सः । आगच्छ देवदेवेश विवाहाय गृहं मम ॥ ६९
समयोऽयं समीचीनस्त्रायस्वैनान्कृपानिधे । इत्युक्तवन्तं तं प्रेक्ष्य परमात्मा गुहस्तदा ॥ ७०
विहस्य किञ्चित्सन्तोषादवरुह्यासनात्स्वकात् । आरुह्य बर्हिणं रम्यं नानालंकार मन्थरम् ॥ ७१
नवाधिकैर्महावीरैर्लक्षपर्यन्तगामिभिः । कृतात्मपावनस्तोत्रैर्देवैरञ्जलिपाणिभिः ॥ ७२

பராசலபஹிர்பூஷு ஸ்வாவாஸம் சக்ரிரே முதா |
புஷ்பாராமேஷு வ்ருக்ஷாணம் ஆராமேஷு ஸரித்ஸ்வபி || 63
ப்ரபாஸு மண்டபேஷ்வத்ர ஸம்பாதேந மஹீஸுரா: |
முசுகுந்தமுகாபூபா: தேவா:ச ரிஷயஸ்ததா || 64
சதக்ரதோர்க்ருஹம் கத்வா த்ருஷ்ட்வா தம் த்வரயா ஸஹ |
மித: க்ருதோபசாராஸ்தே க்ருத ஸல்லாபிநோऽவஸன் || 65
ஸமாகதாஸ்து தேவாநாம் பூபாநாஞ்ச வரஸ்திரிய: |
இந்திராணி நிகடம் கத்வா ப்ரணம்யைநாஞ்ச தத்ஸுதாம் || 66
கல்யாணவேஷாம் தாம் தேவ்யோ கஜநாயிக ஸம்க்ஞிகாம் |
அலஞ்சக்ருஸ்ததஸ்தாஸ்தாம் திவ்யாம்பரவிபூஷணை: || 67
ததோ விதாத்ரா நிர்திஷ்ட: ஸமயோயமிதித்விஜா: |
கல்யாணய நிசம்யைதத் இந்த்ரோ விஷ்ண்வாதிபிஸ்ஸஹ || 68
ஸுப்ரம்மண்யஸ்ய பவனம் கத்வா தேவம் ப்ரணம்யஸ: |
ஆகச்ச தேவதேவச கல்யாணய க்ருஹம் மம || 69
ஸமயோऽயம் ஸமீசீந: த்ராயஸ்வைநான் க்ருபாநிதே |
இத்யுக்தவந்தம் தம் ப்ரேக்ஷ்ய பரமாத்மா குஹஸ்ததா || 70
விஹஸ்ய கிஞ்சித் ஸந்தோஷாத் அவருஹ்யாஸநாத்ஸ்வகாத் |
ஆருஹ்ய பர்ஹிணம் ரம்யம் நாநாலங்காரமந்தரம் || 71
நவாதிகைர்மஹாவீரை: லக்ஷபர்யந்தகாமிபி: | க்ருதாத்ம பாவநஸ்தோத்ரை: தேவைரஞ்சலிபாணிபி: ||

களுடனும் சுற்றிலும் மிக அழகிய ஸ்திரீகளுடனும் மஹாபலிஷ்டர்களாய் கிளம்பி (62) ஓ முனிவர்களே! திருப்பரங்குன்றத்தின் வெளிப்புறங்களிலுள்ள பிரதேசங்களிலுள்ள பூந்தோட்டங்களிலும் மரத்தோப்புகளிலும் ஆறுகளிலும் தண்ணீர் பந்தல்களிலும் மண்டபங்களிலும் வெகு சந்தோஷத்துடன் நெருக்கமாக தனது ஜாகையை அமைத்துக்கொண்டார்கள். முசுகுந்தன் முதலிய அரசர்களும் தேவர்களும் ரிஷிகளும் அப்பொழுது (63-64) இந்திரனுடைய மாளிகையை வேகமாய் அடைந்து அவனைப்பார்த்து ஒருவருக்கொருவர் உபசாரம் செய்து கொண்டவர்களாகவும் குசலபிரச்னம் செய்து கொண்டவர்களாகவும் ஆனார்கள். (65) அங்கு வந்தவர்களான சிறந்த ராஜ ஸ்திரீகளும் சிறந்த தேவ ஸ்திரீகளும் இந்திராணியின் சமீபம் சென்று இவளையும் இவளது பெண்ணான தேவஸேனையையும் நமஸ்கரித்து (66) கல்யாண வேஷத்துடன் கூடிய கஜநாயிகை என்னும் பெயருள்ள தேவஸேனையை அந்த திவ்ய ஸ்திரீகள் திவ்யமான ஆபரணம் வஸ்திரம் இவைகளால் அலங்காரம் செய்தார்கள். (67) ஓ த்விஜர்களே! பிரம்மதேவனால் கல்யாணத்திற்காக குறிப்பிடப்பட்ட காலம் இது என்று இந்திரன் தெரிந்துகொண்டு விஷ்ணு முதலியவர்களுடன் கூடிய (68) ஸ்ரீ ஷண்முகனது கிருஹத்துக்கு சென்று அந்த இந்திரன் தேவனை ஸ்ரீ முருகனை நமஸ்கரித்து ஓ தேவர்களுக்கெல்லாம் ஈசனே விவாஹம் செய்துகொள்ள என் கிருஹத்துக்கு தாங்கள் வரவேண்டும். (69) ஓ கருணைக்கடலே இந்த முஹூர்த்தமானது மிகச் சிறந்தது. இந்த எங்களை காக்க வேண்டும். இவ்வாறு சொல்லிய இந்திரனை பார்த்து பரமாத்மாவான குஹன் அப்பொழுது (70) சந்தோஷத்தால் சிறிது மந்தஹாஸம் செய்து தனது ஆஸனத்திலிருந்து கீழே இறங்கி பல அலங்காரங்களால் நிரம்பிய அழகான மயில்மீது ஏறிகொண்டு (71) இலக்ஷத்து ஒன்பது மஹா வீரர்களுடனும்

विकीर्यत्पुष्पवर्षाभ्यां भक्ताभ्यां परया मुदा । अजनारायणाभ्यांच प्रतस्थे सहसा द्विजाः ॥ ७३
तदानीं चन्द्रसूर्यौच छत्रे दधतुरुज्वले । चामरव्यजनाभ्यांच वायुप्राचेतसावुभौ ॥ ७४
कालोऽपि भीषणं खड्गमादाय निरगात्तदा । वेदघोषोऽभवच्छ्राव्यो वाद्यानांच महारवाः ॥ ७५
ऋषयश्च तदा स्तोत्रैरस्तुवन् स्तुत्यमव्ययम् । कुक्कुटोऽपि तदारावान् अकरोद्भीषणं भृशम् ॥ ७६
जगुर्गानानि रम्याणि किन्नराः कळवाङ्मयाः । ऊर्वशी मेनका रम्भा ननृतुर्गानतत्पराः ॥ ७७
पूर्णकुम्भान् समादाय ऋषयोऽग्रे समागताः । एवं नानोपचारेण वीथीरुल्लंघ्य षण्मुखः ॥ ७८
मरुत्वतो गृहद्वारवीथीमापामरैस्सह । तदा सरस्वतीलक्ष्मीमुखा देववरस्त्रियः ॥ ७९
नीराजनक्रियांचक्रुरष्टमङ्गळकान्यपि । प्रदक्षिणत्रयं कृत्वा विविशुर्भवनान्तरम् ॥ ८०
ततस्तुभगवान् देवो मयूरादवरुह्य सः । कल्याणशालानिकटमाप मङ्गळसंरवैः ॥ ८१
तदा समागता देवी शक्रस्य परया मुदा । अप्सरोभिर्गुहं नत्वा (गत्वा) क्षीरैः पादावपूजयत् ॥ ८२

விகீர்யத்புஷ்பவர்ஷாப்யாம் பக்தாப்யாம் பரயாமுதா ।
அஜநாராயணாப்யாஞ்ச ப்ரதஸ்தே ஸஹஸா த்விஜா: ॥ 73
ததாநீம் சந்த்ர ஸூர்யௌச சத்ரே தததுருஜ்வலே ।
சாமரவ்யஜநாப்யாஞ்ச வாயுப்ராசேதஸாவுபௌ ॥ 74
காலோபி பீஷணம் கட்கம் ஆதாய நிரகாத்ததா ।
வேத கோஷோபவச்ச்ராவ்ய: வாத்யாநாஞ்ச மஹாரவா: ॥ 75
ரிஷய:ச ததா ஸ்தோத்ரை: அஸ்துவன் ஸ்துத்ய மவ்யயம் ।
குக்குடோபி ததாராவான் அகரோத்பீஷணம் ப்ருசம் ॥ 76
ஜகுர்காநாநிரம்யாணி கின்னரா: களவாங்மயா: । ஊர்வசீ மேநகா ரம்பா நந்ருதுர்கானதத்பரா: ॥ 77
பூர்ணகும்பான் ஸமாதாய ரிஷயோக்ரே ஸமாகதா: ।
ஏவம் நாநோபசாரேண வீதீருல்லங்க்ய ஷண்முகா: ॥ 78
மருத்வதோ க்ருஹத்வாரவீதிமாபாமரை:ஸஹ । ததா ஸரஸ்வதீலக்ஷ்மீ முகா தேவ வரஸ்த்ரிய: ॥ 79
நீராஜநக்ரியாஞ்சக்ரு: அஷ்டமங்களகான்யபி । ப்ரதக்ஷிணத்ரயம் க்ருத்வா விவிசுர்பவநாந்தரம் ॥ 80
ததஸ்து பகவான் தேவோ மயூராதவருஹ்யஸ: । கல்யாண சாலா நிகடம் ஆப மங்கள ஸம்ரவை: ॥ 81
ததா ஸமாகதாதேவீ சக்ரஸ்ய பரயா முதா । அப்ஸரோபிர்குஹம்நத்வா க்ஷீரை:பாதாவபூஜயத் ॥ 82

கைகளை அஞ்சலி செய்துகொண்டவர்களும் தங்களை பரிசுத்தமாகச் செய்யும் ஸ்தோத்திரங்களை செய்கின்றவர்களுமான தேவர்களுடனும் (72) மிகுந்த சந்தோஷத்துடன் புஷ்ப வருஷங்களை செய்கின்றவர்களும் சிறந்த பக்தியுள்ளவர்களுமான பிரம்மா நாராயணன் இவர்களுடன் வேகமாக புறப்பட்டார். (73) அப்பொழுது சந்திர சூரியர்கள் பிரகாசிக்கின்ற குடைகளை பிடித்தனர். வாயுவும் வருணனும் சாமரத்தையும் விசிறியையும் பிடித்து சென்றனர். (74) அப்பொழுது காலனும் பயங்கரமான கத்தியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். காதுக்கு இனிமையான வேத ஒலியும் உண்டாயிற்று. வாத்யங்களுடைய பெரும் ஒலிகளும் உண்டாயின. (75) முனிவர்களும் துதிக்கத்தகுந்த ஸ்ரீ முருகனை ஸ்தோத்திரம் செய்தனர். அப்பொழுது கோழியும் பெரும் ஒலிகளை பயங்கரமாய் கூவியது. (76) இனிமையான சப்தங்களை உடைய கின்னரர்கள் பாடினார்கள். ஊர்வசி மேனகை ரம்பை இவர்கள் பாடிக் கொண்டே நர்த்தனம் செய்தனர். (77) முனிவர்களும் பூர்ண கும்பங்களை எடுத்துக்கொண்டு எதிரில் வந்தனர். ஸ்ரீ ஷண்முகன் இவ்வாறு பல உபசாரங்களுடன் ராஜவீதிகளை தாண்டிக்கொண்டு (78) இந்திரனது மாளிகை த்வாரத்துக்கு செல்லும் வீதியை தேவர்களுடன் கூட அடைந்தார். அப்பொழுது ஸரஸ்வதி லக்ஷ்மி முதலிய சிறந்த தேவ ஸ்திரீகள் (79) ஆரார்த்தி சுற்றினார்கள். அஷ்ட மங்கள கீதமும் பாடினார்கள். பின்பு மூன்று பிரதக்ஷிணம் செய்து வீட்டிற்குள் சென்றனர். (80) பிறகு பகவானை அந்த ஸ்ரீ முருகக் கடவுள் மயில் வாகனத்திலிருந்து இறங்கி கல்யாண மண்டபத்துக்கு சமீபத்தை மங்கள வாத்தியங்களுடன் வந்து அடைந்தார். (81) அப்பொழுது இந்திரன் மனைவியான இந்திராணி அப்ஸர ஸ்திரீகளுடன் வந்து ஸ்ரீ குஹப்பெருமானை நமஸ்கரித்து பாலால் கால்களை

आनर्चपुष्पैर्दिव्यैस्सा कृत्वा दीपावलिं पुनः । प्रदक्षिणप्रणामानि कृत्वा भवनमाप सा ॥ ८३
सुवर्णपादुके रम्ये नानारत्नविचित्रिते । धृत्वा गुहश्शनैर्देवो ययौ कल्याणमण्टपम् ॥ ८४
समारुरोह तत्रस्थं दिव्यं सिंहासनं पुनः । विष्ण्वादिदेवाः स्कन्दस्य नियोगात् स्वासनानिते ॥ ८५
भेजिरे मुचुकुन्दाद्याः प्रणम्याञ्जलिपाणयः । वीरबाहुमुखा वीरा विदधुर्गुह सत्क्रियाम् ॥
एवं नानोपचारेण पूज्यमानस्सुरेश्वरः ॥ ८६

अथ निरगमदीशस्स्यन्दनं व्योमयानं कनकमणिविचित्रं सार्धमद्रीन्द्रपुत्र्या ।
वियतिपरिविशुद्धे वाद्यघोषैरनेकैर्जितघनघनरावैरास्थितो द्रष्टुमेतत् ॥ ८७

इति श्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
देवकाण्डे प्रथमोऽध्यायः ॥

ஆநர்சபுஷ்பைர்திவ்யைஸ்ஸா க்ருத்வா தீபாவளிம்புந: । ப்ரதக்ஷிண ப்ரணாமாநி க்ருத்வா பவநமாபஸா ॥

ஸுவர்ணபாதுகே ரம்யே நாநாரத்னவிசித்ரிதே ।
த்ருத்வா குஹ:சநைர்தேவோ யயௌ கல்யாணமண்டபம் ॥ 84

ஸமாருரோஹ தத்ரஸ்தம் திவ்யம் ஸிம்ஹாஸநம்புந: ।
விஷ்ண்வாதிதேவா: ஸ்கந்தஸ்ய நியோகாத் ஸ்வாஸநாநிதே ॥ 85

பேஜிரே முசுகுந்தாத்யா: ப்ரணம்யாஞ்சலிபாணய: । விரபாஹுமுகாவீரா: விததுர்குஹஸத்க்ரியாம் ॥
ஏவம்நாநோபசாரேண பூஜ்யமாந: ஸுரேச்வர: ॥ 86

அத நிரகமதீச:ஸ்யந்தனம் வ்யோமயாநம் கனகமணிவிசித்ரம் ஸார்தமத்ரீந்த்ரபுத்ரியா ।
வியதிபரிவிசுத்தே வாத்யகோஷைரநேகை:ஜிதகநகநராவை: ஆஸ்திதோ த்ரஷ்டுமேதத் ॥ 87

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்காஸம்ஹிதாயாம் சிவரஹயகண்டே
தேவகாண்டே ப்ரமோத்யாய: ॥

அலம்பினாள். (82) அவள் திவ்ய புஷ்பங்களால் பாதங்களை அர்ச்சித்தாள். மறுபடியும் தீபஹாராத்தியை செய்து பிரதக்ஷிணம் நமஸ்காரம் செய்து வீட்டிற்குள் வந்தாள். (83) பல ரத்னங்கள் புதைக்கப்பட்டதும் அழகுவாய்ந்ததுமான தங்க பாதுகைகளை தரித்துக்கொண்டு தேவனான ஸ்ரீ குஹன் கல்யாண மண்டபத்திற்கு மெள்ள மெள்ளச் சென்றார். (84) மறுபடி அங்குள்ள திவ்ய சிம்மாஸனத்தின்மீது ஏறினார். விஷ்ணு முதலிய தேவர்கள் ஸ்கந்தனது உத்திரவினால் ஆஸனங்களில் அமர்ந்தனர். (85) முசுகுந்தன் முதலிய அரசர்களும் வீரபாஹு முதலிய தேவர்களும் கை கூப்பிக்கொண்டு ஸ்ரீ முருகனுக்கு உபசாரங்களை செய்தார்கள். இவ்வாறு பல உபசாரங்களால் ஸ்ரீ முருகன் பூஜிக்கப்படும் சமயத்தில் (86) பிறகு பரமேச்வரன் பர்வதராஜனின் புத்திரியான பார்வதியுடன் கூட இந்த மஹோத்ஸவத்தை பார்ப்பதற்காக தங்கம் மணி இவற்றால் சித்தரிக்கப்பட்டதுமான ஆகாய மார்க்கத்தில் செல்லக்கூடிய தேரில் ஏறி மேக கர்ஜனைகளை தோற்கடிக்கும் அனேக வாத்ய கோஷங்கள் முழங்க வந்து சேர்ந்தார். (87)

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ द्वितीयोऽध्यायः ॥

श्रीस्कन्द देवसेना परिणयः ॥

तत्र दृष्ट्वा महादेवं समुत्थाय गुहादयः । प्रणम्य परया भक्त्या तुष्टुवुर्बद्धपाणयः ॥ १
अवरुह्य विमानात् स्वात् निरगादंबया शिवः । तौ गुहः पुरतो गत्वा पार्वतीपरमेश्वरौ ॥ २
प्रणम्य पादयोर्मूर्ध्ना तुष्टाव विनयेन सः । समालिंग्य गुहं शंभुस्समाघ्रायाशु तच्छिरः ॥ ३
तृप्तिं नाप तदाऽत्यन्तं पुनः पुनरहो द्विजाः । विष्णुब्रह्मादयो देवा नत्वा देवं त्रियंबकम् ॥ ४
अस्तुवन् विविधैस्स्तोत्रैर्बद्धांजलिपुटास्तदा । कृपया तान् विलोक्येशः प्राप कल्याणमण्टपम् ॥ ५
अनुसृत्य सुरास्सर्वे परमेशं तदागताः । तत्र सिंहासनं दिव्यमागतं तच्छिवाज्ञया ॥ ६
अलंचकार तद्देवः परमानन्दविग्रहः । सुब्रह्मण्यं महादेवः स्वाङ्कमारोपयत्तदा ॥ ७
प्रणेमुरंबिकानाथं ससुतं सकलास्सुराः । त्वदाज्ञया गुहः स्वामी हत्वा दैत्यान् सुरद्रुहः ॥ ८
मोचयित्वाऽमरान् बद्धानागतोऽत्र पराचले । प्रीतये षण्मुखस्यायं मरुत्वान् स्वसुतामिह ॥ ९

॥ அத த்விதீயோऽத்யாய: ॥

ஸ்ரீ ஸ்கந்தனுக்கும் தேவஸேனைக்கும் விவாஹம்.

தத்ரத்ருஷ்ட்வா மஹாதேவம் ஸமுத்தாய குஹாதய: ।
ப்ரணம்ய பரயா பக்த்யா துஷ்டுவுர்பத்தபாணய: ॥ 1
அவருஹ்ய விமாநாத் ஸ்வாத் நிரகாதம்பயா சிவ: ।
தௌ குஹ: புரதோ கத்வா பார்வதீபரமேச்வரௌ ॥ 2
ப்ரணம்ய பாதயோர்மூர்த்நா துஷ்டாவ விநயேநஸ: ।
ஸமாலிங்க்ய குஹம் சம்பு: ஸமாக்ராயாசு தச்சிர: ॥ 3
த்ருப்திம் நாப ததாத்யந்தம் புந:புநரஹோ த்விஜா: ।
விஷ்ணுப்ரம்மாதயோ தேவா நத்வா தேவம் த்ரியம்பகம் ॥ 4
அஸ்துவன் விவிதைஸ்தோத்ரை: பத்தாஞ்சலிபுடாஸ்ததா ।
க்ருபயா தான் விலோக்யேச: ப்ராப கல்யாண மண்டபம் ॥ 5
அநுஸ்ருத்ய ஸுராஸ்ஸர்வே பரமேசம் ததா கதா: ।
தத்ர ஸிம்ஹாஸநம் திவ்யம் ஆகதம் தச்சிவாக்ஞயா ॥ 6
அலஞ்சகார தத்தேவ: பரமாநந்தவிக்ரஹ: ।
ஸுப்ரம்ஹண்யம் மஹாதேவ: ஸ்வாங்கமாரோபயத்ததா ॥ 7
ப்ரணேமுரம்பிகாநாதம் ஸஸுதம் ஸகலா:ஸுரா: ।
த்வதாக்ஞயா குஹ: ஸ்வாமீ ஹத்வா தைத்யான் ஸுரத்ருஹ: ॥ 8
மோசயித்வாऽமரான் பத்தான் ஆகதோத்ர பராசலே ।
ப்ரீதயே ஷண்முகஸ்யாயம் மருத்வான் ஸ்வஸுதாமிஹ ॥ 9

இரண்டாவது அத்தியாயம்.

அங்கு மஹாதேவனைக் கண்டு குஹன் முதலியவர்கள் அஞ்சலி செய்துகொண்டு மிக பக்தியுடன் வணங்கி துதி செய்தார்கள். (1) தனது விமானத்திலிருந்து சிவன் அம்பிகையோடு இறங்கி வந்தார். அந்த பார்வதீ பரமேச்வரர்களை குஹன் முன் சென்று (2) கால்களில் தலையால் வணங்கி மிக வணக்கத்துடன் துதித்தார். ஓ முனிவர்களே! அந்த பரமேச்வரன் முருகனை நன்கு ஆலிங்கனம் செய்துகொண்டு திரும்ப திரும்ப தலையை முத்தமிட்டு திருப்தியை அடையவில்லை. விஷ்ணு ப்ரம்மா முதலிய தேவர்கள் முக்கண்ணனான மஹாதேவனை வணங்கி (3-4) அஞ்சலி செய்துகொண்டு பற்பல ஸ்தோத்திரங்களால் துதித்தனர். ஈசுவரன் அவர்களை கருணையுடன் பார்த்து கல்யாண மண்டபத்திற்கு வந்தார். (5) தேவர்கள் எல்லாம் பரமேச்வரனை தொடர்ந்து சென்றனர்கள். அப்பொழுது சிவனின் உத்திரவினால் அவருடைய ஸிம்மாஸனம் அங்கு வந்தது. (6) பரமானந்த ரூபியான பரமேச்வரன் அமர்ந்து தன் மடிமீது ஸுப்ரமண்யனை உட்கார வைத்துக்கொண்டார். (7) எல்லா தேவர்களும் புத்ரனோடுகூடிய பார்வதீநாதனை நமஸ்கரித்தார்கள். ஓ ப்ரபோ தங்கள் கட்டளையால் ஸ்வாமியான முருகன் தேவ சத்ருக்களான அசுரர்களையெல்லாம் ஸம்ஹரித்து (8) சிறையில் கட்டுண்ட தேவர்களை

पाणिं ग्राहयति स्वस्य कुलस्योद्भूतये प्रभो । एवं प्रणम्य देवेशं ब्रह्मा वृत्तान्तमुक्तवान् ॥ १०
तदंगीकृत्य शिरसश्चालनेन महेश्वरः । द्रष्टुमभ्यागतोऽत्राहं कल्याणमिति चावदत् ॥ ११
पुरन्दरं तदा विष्णुरानयात्र सुतां तव । कल्याणवेषां परमां जगादैवं द्विजोत्तमाः ॥ १२
गत्वाऽमरेश्वरश्शीघ्रादानिनायात्मजां तदा । कल्याणमण्टपे लक्ष्मीवाणिभ्यां सहसुन्दरीम् ॥ १३
समुत्थाय ततो देवाः प्रणेमुस्तां वराङ्गनाम् । पार्वतीपरमेशानौ श्वशुरौ प्रणनाम सा ॥ १४
अवलोक्य तदा लज्जामाप षण्मुखमग्रतः । तदानीं पार्वतीनाथः कृपां चक्रेऽवलोकयताम् ॥ १५
करेणामृश्य तामेनां गौरी सञ्चुम्ब्य गण्डयोः । कृपया वीक्ष्य देवेशी जगतां जननी स्नुषाम् ॥ १६
स्वपुत्रं चासने सैंहे स्थापयित्वा गता स्वयम् । एकासनस्थितावेतौ देवसेनागुहावुभौ ॥ १७
वीक्ष्य सर्वे सुरा नत्वा सन्तोषं प्रापिरे तदा । चकार षण्मुखस्याथ पादप्रक्षाळनं शुचिः ॥ १८
शचीपाणिस्थभृंगारजलैरिन्द्रो विनिर्गतैः । अभ्यर्च्य चन्दनैः पुष्पैर्धूपदीपादिभिस्तथा ॥ १९

பாணிம் க்ராஹயதி ஸ்வஸ்ய குலஸ்யோத்பூதயே ப்ரபோ |
ஏவம் ப்ரணம்ய தேவேசம் ப்ரம்மா வ்ருத்தாந்தமுக்தவான் || 10
ததங்கீக்ருத்ய சிரஸ: சாலனேன மஹேச்வர: | த்ரஷ்டுமப்யாகதோத்ராஹம் கல்யாணமிதி சாவதத் || 11
புரந்தரம் ததா விஷ்ணு: ஆநயாத்ர ஸுதாம் தவ |
கல்யாணவேஷாம் பரமாம் ஜகாதைவம் த்விஜோத்தமா: || 12
கத்வாऽமரேச்வர: சீக்ராத் ஆநிநாயாத்மஜாம் ததா |
கல்யாணமண்டபே லக்ஷ்மீவாணிப்யாம் ஸஹஸுந்தரீம் || 13
ஸமுத்தாய ததோ தேவா: ப்ரணேமுஸ்தாம் வராங்கநாம் |
பார்வதீபரமேசாநௌ ச்வசுரௌ ப்ரணநாம ஸா || 14
அவலோக்ய ததா லஜ்ஜாமாப ஷண்முகமக்ரத: |
ததாநீம் பார்வதீநாத: க்ருபாஞ்சக்ரேऽவலோக்ய தாம் || 15
கரேணாம்ருச்ய தாமேநாம் கௌரீ ஸஞ்சும்ப்ய கண்டயோ: |
க்ருபயா வீக்ஷ்ய தேவேசீ ஜகதாம் ஜநநீ ஸ்நுஷாம் || 16
ஸ்வபுத்ரஞ்சாஸனே ஸைம்ஹே ஸ்தாபயித்வா கதா ஸ்வயம் |
ஏகாஸநஸ்திதாவேதௌ தேவஸேநாகுஹாவுபௌ || 17
வீக்ஷ்ய ஸர்வே ஸுரா நத்வா ஸந்தோஷம் ப்ராபிரே ததா |
சகார ஷண்முகஸ்யாத பாதப்ரக்ஷாளநம் சுசி: || 18
சசிபாணிஸ்த ப்ருங்கார ஜலைரிந்த்ரோ விநிர்கதை: |
அப்யர்ச்ய சந்தநை: புஷ்பை: தூப தீபாதிபிஸ்ததா || 19

விடுவித்து திருப்பரம்குன்றத்து வந்துள்ளார். ஆறுமுகனுடைய ப்ரீதிக்காக இந்த இந்திரன் தன் பெண்ணை (9) தனது குலத்தின் அபிவிருத்தியை உத்தேசித்து அவருக்கு இந்த திருப்பரம்குன்றத்தில் பாணிக்ரஹணம் செய்து கொடுக்கிறார் இவ்வாறு பிரம்மதேவன் பரமசிவனை வணங்கி விருத்தாந்தங்களை கூறினார். (10) அதை பரமேச்வரன் தலையை ஆட்டி அங்கீகரித்து இங்கு நான் கல்யாணத்தை பார்பதற்காக வந்தேன் என்று உரைத்தார். (11) ஓ முனிவர்களே! அப்பொழுது மஹாவிஷ்ணுவானவர் இந்திரனைப்பார்த்து உனது சிறந்த குமாரியை கல்யாண வேஷத்தோடு இங்கு அழைத்துவா என கூறினார். (12) அமரேச்வரன் சிக்கிரம் சென்று லக்ஷ்மி ஸரஸ்வதியுடன் கூடிய தனது அழகிய பெண்ணை கல்யாண மண்டபத்திற்கு அழைத்து வந்தான். (13) பிறகு எல்லா தேவர்களும் எழுந்து அந்த சிறந்த பெண்ணை வணங்கினார்கள். அப்பெண்ணும் மாமியார் மாமனார்களான பார்வதீ பரமேச்வரர்களை நமஸ்கரித்தாள் (14) அப்பொழுது முன் இருந்த ஷண்முகனைப்பார்த்து வெட்கமுற்றாள். அப்பொழுது பார்வதீநாதன் அவளைப்பார்த்து கருணை கூர்ந்தார். (15) ஸகல உலகங்களுக்கும் மாதாவான பார்வதீதேவியானவள் நாட்டுப்பெண்ணை தயவுடன் பார்த்து கையினால் தடவிக்கொடுத்து இரு கன்னங்களிலும் முத்தமிட்டாள். (16) பிறகு அவளையும் தன் மைந்தனையும் சிம்மாசனத்தில் உட்காரவைத்து சென்றாள். ஒரே ஆஸனத்தில் அமர்ந்தவர்களான இந்த தேவஸேனை குஹன் இவ்விருவர்களையும் (17) பார்த்து எல்லா தேவர்களும் வணங்கி மிகவும் சந்தோஷமடைந்தனர். அப்பொழுது இந்திரன் பரிசுத்தமாய் இருந்துகொண்டு இந்திராணியின் கையிலுள்ள கிண்டியிலிருந்து வெளிவந்த ஜலத்தினால் முருகனுடைய கால்களை அலம்பினார். சந்தனம் புஷ்பம் தீபங்கள் முதலியவைகளால்

कृतनानोपचारौघः पादोदं पावनं तदा । कुत्रचित् स्थापयामास स्वीकर्तुं तदनंतरम् ॥ २०
जलमादाय हस्तेन गुहस्येयं कुटुंबिनी । इति ब्रुवंस्तदाधारां चकार मघवान् द्विजाः ॥ २१
ततो मंगळ्यसूत्रंच संपाद्य मनसा विधिः । प्रादात् गुहकराब्जे तत् स्वेच्छामंगळहेतवे ॥ २२
बबन्ध देवसेनायाः कण्ठे तद्देवनायकः । सुगन्धिकुसुमस्रग्भिः पुनः कण्ठमभूषयत् ॥ २३
ततः पुरन्दरः पुत्रीजामात्रोस्सुरसायनम् । अमृतं फलमन्यच्च नैवेद्यमकरोत्सुधीः ॥ २४
वाद्यघोषस्तदाऽत्यन्तं बभूव घननादवत् । आशीः प्रयुज्य तत्रस्था स्तुष्टिमापुस्तदा भृशम् ॥ २५
जुहाव समिदन्नाज्याहुतीभिः पावके ततः । प्रदक्षिणार्चिषि विधिर्विधिना ब्राह्मणोत्तमाः ॥ २६
प्रदक्षिणीकृत्य वह्निं तया स्कन्दस्स्वयं प्रभुः । पाणिनाऽऽरोपयामास पत्न्याः पादं तदाऽश्मनि ॥ २७
ददर्शतुस्तदात्वेतौ दंपती तावरुन्धतीम् । ततो महेश्वरं गौरीं पितरौ अगतामुभौ ॥ २
त्रीणिप्रदक्षिणान्यत्र कृत्वा नेमतुरञ्जसा । स्थापयामासतुर्गौरीपरमेशौ निजासने ॥ २
समालिङ्गय स्नुषां पुत्रं कृपादृष्ट्या विलोकयतौ । अथ विष्णुमुखा देवा भद्रसिंहासनस्थितान् ॥ ३

க்ருதநாநோபசாரௌக: பாதோதம் பாவநம் ததா | குத்ரசித் ஸ்தாபயாமாஸ ஸ்வீகர்தும் ததநந்தரம் |
ஜலமாதாய ஹஸ்தேந குஹஸ்யேயம் குடும்பிநீ |
இதி ப்ருவம்ஸ்ததா தாராம் சகார மகவான் த்விஜா: || 21
ததோ மங்கள்ய ஸூத்ரஞ்ச ஸம்பாத்ய மநஸா விதி: |
ப்ராதாத் குஹகராப்ஜே தத் ஸ்வேச்சா மங்களஹேதவே || 22
பபந்த தேவ ஸேநாயா: கண்டே தத்தேவநாயக: | ஸுகந்தி குஸுமஸ்ரக்பி: புந: கண்டமபூஷயத் || 2
தத: புரந்தர: புத்ரீ ஜாமாத்ரோ: ஸுரஸாயநம் | அம்ருதம் பலமன்யச்ச நைவேத்யமகரோத் ஸுதீ: || 2
வாத்யகோஷஸ்ததாத்யந்தம் பபூவ கநநாதவத் |
ஆசீ: ப்ரயுஜ்ய தத்ரஸ்தா ஸ்துஷ்டிமாபுஸ்ததா ப்ருசம் || 25
ஜுஹாவ ஸமிதன்னாஜ்யா ஹுதீபி: பாவகே தத: | ப்ரதக்ஷிணார்சிஷி விதிர்விதிநா ப்ராம்மணோத்தமா:
ப்ரதக்ஷிணீக்ருத்ய வன்ஹிம் தயா ஸ்கந்த: ஸ்வயம் ப்ரபு: |
பாணிநாSSரோபயாமாஸ பத்னியா: பாதம் ததாSச்மநி || 27
ததர்சதுஸ்ததா த்வேதௌ தம்பதீ தாவருந்ததீம் | ததோ மஹேச்வரம் கௌரீம் பிதரௌ ஜகதாமுபௌ
த்ரீணி ப்ரதக்ஷிணாந்யத்ர க்ருத்வா நேமதுரஞ்ஜஸா | ஸ்தாபயாமாஸதுர் கௌரீ பரமேசௌ நிஜாஸநே || 2
ஸமாலிங்க்ய ஸ்நுஷாம் புத்ரம் க்ருபாத்ருஷ்ட்யா விலோக்யதௌ |
அத விஷ்ணுமுகா தேவா பத்ரஸிம்ஹாஸநஸ்திதான் || 30

பூஜித்து (19) பல உபசாரங்களைசெய்து பரிசுத்தமான அந்த பாத ஜலத்தை பின் உபயோகப்படுத்தி கொள்வதற்காக ஓரிடத்தில் ஜாக்கிறதையாய் வைத்து (20) ஓ முனிவர்களே! இந்திரன் ஜலத்தை கையில் எடுத்துக்கொண்டு 'இவள் முருகேசன் தர்மபத்தினி' எனகூறி தாரைவார்த்தான். (21) பிற பிரம்மதேவன் மனதினுல் மங்கள சூத்திரத்தை தயாரித்து தான் கோரிய மங்கள காரியத்தை நிறைவேற் வதற்காக அதை குமரேசனது தாமரைபோன்ற கையில் கொடுத்தார். (22) தேவநாயகரான ஸ்ரீ சுப் மணியர் அந்த மங்கள ஸூத்ரத்தை தேவஸேனையின் கழுத்தில் கட்டி மறுபடி வாசனையுள்ள புஷ் மாலைகளால் அவள் கழுத்தை அலங்கரித்தார். (23) பிறகு புத்திசாலியான இந்திரன் சுவை மிகு மேன்மையான அமிருதம் பழம் மற்றுமுள்ளவற்றை பெண் மாப்பிள்ளைகளுக்கு நைவேத்யம அளித்தான். (24) அப்பொழுது மேக கர்ஜனைபோன்ற மிகுந்த வாத்ய கோஷமுண்டாயிற்று. அங்கிரு பெரியோர்களெல்லாம் ஆசிர்வாதம் செய்து மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். (25) ஓ முனிவர்களே பிறகு பிரம்மதேவன் பிரதக்ஷிணமாய் ஜ்வலிக்கின்ற அக்னியில் ஸமித்து அன்னம் நெய் இவைகை விதிப்படி ஹோமம் செய்தார். (26) பிறகு பிரபுவாகிய ஸ்ரீ ஸ்கந்தன் அக்னியை ப்ரதக்ஷிணம் செய் தான் கையினுல் மனைவியினுடைய பாதத்தை பிடித்து அம்மியில் ஏற்றி வைத்தார். (27) தம்பதி இருவரும் அருந்ததியை தரிசித்துவிட்டு பிறகு ஸகல உலகங்களுக்கும் பெற்றோர்களான ஸ்ரீ பார்வ பரமேச்வரர்களை (28) மூன்று பிரதக்ஷிணங்கள் செய்து சீக்கிரம் நமஸ்கரித்தார்கள். உடனே கெ சங்கரர்கள் அவ்விருவர்களையும் கிருபாகடாக்ஷத்தினுல் பார்த்து ஆரிதமாய் கட்டி அணைத்து தன புத்ரனையும் மருமகளையும் தனது ஆஸனத்தில் அமர்த்திக்கொண்டார்கள். (29) பிறகு விஷ் முதலிய தேவர்கள் மங்களமான சிம்மாஸனத்தில் அமர்ந்திருந்தவர்களும் கண்களுக்கு ப்ரியமான

प्रणम्य तुष्टुवुर्भक्त्या दृष्ट्वा तान् लोचनप्रियान् । अंतर्दधतुरंबेशौ तदानीमेव भूसुराः ॥ ३१
आश्चर्येण ततो देवाः स्तोत्रं चक्रुरुमेशयोः । तदार्जी भार्यया साकं स्वालयं प्राप षण्मुखः ॥ ३२
शृण्वन्मङ्गळवाद्यानि स्तोत्राणि विविधान्यपि । द्वारि स्थित्वासुरान् सर्वान् प्रेषयित्वा गृहान्प्रति ॥ ३३
द्वारपालान् गृहद्वारि कल्पयित्वा तदा प्रभुः । विवेशान्तःपुरं रम्यं भार्यादत्तकरो द्विजाः ॥ ३४
देवसेनागुहौ तत्र तस्थतुः परया मुदा । मुचुकुन्दमुखान् भूपान् देवानन्यानृषीश्वरान् ॥ ३५
यथायोग्यं सुपूज्यांस्तान् पूजयित्वा पुरन्दरः । वासोभिर्भूषणैर्दिव्यैः कल्पवृक्षसमुद्भवैः ॥ ३६
त्रासदोषविनिर्मुक्तैर्मणिभिर्हारकङ्कणैः । तोषयित्वा यथान्यायं प्रेषयामास तान् द्विजाः ॥ ३७
शच्या सह तदा सोऽयं स्वगृहे न्यवसन्मुदा । स्थित्वाऽत्र कतिचित्कालं सुब्रह्मण्यस्स्त्रियासह ॥ ३८
